Registered as a News Paper in Sri lanka

தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 22 வெள்ளிக்கிழமை (07.08.2015) பக்கங்கள் 20 ஓசை – 310




# யுத்தகால உயிரிழப்புக்களை போர்க்குற்றமாக ஏற்கோம்

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தின்போது ஏற்பட்ட உயிரிழப்புகள் யுத்தக் குற்றம் அல்லவென்றும், அவ்வாறு பார்த்தால் யுத்தம் செய்ய முடியாதெனவும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வெளிவரவுள்ள ஐ.நா.வின் விசாரணை அறிக்கை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே ராஜித இவ்வாறு பதிலளித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாருமே இறக்காவிட்டால், எல்லோரும் யுத்தம் செய்வார்கள், அதனால் யுத்தத்தின் போது ஏற்பட்ட உயிரிழப்புக்கள் யுத்தக்குற்றம் அல்ல என்பதே அரசாங்கத்தினதும் எமதும் முடிவாகும்.

அதனைத்தவிர, வெள்ளைக்கொடியுடன் வந்தவர்களை கொன்றமை, பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி கொலைசெய்



19 ஆம் பக்கம் பார்க்க

## புதிய அரசு உருவாகினாலும் வலியுறுத்தப்படும் சர்வதேச விசாரணை

### சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேர்தலுக்கு பின்னர் எந்த அரசு உருவாகினாலும் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது, எந்த அரசாங்கம் மத்தியில் ஆட்சி அமைத்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளக விசாரணைக்கா சர்வதேச விசாரணைக்கா உந்துதலை கொடுக்கும்

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரகீத்தை கடத்திச் சென்ற புலனாய்வாளர்கள் கைது




(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவைக் கடத்திச் சென்றஇராணுவப் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர்களான இரு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக, தகவல்கள் தெரிவிக்கின்றன.


நம்பகமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிறிலங்கா மிரர் ஊடகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

2012 ஜனவரி மாதம், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்திச் செல்லப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டார்.

அவரைக் கடத்திச் சென்று மின்னேரியா இராணுவ முகா

19 ஆம் பக்கம் பார்க்க

## மாணவனைக் காணவில்லை



(வவுனியா)

வவுனியா ஓமந்தை அரசமுறிப்பு பகுதியில் வசித்து வந்த செல்வகுமார் செல்வருபன் என்ற 15வயதுடைய பாடசாலை மாணவனைக் கடந்த மாதம் 06 ஆம் திகதி முதல் காணவில்லை என தாயின் சகோதரி 09.07.2015 அன்று ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## வன்முறைக்கு வழிவகுக்கும் இனவாத தேர்தல் பிரசாரம்

### வெள்ளி கருத்துக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

இன மத அடிப்படையிலான வன்முறைகளைத் தூண்டும் தேர்தல பிரசாரம் முழு நாட்டையும் பாதிக்க கூடும் என வெள்ளி கருத்துக்களம் எச்சரிக்கை செய்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க






## கூட்டமைப்பின் சமஷ்டி மகிந்தவிற்கே பலன்

### என்கிறார் சம்பிக்க

(கொழும்பு)

கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமான சமஷ்டி கோரிக்கை மகிந்தவிற்கே அதிகளவில் பலனைத்தருமென அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பிலியந்தலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சமஷ்டி கோரிக்கையினை மகிந்த ராஜபக்ஸவின் ஆதரவாளர்கள் அதிகளவில் குற்றம்சாட்டுவதற்கு பயன்படுத்துகின்றனர்.

நாட்டை பிளவுபடுத்தும் யோசனைகளை மகிந்தவின் அதிகம் நெருக்கமானவரான ஜீ.எல்.பீரிஸ் முன்வைத்தார். அந்தத் திட்டத்தை ஜாதிக ஹெல உறுமய கட்சியே அன்று தோற்கடித்தது. இனி அத்தகைய அச்சுறுத்தல்களை எதிர நோக்க வேண்டிய அவசியம் இல்லை.

19 ஆம் பக்கம் பார்க்க

# அபிவிருத்திப் பணிகள் தொடர அரசியல் பலம் அவசியம்

## ஈ.பி.டி.பி. பிரசாரச் செயலாளர் தெரிவிப்பு



(ஆனைக்கோட்டை)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு மக்கள் அரசியல் பலம் தருவார்களேயானால் நாம் மேலும் பல அபிவிருத்திகளை முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரசார செயலாளர் விந்தன் தெரிவித்துள்ளார்.

ஆனைக்கோட்டையில் நேற்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரால் நடாத்தப்பட்ட மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏ-9 பாதை மூடப்பட்டிருந்த காலப்பகுதியில் குடாநாட்டு மக்களுக்கு உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் கூட மக்கள் பல்வேறுபட்ட இடர்பாடுகளை எதிர்கொண டிருந்தனர்.

அந்த நேரங்களிலெல்லாம் அரசுடனான நல்லுறவைப் பயன்படுத்தி அவர்களுடன் கலந்துரையாடி எமது மக்களுக்கான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுத்தவர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே என்றும் சுட்டிக்காட்டினார்.

அந்தவகையில் தான் தமிழ் மக்களுக்கான உதவிகளும் அபிவிருத்தியும் முன்னெடுக்கப்பட வேண்டுமாயின் தமிழ் மக்களுக்கு சரியான அரசியல் தலைமை கிடைக்க வேண்டியது அவசியமானது.

அதனை சரியான முறையில் முன்னெடுக்கக் கூடியவர்கள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரே தவிர வேறொருவரினாலும் சாத்தியப்படுத்த முடியாது என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில் கடந்த காலங்களில் எமது மக்கள் முழுமையான அரசியல் பலத்தை எமக்கு தந்திருப்பார்களேயானால் நிச்சயம் நாம் மக்களின் தேவைப்பாடுகளையும் அபிவிருத்திகளையும் மேலும் நிறைவேற்றியிருப்போம்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உணர்ச்சிப் பேச்சுக்களையும் பசப்பு வார்த்தைகளையும் நம்பி எமது மக்கள் வாக்களித்ததன் பயனாக அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று தமிழ் மக்கள்சார்பில் அதிகளவு ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட போதிலும் எமது மக்களின் நலன்சார்ந்த விடயங்களில் அக்கறை செலுத்தவில்லையென்றும் சுட்டிக்காட்டினார்.

எனவே, நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் முழுமையான ஆதரவை வழங்கி அரசியல் பலத்தை எமக்கு தரும்பட்சத்தில் நிச்சயம் எம்மால் மக்கள் எதிர்கொள்ளும் நாளாந்த பிரச்சினைகள், அபிவிருத்திகள், அரசியல் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் இரா.செல்வவடிவேல உரைநிகழ்த்தியதை அடுத்து கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும்போது நாம் எமக்குக் கிடைக்கப் பெற்ற மூன்று நாடாளுமன்ற உறுப்புரிமையை பெற்றுக் கொண்டு பல்வேறுபட்ட மக்கள் நலன்சார்ந்த செயற்றிட்டங்களை செயற்படுத்திக் காட்டியுள்ளோம்.

ஆனால், அதிகளவான நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட கூட்டமைப்பினர் எவ்விதமான மக்கள் நலன்சார்ந்த திட்டங்களையும் முன்னெடுக்கவில்லையென்பதுடன் அதற்கான ஆற்றலும் அக்கறையும் அவர்களிடம் இல்லையென்றும் சுட்டிக்காட்டினார்.

இதேபோன்றதொரு மக்கள் சந்திப்பு ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்

(வடமராட்சி ஈ.பி.டி.பி. இணைப்பாளர்)




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# கஜேந்திரகுமார் நீதிமன்றில் ஆஜர்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாவகச்சேரி நீதிமன்ற அழைப்பாணைக்கு அமைவாக நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜரானார்.

கடந்த மாதம் 31ஆம் திகதியன்று சாவகச்சேரிப் பகுதிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் பிரசாரத்திற்கு 25 பேர் கொண்ட குழு சென்ற வேளை அவர்களில் சிலரை பொலிஸார் கைதுசெய்து தடுத்து விசாரணை செய்திருந்தனர்.

தேர்தல் விதிமுறைகளை மீறினர் என சாவகச்சேரி பொலிஸார் கட்சித் தலைர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு நீதிமன்ற அழைப்பாணை விடுத்திருந்தனர். அதேவேளை பிரசாரக் குழுவுடன் சென்ற யாழ். மாவட்ட வேட்பாளர் திருநாவுக்கரசு சிவகுமாரனுக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதற்கு அமைவாக நேற்றுக் காலை 9.00 மணியளவில் இருவரும் நீதிமன்றிற்கு சமுகமளித்தனர். அவ்வழக்கு பதில் நீதவான் கணபதிப்பிள்ளையால் எதிர்வரும் 29ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (11)

# சின்னச் சின்ன செய்திகள்

## காந்தீயம் இதழ் வெளியீடு

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான ''காந்தீயம்'' பத்திரிகையின் யூலை - ஆகஸ்ட் மாதங்களுக்கான இதழ் வெளிவந்துள்ளது.

இவ் இதழின் இலவசப் பிரதியொன்றைப் பெறவிரும்பும் அன்பர்கள் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபால் உறையை ஆசிரியர், "காந்தீயம்" இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைப்பதன் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும என காந்தீயம் ஆசிரியர் எம். சாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார்.

## இறுவட்டு வெளியீடு

(வேலணை)

வேலணை தெற்கு தாழையம்பதி ஸ்ரீசிவசுப்பிரமணிய ஆலய சங்காபிஷேக தீர்த்த உற்சவத்தை உள்ளடக்கிய இறுவட்டு வெளியீடு இன்று மாலை 5.00 மணிக்கு ஆலயத் தலைவர் ப. வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவில் மங்கள விளக்கேற்றல், இறை வணக்கம், வரவேற்புரை, தலைமையுரை, ஆசியுரை, வாழ்த்துரை போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பக்த அடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (21,85)

## விளக்க மறியல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முன்தினம் சரணடைந்த கொலைச் சந்தேக நபரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மாவட்ட நதிவான் மா. கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

நெல்லியடி துன்னாலை குடவத்தையில் கத்திக் குத்துக்கு இலக்காகி, கடந்த நான்கு நாட்களுக்கு முன் ஒருவர் இறந்திருந்தார்.

அவரது வீட்டுக்கு அருகே வீதியில் நின்றிருந்த சமயம் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து இவர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் குறித்து கொலைச சந்தேக நபரின் படத்துடன் பத்திரிகைகளில் செய்திகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன.

இதனை அடுத்து குறித்த சந்தேக நபர் சட்டத் தரணியின் உதவியுடன் நேற்று முன்தினம் பருத்தித்துறை பொலிஸில் சரணடைந்ததை அடுத்தே சந்தேகநபர் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ,18)

## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் கார்த்திகை பெருவிழா

மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவில் ஆடிக் கார்த்திகை பெருவிழா நாளை அதிகாலை 5.00 மணிக்கு உச்சக்கால பூஜையுடன் ஆரம்பமாகி இரவு 9.00 மணிக்கு நிறைவு பெறவுள்ளது.

காலை 7.00 மணிக்கு ஸ்நபனாபிஷேகம் விசேட மேளக் கச்சேரியும் 8.00 மணிக்கு காலை சந்திப் பூஜை மற்றும் விசேட மேளக் கச்சேரியும் 8.30 மணிக்கு கதாப்பிரசங்கம் பஜனை நிகழ்வுகளும் முற்பகல் 10.00 மணிக்கு மெண்டலின் கச்சேரியும் தொடர்ந்து நண்பகல் 12.00 மணிக்கு வீணைக் கச்சேரியும் சண்முக அர்ச்சனையும் இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 1.30 மணிக்கு நிகழ்ச்சிகள் மீண்டும் ஆரம்பமாகி 3.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் அதனைத் தொடர்ந்து கார்த்திகைக்குமரன் வெளி வீதியுலாவரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சியாக மாலை 5 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும் 5.30 மணிக்கு சாயரட்சைப் பூசையும் 6.00 மணிக்கு இரண்டாம் காலப் பூஜையைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை, திருக்குமரன் வெளிவீதியுலாவரும் நிகழ்வும் 9 மணிக்கு அர்த்த சாமப் பூஜை என்பன இடம்பெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

## ஆன்மீக சொற்பொழிபு

(தொண்டைமானாறு).

வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு சைவ நெறி எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்டு வரும் வாராந்த ஆன்மீக நிகழ்ச்சிகளின் வரிசையிலேயே இச்சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இச்சொற்பொழிவை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் பூ. சோதிநாதன் நிகழ்த்தவுள்ளார். (18)

## கருத்தரங்கு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபையினால் போதைப் பொருள் எதிர்ப்புக் கருத்தரங்கு இன்று முற்பகல் 10.00 மணிக்கு புலோலி பொதுநூலக மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

பிரதேச செயலாளர் திருமதி இ. தர்மராசா தலைமையில் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கானது போதைப் பொருள் ஒழிப்பு மாதத்தினை முன்னிட்டு நடாத்தப்படுகின்றது.

இக்கருத்தரங்கின்போது இலைக்கஞ்சி போசனை மட்டத்தினை அதிகரிக்கும் நோக்கில் மூலிகை இலைக்கஞ்சியும் வழங்கப்படவுள்ளது. (18)

## சிறப்புக் கருத்தரங்கு

(வவுனியா)

பொதுத் தேர்தலில் சாதிக்கப்போவது என்ன? எனும் தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கு ஒன்றினை புதிய ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சியின் வவுனியா மாவட்டக் கிளையினர் நாளை மறுதினம் பிற்பகல் 3.00 மணிக்கு குருமண்காட்டில் அமைந்துள்ள கலைமகள் சனசமூக நிலைய அரங்கில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

இச்சிறப்புக் கருத்தரங்கானது கட்சியின் மாவட்ட செயலாளர் என்.பிரதீபன் தலைமையில் இடம்பெறவுள்ளதுடன் சிறப்புரையினை சட்டத்தரணியும் அரசியற்குழு உறுப்பினருமான சோ. தேவராஜா ஆற்றவுள்ளதுடன் ஜனநாயக இளைஞர் முன்னணி சார்பாக அதன் இணைச் செயலாளர் த. சிறீப்பிரகாஸ் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மஹோற்சவம்

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வர் தேவஸ்தானத்தின் (பருத்தித்துறை சிவன் கோவில்) வருடாந்த மஹோற்சவம் கொடியேற்றதுடன் இன்று ஆரம்பமாகவுள்ளது.

முற்பகல் 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள இத்திருவிழாவானது தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறவுள்ளன.

இம்மஹோற்சவத்தில் எதிர்வரும் 15ஆம் திகதிசனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

• • •

திருநெல்வேலி திருவருள் மிகு ஸ்ரீ நீலாய தாசஷி சமேத ஸ்ரீ காயா ரோகண சுவாமி தேவஸ்தான அம்பிகை மஹோற்சவம் இன்று முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

10ஆம் திகதி திங்கட்கிழமை மாலை கைலாச வாகனமும், 12ஆம் திகதி புதன்கிழமை மாலை மஞ்சத் திருவிழாவும், 15ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

தேர், தீர்த்தத் திருவிழாவின் போது காலை 7.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் ஏனைய நாட்களில் முற்பகல் 10.00 மணி மற்றும் மாலை 6.00 மணி ஆகிய நேரங்களில் வசந்த மண்டபப் பூசையும் நடைபெறும். (137)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் உயிலங்குளம் ஐம்பது வீட்டுத்திட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, துணுக்காய், உயிலங்குளம் ஐம்பது வீட்டுத் திட்டத்தில் வாழ்ந்து வரும் குடும பங்கள், போதிய அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருவதாகவும் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.



முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள உயிலங்குளம் கிராமத்தில், இந்திய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட ஐம்பது வீட்டுத்திட்டத்தில், கடந்த 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணிகளற்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விசேட தேவைக்குட்பட்டோர் என 50 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

இந்நிலையில், தாங்கள் இங்கு குடியேறி நான்கு வருடங்களாகியும் இன்று வரை தமக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை எனவும் தமக்கான மின் இணைப்பை விரைவாக ஏற்படுத்தித் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனைவிட, தினமும் போக்குவரத்துக்கு பயன்படுத்தும் பிரதான வீதி முதல், குடியிருப்பு வீதிகள் வரை எந்த வீதிகளும் புனரமைக்கப்படாமல் காணப்படுவதுடன் தண்ணீர்வசதி, முன்பள்ளி வசதிகள், பாடசாலை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளின்மையால் 28 குடும்பங்கள் வேறு இடங்களுக்குச் சென்றுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலக அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கும் போது, "தற்போது குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய வசதிகளும் படிப்படியாக செய்து கொடுக்கப்படவுள்ளன" என்றார்.

# தனங்கிளப்பு தபால் நிலையத்தில் தபால் பொதிகள் கொள்ளை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி தபால் நிலையத்திலிருந்து தனக்கிளப்பு தபால் நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் கொண்டு செல்லப்பட்ட போது பறித்துச் செல்லப்பட்ட தபால் பொதிகள் சிலவற்றை, தனக்கிளப்பு பகுதியிலிருந்து மீட்டதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

தபால் ஊழியர்களால் கொண்டுசெல்லப்பட்ட இந்தப் பொதிகளை மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு நபர்கள் பறித்துச் சென்றுள்ளனர். இது தொடர்பில் தபால் ஊழியர்களால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், தனஙகிளப்புப் பகுதியில் இரண்டு தபால் பொதிகள் இருப்பதாக அப்பகுதி பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அங்கு பொலிஸாருடன் சென்ற த்பால் ஊழியர்கள் அவற்றை மீட்டனர்.

பொதிகளில் இருந்த அனைத்து தபால்களும் அப்படியே இருப்பதாக தபால் ஊழியர்கள் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் சங்கானை வாசிக்கு ஒரு இலட்சம்

சங்கானை வாசியொருவருக்குக் கடந்த சனிக்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்பெற்ற சனித்தால சீட்டிழுப்பில் ஒரு இலட்சம் ரூபா பரிசாகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

மூன்று இலக்கங்களும், ஒரு போனஸ் இலக்கமும் பொருந்திக் கொண்டதினால் இவர் இவ்வதிர்ஷ்டத்துக்கு உரியவரானார்.

சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் அதிர்ஷ்டச் சீட்டுக்கள் விற்பனை செய்யும் வயித்திலிங்கம் நடராசா என்பவரிடம் இவர் இச் சீட்டினைப் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.(137)

# கல்வியங்காடு இலங்கை நாயகியின் வருடாந்த மஹோற்சவம்

(திருநெல்வேலி)

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் நீண்ட இழுபறியின் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும். நண்பகல் 12 மணிக்கே கொடியேற்றப்பட்டது.

அத்துடன் முதல் நாள் கொண்டு வரப்பட வேண்டிய கொடிச் சீலையும் அன்றைய தினமே அடுத்துவரப்பட்டதுடன் சாந்தி பூஜையும் அன்றே நடாத்தப்பட்டது.

இலங்கைநாயகி அம்மன் ஆலயத்துக்கு அண்மித்ததாக இருக்கும் ஸ்ரீநிவாசக் குழுக்கள் கொடியேற்றி மஹோற்சவத்தை ஆரம்பித்து வைத்தார்.

ஆலய பரிபாலன சபைக்கும், பூஜைகளைத் தற்போது மேற்கொண்டு வரும் பூசகர் சார்ந்தவர்களுக்கும் மஹோற்சவம் சம்பந்தமாக ஏற்பட்ட பிணக்கே இத் தாமதத்துக்கான காரணமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உபயகாரர்களும், அடியார்களும் மற்றும் பொதுமக்களும் வருடாந்த ஆலய மஹோற்சவம் நடைபெற வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (137)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கலைப்பீடம்
## இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் - 2013

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்குரிய பின்வரும் பரீட்சைகள் கீழேயுள்ள நேர அட்டவணைப்படி நடைபெறும்.

**1.கலை முதற்தேர்வு**

முதலாம் வருட கலை மற்றும் நுண்கலை மாணவர்களுக்கான துணைப்பாட அலகுகளான அடிப்படை விஞ்ஞானம் மற்றும் கணினி இலக்கியம் ஆகிய பாடநெறிகளுக்கான பரீட்சைகள் 13.08.2015 ஆம் திகதியன்று நடைபெறும்.

- Basic Science (ABSA 12010) 13.08.2015 9.30am-11.30pm
- Computer Literacy (ACLA 12010) 13.08.2015 12.30pm-2.30pm

**2. கலை நுண்கலைமாணிப்பட்ட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள்-2013 (பழைய பாடத்திட்டம்)**

பழைய பாடத்திட்டத்தில் பயின்று இதுவரை பட்டப் படிப்பை பூர்த்தி செய்யத் தவறிய மாணவர்களுக்கான இரண்டாம் அரையாண்டு மீள் பரீட்சைகள் 12.08.2015 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகின்றன.

- முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் ப்ரீட்சைகள் - 12.08.2015
- இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் - 19.08.2015
- மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் - 25.08.2015

மாணவர்கள் பரீட்சை நேர அட்டவணையை கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பர பலகையிலும் www.jfn.ac.lk/arts எனும் இணையத்தள முகவரியிலும் பார்வையிடலாம்.

ஏற்கனவே அனுமதிஅட்டைகளை பெற்றுள்ள முதலாம் வருட(கலை) மாணவர்கள் அவற்றுடனும் பல்கலைக்கழக அடையாள அட்டையுடனும் சமுகமளிக்குமாறு கேட்கப்படுவதுடன் முதலாம் வருட இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களும் பழைய பாடத்திட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்கான தமது அனுமதி அட்டைகளை 10.08.2015 ஆம் திகதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
05/08/2015.

(C/3885)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015




(ஈ.பி.டி.பி. வலிகாமம் கிழக்கு இணைப்பாளர்)



X | 2

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

கல்வி கற்றுத்தராததை சில வேளைகளில் கசப்பான அனுபவங்கள கற்பித்து விடுகின்றன.-அன்புவழியூர்க்கவிராயர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## என்ன ஒரு சுத்துமாத்து...!

சமஷ்டி முறையிலான தீர்வு ஏற்படுத்தப்படமாட்டாது. ஒற்றையாட்சியின் கீழ்தான் அதிகாரப்பரவலாக்கம் என்று ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளது.

அதேவேளையில், எதிர்கால சவால்களை முறியடிப்பதற்காக, இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாகவே இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அழுத்தமாகத் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவையோ சொல்ல வேண்டியதில்லை. 13வது திருத்தச் சட்டத்திற்கு அமைவாகவே தீர்வு என்றே அவரும் அழுத்தி உரைத்து வருகிறார்.

இந்நிலையில், 2016 இலோ 2020 இலோ தீர்வை எடுப்பதற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வழிமுறைத் திட்டம் என்ன என்பதை அவர்கள் தேர்தல் கூட்டங்களில் தெரியப்படுத்த வேண்டுமல்லவா?

அவர்கள் அதுபற்றிச் சொல்வதற்கு மறந்தது போல் இருந்தால், மக்களாவது அல்லது ஊடகங்களாவது அவர்களுக்கு ஞாபகமூட்டி, தீர்வுக்கு என்ன வழி வைத்திருக்கிறீர்கள் என்பதை அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா?

அவர்களோ, சர்வதேசத்தில் ஒலித்த தங்கள் குரல் மீண்டும் ஒலிக்க வாக்களியுங்கள் என்கிறார்கள். அல்லது தமிழ் மக்களைத் தென்னிலங்கை அடிமைப்படுத்தியபோது பிரபாகரன் போராடப் புறப்பட்டார் என்று ஏதோ பழைய ராஜராஜன் வரலாறு சொல்வது போல மேடைகளில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

பழைய டணால் தங்கவேலு ஒரு படத்தில், பைரவன் சேவை நாட்டுக்குத் தேவை என்கிற விதமாக யாரோ தன்னை மேடையில் பாராட்டிக் கொண்டிருந்ததாகவும், தான் குறுக்கிட்டு "சப்ஜெக்டுக்கு வா... சப்ஜெக்டுக்கு வா" என்று அவனிடம் கேட்டுக் கொண்டதாகவும் தனது மனைவியிடம் வந்து அளப்பார் அல்லவா!

நாங்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்குத் தீர்வை எப்படி எடுத்துத் தரப் போகிறார்கள் என்று சொல்வதை விட்டுவிட்டு, வேறு ஏதேதோ வீரக் கதைகளை அளந்து கொண்டிருப்பதைக் கையமர்த்தி நிறுத்திவிட்டு, "சப்ஜெக்டுக்கு வாருங்கள்" என்று அடிக்கடி ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது.

சர்வதேசத்துக்குத் தமிழ்மக்கள் ஒற்றுமையைக் காட்டினால் எப்படித் தீர்வு வரும்? ரணில் வென்று நல்லாட்சி அமைந்தால் எப்படித் தீர்வு வரும்? கூட்டமைப்புக்கு 20 ஆசனங்கள் கிடைத்தால் எப்படித் தீர்வு வரும் என்பதை எல்லாம் விளக்கிச் சொல்ல வேண்டுமல்லவா?

ஏனென்றால், சர்வதேசத்துக்கு நம் ஒற்றுமையைப் பல முறை காட்டியாகி விட்டது. அவர்கள் அதிகபட்சமாகச் சொல்லியிருப்பது, "13வது திருத்தத்திலிருந்து உங்கள் அரசுடன் போய்ப் பேசுங்கள்.... மற்றும் கடந்த ஜனவரிக்குப் பிறகு உங்கள் நாட்டில் நல்லாட்சி அமைந்திருக்கிறது உங்கள் தேவைகளைப் பேசிப் பெறப்பாருங்கள்" என்பதுதான்.

இதற்குமேல் சர்வதேசத்தை என்ன பேச வைக்க முடியும் என்பதை அவர்கள் வாயிலிருந்து பெறப்பட்ட ஆதாரங்களுடன அல்லவா மக்களுக்குச் சொல்லி நம்ப வைக்க வேண்டும்!

"சமஷ்டிக் கதையே இல்லை, ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு" என்று ரணிலும் மைத்திரியும் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். இவர்களோ நல்லாட்சி அமைந்தால் தீர்வு என்று எதை வைத்துக் கதை சொல்கிறார்கள்?

இவர்கள் வசம் 22 எம்பிக்களும் விடுதலைப் புலிகளின் ஆயுதபலமும் இதே யூஎன்பீ அரசாங்கமும் இருந்தபோது எடுக்காமற்போன தீர்வை இப்போது 20 ஆசனங்கள் தந்தால் எடுப்போம் என்று அங்கு யார் சொல்வதை வைத்துச் சொல்கிறார்கள் என்று தெரிவிக்க வேண்டுமல்லவா?

# மோசடிகளை அம்பலப்படுத்தத் தயார்

# நாமல் நேரடி விவாதத்திற்கு வரவேண்டும்

## நளீன் பண்டார பகிரங்க அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தாரின் ஊழல் மோசடிகளை நேருக்கு நேர் அம்பலப்படுத்த தயாரெனவும், அதற்கு நாமல் ராஜபக்ஷ தம்முடன் நேரடி விவாதத்திற்கு வரவேண்டுமெனவும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற அம்பலப்படுத்தல் எனும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாமல் ராஜபக்ஷவின் வருமானத்தை வைத்துப் பார்த்தால், அவரால் எவ்வாறு ஒரு தொலைகாட்சி நிறுவனத்தின் உரிமையாளராக முடியுமென்பது பெரும் கேள்விக்குறியாகியுள்ளது.

அதுமட்டுமன்றி அவரது பெயரில், 'கவர்ஸ் கோப்பரேட் சர்விசஸ்' என்னும் தனியார் நிறுவனமும் உள்ளது.

அத்துடன், கடந்த 2012ஆம் ஆண்டு 'ஹெலோ கோப்' என்னும் பெயரில் 12 கோடி ரூபாவுக்கு இன்னுமொரு நிறுவனத்தையும் விலைக்கு வாங்கினார். இவ்வளவு பணம் நாமல் ராஜபக்ஷவுக்கு எங்கிருந்து கிடைத்தது? மக்களின் பணத்தை ஊழல் மோசடி செய்தே நாமல் ராஜபக்ஷ இவ்வளவு பணத்தை திரட்டியிருப்பாரென என்னால் பகிரங்கமாக குற்றம் சுமத்தமுடியும். அவர் அதை மறுப்பாராயின் என்னுடன நேரடி விவாதத்திற்கு வருமாறும் நான் அவரை அழைக்கின்றேன்.

ஜனாதிபதித் தேர்தலில் தோற்கப் போவதையறிந்து நாமல் ராஜபக்ஷ தனது மூன்று லம்போகினி கார்களையும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானங்களில் ஏற்றி மலேசியாவுக்கு அனுப்பியமை தற்போது தெரியவந்துள்ளது. அந்த கார்கள், மலேசியாவிலுள்ள குடு ராஜாவான முஜாவின் வீட்டிலேயே வைக்கப்பட்டுள்ளன. இந்த குடு ராஜாவின் வாகன அனுமதிப் பத்திரத்தைக் கொண்டே நாமலும் யோசிதவும் மலேசியாவில் கார்ப் பந்தயத்தில் கலந்துகொண்டனர்.

மகிந்த ராஜபக்ஷவின் மூன்று புதல்வர்களும் 2,3 இலட்சங்கள் பெறுமதியான சப்பாத்துக்களையே அணிந்தனர். 10, 15 இலட்சங்கள் பெறுமதியான கைக்கடிகாரங்களையே உபயோகித்தனர். ஆனால் பல பிள்ளைகள் பாடசாலை செல்வதற்கு இரண்டு சபாத்துகள் வாங்க பணம் இல்லாமல் தற்கொலை செய்து கொண்டனர்.

ராஜபக்ஷவினர் அவர்களது பிள்ளைகளுக்கு பணத்தை திருட கற்றுக் கொடுத்தது மட்டுமல்லாமல், நாட்டின் ஏனைய இளைஞர்களின் எதிர்காலத்தை அழிக்கும் வகையில் நாட்டிற்குள் போதைவஸ்து கொண்டு வரவும் இடமளித்துள்ளனர் என இதன்போது குறிப்பிட்டார்.

# மத்திய வங்கி பிணைமுறி விவகாரம்

# புதிய தெரிவுக்குழு அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

மத்திய வங்கியில் இடம்பெறறதாகக் கூறப்படும் பிணை முறிகள் தொடர்பான விசாரணைக்கு, தேர்தலையடுத்து அமைக்கப்படும் புதிய நாடாளுமன்றத்தில் புதிய தெரிவுக்குழுவொன்று அமைக்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கிருலப்பனை பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர், இதனைத் தெரிவித்தார்.

அவ்வாறு மத்திய வங்கியின் பிணைமுறிகளில் முறைகேடுகள் ஏதும் இடம்பெற்றிருப்பின், அதனை மூடி மறைக்க வேண்டிய தேவை தமக்கு இல்லையென பிரதமர் இதன்போது குறிப்பிட்டார்.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் ஆராய ஏற்கனவே பிரதமரால் மூவரடங்கிய விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடாத்தப்பட்டது. குறித்த விசாரணையின் பிரகாரம், குறித்த மோசடிக்கும் அதன் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கும் தொடர்பில்லையென கூறப்பட்டது.

எனினும், மத்திய வங்கியின் ஆளுநர் பிரதமரால் நியமிக்கப்பட்டவர் என்ற காரணத்தினால், பிரதமர் அவரைக் காப்பாற்ற முயற்சிப்பதாக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 67 அரசியல் வாதிகளின் ஊழலை நிரூபிக்க ஆதாரம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் ஊழலில் ஈடுபட்ட 67 அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க, போதிய ஆதாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த 67 பேர் தொடர்பான முறைப்பாடுகளை ஜனாதிபதி ஆணைக்குழு பொலிஸ் திணைகளத்திடம் ஒப்படைத்துள்ளது. இதன் பிரகாரம் குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய 25 உறுப்பினர்களைக் கொண்ட விஷேட பொலிஸ் விசாரணைப் பிரிவொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தொடர்பான விசாரணைகள், எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலின் பின்னர் நடைபெறுமென குறிப்பிடப்படுகிறது.

மகிந்த அரசாங்கத்தில் இடமபெற்ற ஊழல் மோசடி தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், அவற்றில் பலவற்றிற்கு ஏற்கனவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பிணையில் விடுதலைபெற்றுச் செல்லும் குற்றவாளிகளைக் கண்காணிக்க வேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவு

பிணையில் விடுதலையாகும் முக்கிய குற்றவாளிகளைத் தொடர்ந்து கண்காணிக்குமாறு, பொலிஸாருக்கு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய உத்தரவிட்டுள்ளார்.

பிணையில் விடுதலையாகும் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள், தற்போது நடைபெறும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட வைப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

பிரபல அரசியல்வாதிகளின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுவதன் மூலம் இவர்கள் அரசியல் பின்புலத்தை பெற முயற்சிப்பதாகவும், இவர்களால் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள தேர்தல்கள் ஆணையாளர், குறித்த நபர்களை தொடர்ச்சியாக கண்காணித்து அவர்கள் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை முற்றாகத் தடுக்குமாறு குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட வைப்பதற்காக பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சுமார் 600 பேரை பிணையில் விடுதலை செய்வதற்கு, ஐக்கிய தேசியக் கட்சி முயன்று வருவதாக அண்மையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜூலை மாதம் முதல் வாரத்தில் கேரள உள்துறை அமைச்சரான ரமேஷ் சென்னிதாலா அவர்கள் இந்த வருடம் மே மாதத்தில் ஆந்திர காவல்துறையால் கைது செய்யப்பட்ட மாவோயிஸ்ட் தம்பதிகளான ரூபேஷ் - ஷைனா ஆகியோரின் இரு மகள்களுக்கும் ஒரு கடிதம் எழுதினார். அத்தம்பதிகள் 10 வருடங்களுக்கும் மேலாக தலை மறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்தனர் என்றும் அவர்களுக்கு 19 வயதில் ஏமி என்ற மகளும், 10 வயதை நெருங்கும் சவேரா என்றொரு மகளும் உள்ளனர் என்றும் காவல்துறையின் அறிக்கை தெரிவிக்கிறது. அமைச்சர் தன்னுடைய கடிதத்தில், பெற்றோரின் போதிய அரவணைப்பும், கவனிப்பும் கிடைக்காதவர்கள் என அக்குழந்தைகள் பற்றிய தன்னுடைய கவலையை வெளிப்படுத்தியிருக்கிறார். மேலும் அதில் அவர், "அர்த்தமற்ற பிரசாரங்களுக்கும், வெற்று சித்தாந்தங்களுக்கும்" பலியாகிவிட வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். அதுமட்டுமின்றி, தங்களுடைய படிப்பில் கவனம் செலுத்தி, "தேசத்தின் பொறுப்புமிக்க குடிமக்களாக" உருவாகும்படி அறிவுரையும் வழங்கியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, தற்போது ரூபேஷின் மூத்த மகளான ஏமி, உள்துறை அமைச்சருக்கு வெளிப்படையான ஒரு கடிதம் எழுதியுள்ளார். அமைச்சரின் கடிதத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளில் ஏற்றுக்கொள்ள முடியாத, அதேவேளை சங்கடத்தையும் தரக்கூடிய அம்சங்களுக்கு எதிர்வினை ஆற்றியுள்ளார் ஏமி. மத்யமம் எனும் மலையாள நாளிதழில் அக்கடிதம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் தமிழ் மொழிபெயர்ப்பு:



**கைதுக்கோ, சோதனைக்கோ எவ்வித வாரண்டும் இன்றி காவல்துறையின் கூட்டம் ஒன்று எங்களது வீட்டின் முன் கதவை உடைத்து உள்ளே நுழைந்தது. என்னை அக்கூட்டம் அவமதித்துப் பேசியது. ஒருவேளை எனது தந்தை பிடிபட்டால் அவர் தலையில் பெரிய கல்லைப் போட்டு அடித்துக் கொல்வோம் என்று அவர்கள் என் ஐந்து வயது தங்கையிடம் கூறினர்.**

# இந்திய மாவோயிஸ்ட் தலைவர் ஒருவரின் மகள் உள்துறை அமைச்சருக்கு எழுதிய பதில் கடிதம்

மதிப்பிற்குரிய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு,

எங்கள் மீது அனுதாபமும், கருணையும் பொழியும் உங்களது கடிதம் கண்டேன். இரண்டு பிள்ளைகளின் தகப்பனாராக, பெற்றோரின் போதிய கவனிப்பைப் பெறாத எங்கள் நிலை குறித்து மிகவும் அக்கறையோடு நீங்கள் கடிதம் எழுதியுள்ளீர்கள். உங்கள் அக்கறைக்கு நன்றி. இருப்பினும், கடிதத்தில் சில தவறான தகவல்கள், இணக்கப்பாடற்ற தன்மைகள் வெளிப்படுகின்றன. அதனால், எனது கருத்தைத் தெரிவிக்கும் வகையில் நான் ஒரு கடிதம் எழுத முடிவு செய்திருக்கிறேன்.

நானும் எனது தங்கையும் பெற்றோரின் போதிய கவனிப்பைப் பெறவில்லை என்று சொல்வது தவறான கருத்தாகும். நான் அறிந்த குழந்தைகளைவிட நாங்கள் எங்கள் பெற்றோரின் அதிகமான அன்பையும் கவனிப்பையும் பெற்றுள்ளோம். குழந்தையாக இருந்தபோதே எனது பெற்றோர் செல்லும் அனைத்து இடங்களுக்கும் நான் அவர்களோடு சென்றுள்ளேன். எனது ஐந்தாம் வயதில், அப்படி ஒரு பயணத்தின்போது, ஜனவரி 1ஆம் திகதி நீங்கள் துன்புறுத்திய ஆதிவாசி குடியிருப்பு ஒன்றில் தங்க நேர்ந்தது. அதுமட்டுமின்றி கொல்கத்தா, ரன்னி, மும்பை மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்தபோது பல்வேறு பண்பாட்டுச் சூழல்களையும், பிரச்சினைகளையும் அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. பரந்தளவிலான கண்ணோட்டத்தை வளர்த்துக்கொள்ள இப்பயணங்கள் எனக்கு உதவின. ஆனால், தற்போது நீங்கள் தலைமை வகிக்கும் காவல்துறையினர் எங்கள் வாழ்க்கையில் நுழைந்தபோது எல்லாம் மாறிப்போனது.

எனக்குப் பத்து வயதிருக்கும், அப்போது எனது தங்கை சவேராவுக்கு நான்கு வயது, காரணமேயின்றி எனது தாயார் விசாரணைக் காவலுக்கென காவல்துறையினரால் அழைத்துச் செல்லப்பட்டார். உங்கள் தரப்பினரின் தொடர் துன்புறுத்தலை சகிக்க முடியாமல் கேரள உயர் நீதி மன்றத்தில் தான் பார்த்து வந்த பணியை விட்டு விட்டு எனது தாயார் முழு நேர சமூகப் போராளி ஆனார். இப்படி ஒரு முடிவை எடுக்கக் காரணமாயிருந்த நிலைமைகள் குறித்து அப்போதைய முதலமைச்சர் வி.எஸ் அச்சுதானந்தன் அவர்களுக்குக் கடிதமும் எழுதினார். நீங்கள் தலைமை வகிக்கும் அந்தக் காவல்துறையே எங்களின் இந்தக் கல்வி பெற முடியாத நிலைக்குக் காரணம் என்பதை உங்களுக்கு மென்மையாக நினைவூட்ட விரும்புகிறேன்.

மேலும், உங்கள் கடிதத்தில், எப்படி நாங்கள் தவறாக வழிநடத்தப்படுகிறோம் என்றும் வருந்தியிருந்தீர்கள். அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி வலியுறுத்தவும் செய்துள்ளீர்கள். ஆனால் யதார்த்தம் அதுவல்ல. கைதுக்கோ, சோதனைக்கோ எவ்வித வாரண்டும் இன்றி காவல்துறையின் கூட்டம் ஒன்று எங்களது வீட்டின் முன் கதவை உடைத்து உள்ளே நுழைந்தது. என்னை அக்கூட்டம் அவமதித்துப் பேசியது. ஒருவேளை எனது தந்தை பிடிபட்டால் அவர் தலையில் பெரிய கல்லைப் போட்டு அடித்துக் கொல்வோம் என்று அவர்கள் என் ஐந்து வயது தங்கையிடம் கூறினர்.

இதுபோல் நிறைய கதைகள் உள்ளன. கலாசார முன்னணியினர் நடாத்திய நிகழ்ச்சிக்கு நானும் எனது தங்கையும் சென்றபோது, நாங்கள் மாவோயிஸ்டுகள் என்று குற்றம் சாட்டப்பட்டு மஹிளா மந்திரில் அடைக்கப்பட்டோம். மேலும், என்னுடைய கற்பு குறித்து காவல்துறையினர் கேள்வி எழுப்பினர்: "நான் கன்னித்தன்மையோடு இருக்கிறேனா? என்னுடைய கன்னித்திரை கிழியாமல் இருக்கிறதா?" போன்ற கேள்விகள் மூலம் அதனை அறிய விரும்பினர்.

ஒரு காவல்காரர் என்னுடைய முகநூல் கணக்கின் கடவுச்சொல்லை அறிய விரும்பியபோது, ஒரு மூத்த அதிகாரியின் முன்புதான் என் முகப்புத்தகத்தை நான் திறந்துகாட்ட இயலும் என்று சொன்னேன். அதற்கு அவர், நான் இணங்கவில்லையென்றால் வெளி யுலகையே பார்க்க முடியாது என்று எச்சரித்தார். மஹிளா மந்திரில் இரவு முழுவதும் தொண்டை வற்ற அழுதுகொண்டே இருந்த என் தங்கைக்கு உங்கள் பதில் என்ன?

கலாசார முன்னணியினர் எங்களைக் கடத்திச் சென்றதாக உண்மைக்குப் புறம்பாக குற்றம் சாட்டப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன. நாங்கள் கடத்தப்படவில்லை என்று மீண்டும் மீண்டும் கூறிய பின்னரும் இது நடந்தது. உங்கள் காவல் படை யினர் சட்டவிரோத நடவடிக்கைத் தடுப்புச் சட்டத்தின் உதவியோடு கட்டவிழ்த்துவிட்ட அட்டூழியங்கள்தான் எங்களது வாழ்வை நரகமாக்கியது. அப்போதுதான் இந்த ஜனநாயகம் எப்படிப்பட்ட தவறான நம்பிக்கைகள் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பதை எங்கள் வாழ்வில் நாங்கள் எதிர்கொண்ட தொடர் துன்புறுத்தல்கள் உணர்த்தின. என் பெற்றோர் ஏற்றுக்கொண்ட சித்தாந்தங்கள், அவர்களின் போராட்டங்கள் சரி யானதே என்பதை காவல்துறையின் மக்கள் விரோதக் கொள்கைகளே எனக்கு உணர்த்தின.

பெற்றோரின்றி நாங்கள் வளர்ந்ததற்காக கவலைப்படுவதற்கு நேரம் எடுத்துக்கொண்ட உங்களால், ஒவ்வொரு வருடமும் அட்டப்பாடியில் இறந்து பிறக்கும் 150 குழந்தைகளை எப்படிப் புறக்கணிக்க முடிகிறது?

ஆரம்பப் பள்ளியில் சேரும் பெரும்பாலான பழங்குடியினரின் பிள்ளைகள் உயர் நிலை படிப்பைத் தொடரமுடியாமல் வெளியேறுகின்றனர். அவர்களில் நான்கில் மூன்று பேர் மேல்நிலைக் கல்வியை எட்ட முடிவதில்லை. இந்தத் தோல்விகளை நீங்கள் புறந்தள்ள முடியுமா? கல்வித்துறை தனியார் மயமாக்கப்பட்டு விட்டதால் ஆயிரக்கணக்கானோர் கல்விக் கடன் பெற முடியாமல் தற்கொலை செய்துகொள்ளும் நிலை உள்ளது.

அவர்களை ஏன் நீங்கள் கண்டுகொள்வதில்லை?

உங்கள் கடிதத்தில், அழிவல்ல ஆக்கமே நமக்குத் தேவை என்று கூறியுள்ளீர்கள். சுவாரசியம் தரும் வகையில், என் தந்தை சென்ற வருடம் உங்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தை நான் படிக்க நேர்ந்தது. நிலமற்ற பழங்குடியினரின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளுமாறு அவர் அதில் வேண்டியுள்ளார். அவர்களின் உற்பத்திக்கு கிடைக்கும் விலையானது சவப்பெட்டிக்கு அறையப்படும் ஆணி போன்றது என்றும் கூறியுள்ளார். அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகளினால் சித்திரவதைக்கு உள்ளாகும் பழங்குடியினர் பற்றியும், ஏழை விவசாயிகள் பற்றியும், நலிந்து போகும் அவர்களின் வாழ்க்கை குறித்தும் நான் படித்திருக்கிறேன். ஆனால் அப்பிரச்சினைகளை காது கொடுத்துக் கேட்கவும்கூட நீங்கள் தயாராக இல்லை.

என் பெற்றோரை வீணர்கள் என்று நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்கள், ஆம் உங்களுக்கும் உங்களுக்கு முன்பு பதிவியிலிருந்தோருக்கும் அவர்கள் நிச்சயம் வீணர்களே. முந்தைய காலங்களில் காலணியத்தை எதிர்த்த பகத் சிங், சுபாஷ் சந்திர போஸ் மற்றும் பலர் வீணர்கள் என்றே அழைக்கப்பட்டனர். ஜனநாயக விரோத சட்டங்களாலும், இருண்ட நிலவறைகளில் அடைக்கப்பட்டும் அத்தகைய போராளிகள் தண்டிக்கப்பட்டனர். இன்றைக்கு என்னுடைய பெற்றோரையும் நீங்கள் அதே முறையில் கையாள்கிறீர்கள். ஆனால், ஏழ்மையில் உழலும் பெரும்பாலான எமது மக்கள் என் பெற்றோரை வீணர்கள் என்று பார்ப்பதில்லை. உங்களது முயற்சிகளைக் காட்டிலும் எனது பெற்றோரின் போராட்டங்கள் அவர்கள் மத்தியில் பலமான அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன. எங்கள் பெற்றோர் ஒன்றும் எவரையும் ஏமாற்றி பணம் சம்பாதித்து தங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக்கொள்ளப் போராடவில்லை மாறாக, கேரளாவின் ஏழை மக்களின் வாழ்வை உயர்த்திடவும், இந்த நாட்டைக் காக்கவுமே அவர்கள் போராடினர். என் பெற்றோரின் போராட்டம் மக்களுக்கானது.

# மக்களின் மனங்களை வெற்றிகொள்ளும் நாடாளுமன்றம் அமைய வேண்டும்

## சர்வமத பேரவை வலியுறுத்து

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளான வடக்கு, கிழக்கு மக்களின் மனங்களை வெற்றி கொள்ளும் வகையில் புதிய நாடாளுமன்றம் அமைய வேண்டும். பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதமும் முழுமையாக புறந்தள்ளப்பட வேண்டும் என்று சர்வமத பேரவை வலியுறுத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள புத்திஜீவிகள சங்க கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டின் போதே சர்வமத பேரவை சார்பாக கலந்து கொண்ட மத தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். இந்த ஊடகவியலாளர் மாநாட்டிற்கு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, இத்தேபான தம்மாலங்கார மகாநாயக்க தேரர், பெல்லன்வில விமலரத்ன தேரர், பெஸிஸ் ஜோசப் ஆண்டகை மற்றும் அகில இலங்கை ஜெம்மியத்துல் உலமா சபையின் ஊடக பேச்சாளர் மௌளவி பாசில் பாருக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இன,மத ரீதியாக அரசியல் செய்வது நாட்டிற்குச் செய்யும் பாரிய துரோகமாகும். இவ்வாறான அரசியல் கட்சிகளை இரத்துச செய்ய வேண்டும். அதற்கான சடடங்களை அடுத்த நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற வேண்டும். தேர்தல் முறைமையை மையமாகக் கொண்ட புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும். இந்த வேலைத் திட்டத்திற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். நாட்டில் மோசடிக்கார்கள் நாடாளுமன்றத்திற்குள் நுழைவதற்கான பொறுப்பினை அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்கவேண்டும் என்றும் அந்த பேரவை குறிப்பிட்டது.

இதன்போது கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கருத்துத் தெரிவிக்கையில், மோசடிக்காரர்களை கொண்ட நாடாளுமன்ற முறைமையை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. கடந்த நாடாளுமன்றத்தின் போது தேர்தல் முறைமையை மையமாக கொண்ட அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டது. எனினும் குறித்த திருத்தச்சட்டம் நிறைவேற்றப்படவில்லை. ஏன் குறித்த சட்டம் நிறைவேற்றாமல் பின்தள்ளப்பட்டது என்பது தெரியவில்லை. கொலைக்காரர்கள், கொள்ளைக்காரர்கள், போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையோர் என மோசடிக்காரர்களே கடந்த நாடாளுமன்றங்களில் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தினர். இதன் காரணமாக சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு பெரும் அவப்பெயர் ஏற்பட்டது.

இந்த விடயத்தில் ஒரு கட்சியினரை மாத்திரம் குற்றம்சுமத்த முடியாது. மோசடிக்காரர்கள் நாடாளுமன்றத்திற்குள் நுழைவதற்கு ஏதோ ஒரு வகையில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்தாசை வழங்கியுள்ளன என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த இத்தேபான தம்மாலங்கார மகாநாயக்க தேரர், இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் அமைதியான முறையில் நடத்தப்பட்டு வருகின்றது. யாரும் எதிர்பார்த்திராத வகையில் வரலாற்றில் முதற்தடவை இவ்வாறானதொரு தேரதல் நடாத்தப்படுகிறது.

இதே வழிமுறையை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த வேண்டும். மோசடிக்காரர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு இடமளிக்கப் போவதில்லை. இந்த முறை தேர்தலில் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். இது மிகவும் சிறந்ததொரு வாய்ப்பாகும். இதனை எக்காரணம் கொண்டும் கைவிடக் கூடாது. எந்தக் கட்சியினரானாலும் கவலையில்லை என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த மௌலவி அஷ்ஷேக் பாசில் பாருக் புனித அல்குர்ஆனிண்தும் முஹம்மத் நபிகளாரின் போதனைகளின் பிரகாரம் நாட்டை ஆட்சி செய்வதற்கு தகைமையுடையோரை தெரிவு செய்ய வேண்டும். நேர்மை, திறமை உள்ளிட்ட சிறந்தோரை இம்முறை நாடாளுமன்றத் தேர்தலுக்கு தெரிவு செய்வது மிகவும் முக்கியமாகும் மேலும் அமைதியானதும் நீதியானதுமான தேர்தலை நடாத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாட்டை ஆட்சி செய்வதற்கு வருகை தரகூடியவர்கள் மக்களுக்கு சேவை செய்வதனை பிரதான இலக்காக கொண்டே வர வேண்டும். மேலும் இந்த விடயத்தில் ஊடகம் ஒழுங்கு முறைப்படி செயற்படவேண்டும் என்றார்.

# மகிந்தவின் இனவாத பிரசாரத்தை கண்டிக்கின்றார் சுமங்கல தேரர்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தரப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இனவாத தேர்தல் பிரசாரத்தை கண்டி மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே சிறி சுமங்கல தேரர் மிகக் கடுமையாக சாடியுள்ளார்.

இலங்கை சிங்கள பௌத்த பீடங்களில் மிக முக்கியமான பீடங்களில் ஒன்றாக மல்வத்து பீடம் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் பிரசார மேடைகளில் சரியாக எதனையும் சொல்ல முடியாத தரப்பினர், நாடு பிளவடையும் என பிரசாரத்தில் தீவிர முனைப்புக் காட்டி வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழ் நாடு பிளவடையும் என்ற அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை ஒவ்வொரு தேர்தல்களின் போதும் சிலதரப்பினர் கையில் எடுத்துக்கொள்கின்றனர். நாட்டு மக்களின் தேவைகளை அறிந்து கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளத்தவறியது.

இன்னும் சில காலங்கள் ஆட்சியில் நீடித்திருந்தால் கண்டியிலும் பாரிய துறைமுகமொன்றை மகிந்த அரசாங்கம் அமைத்திருக்கும் கடந்த அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்ட போதிலும் பாரிய மோசடிகள் இடம்பெற்ற அபிவிருத்தித் திட்டங்களை இடைநிறுத்துவதில் தவறில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பிள்ளையானுக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்குவதாக உறுதியளித்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளது, இந்தச் சந்தர்ப்பம் கருணாவிற்கு வழங்கப்படவில்லையா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வேட்பாளர்களுக்கும் பாதுகாப்பு

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட உள்ளது. அண்மையில் கொட்டாஞ்சேனை புளுமெண்டல வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச சூட்டு சம்பவத்தைத் தொடர்ந்து இந்த பாதுகாப்பு வழங்கப்பட உள்ளது. முன்னாள் நாடாளுமன்ற உறுபபினர்கள் மற்றும் வேடபாளர்களுக்கு இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்பட உள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து முறைப்பாடு செய்யப்பட்ட 40 இற்கும் மேற்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பொலிஸ் மா அதிபர் பாதுகாப்பு வழங்க உளளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.



வேட்பாளர்கள் தேர்தல்கள் ஆணையாளரிடம் பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட தேர்தல்கள் ஆணையாளர், வேட்பாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணித்துள்ளார்.

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்கள் தேர்தலில் போட்டியிட்டாலும் இல்லாவிட்டாலும் அவர்களுக்கான பாதுகாப்பு தொடர்ச்சியாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாரிய போதைப்பொருள் வியாபாரம் 7 பேருக்கு சிவப்பு அறிக்கை

இலங்கையில் பாரிய அளவிலான போதை பொருள் வியாபாரங்களுடன் தொடர்புடைய 7 பேரை கைது செய்வதற்காக இன்டர்போல் பொலிஸ் நேற்று சிவப்பு அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. இப் போதைபொருள் வியாபாரிகளின் பெயர்கள், பிரசன்ன ஜானக பெர்ணான்டோ, சுஜித் நிஷாந்த ஜயசிங்க, மொஹமட் மதிஸ் நிமல் பத்ம ஸ்ரீ பத்திரன, விதுர விஜேசிங்க, வசந்த லியனகே, மென்டிஸ் மற்றும் டபில்யூ.சாலிய ஆகியோர் என இன்டர்போல் வெளிப்படுத்தியுள்ளது.

இவர்களில் அதிகமானோர் இத்தாலியின் மிலானே நகரத்தில் மற்றும் சுற்றிலுள்ள நகரங்களில் பதுங்கியிருப்பதாக சந்தேகிக்கப்படுகின்றது. இப போதைபொருள் வியாபாரிகளுக்கு நன்கு ஆங்கிலம் பேச முடியும் என தெரியவந்துள்ளது. பாரிஸ் இன்டர்போல் பொலிஸார் வெளியிட்டுள்ள இப போதைபொருள் வியாபாரிகள் தொடர்பிலான தகவல்களை இன்டர்போல் அதிகாரிகள் இத்தாலி பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மகிந்தவை மக்கள் வீட்டுக்கு அனுப்புவார்கள்

## அசாத் சாலி தெரிவிப்பு



நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்தவை மக்கள மீண்டும் வீட்டிற்கு அனுப்பி வைப்பார்கள என மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் மகிந்த எமக்கு இனி வேண்டாம் என தெரிவித்து வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். இதனைப் புரிந்து கொள்ளாத அவர், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

இம்முறையும் அவர் தோல்வியடைவது உறுதி. இம்முறை தேர்தலில் தோற்று விடுவோம் என்ற அச்சத்தில் போலியான வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றார். எனினும் 'மக்கள் இதனைக் கண்டு ஏமாற மாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



‘சொல்லின் செல்வர்’

இரா.செல்வவடிவேல்



X 3

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# பாதாள உலகக் குழுக்கள் தலைதூக்க இடமில்லை

## ரணில் சூளுரை

பாதாள உலகக் குழுக்கள் தலைதூக்க இடமளிக்கப்படமாட்டாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். வாரியபொல பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பாதாள உலகக் குழுக்கள் இயங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. புளுமெண்டல் சம்பவம் குறித்து விசாரணை நடாத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் மா அதிபரின் அறிக்கை கிடைத்ததன் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு செயலகத்திற்கு கடந்த அரசாங்கம் தொடர்பில் 285 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் 177 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடாத தப்பட்டுள்ளது. நிதிக் குற்றச் செயல்கள் தொடர்பில் 115 முறைப்பாடுகளும், இலஞ்சம் பெற்றுக் கொள்ளல் தொடர்பில் 35 முறைப்பாடுகளும், குற்றச் செயல்கள் தொடர்பில் 27 முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

**மேடம்**
விருந்தினர்கள் விஜயம் செய்வதால் மகிழ்வு நிலை தக்க வைக்கும்

**ரிஷபம்**
விவாகத்திற்காக கிரக சாந்திகள் செய்ய முற்பட ஆலயத்தை நாடுதல்

**மிதுனம்**
நஷ்ட நிலைமையினால் வியாபாரம் சிறக்க புதிய யுக்தியை நாட முற்படல்

**கடகம்**
நீர் வழிமூலம் வெளியூர் பயணத்தை மேற்கொள்ள மனையாள் விரும்பாமை

**சிம்மம்**
விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமையினால் எச்சரிக்கை செய்யுப்படல்

## முரசின் இன்றைய பலன்

07.08.2015 வெள்ளிக்கிழமை

மன்மத வருஷம் ஆடி மாதம் 22 ஆம் திகதி.
சித்த யோகம் / அட்டமி திதி .
பரணி நட்சத்திரம் முன்இரவு - 11.48 வரை பின் கார்த்திகை
இராகுகாலம் 10.34 - 12.04 வரை சுப நேரம் 6.04 - 7.34 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மீனம்**
உங்களின் ஆலோசனையைக் கேட்க நண்பரகள் குழாம் நாடி வருதல்

**கன்னி**
ஒழுக்கத்ந்த கடைப்பிடித்தால் அவமானத்தினின்றும் தப்பிப் பிழைத்தல்

**கும்பம்**
பிள்ளைகளின் நலன் முன்னிட்டு சேமிப்பில் கவனஞ் செலுத்தல்

**மகரம்**
புதியவர்களின் உறவைத் துண்டித்து விடுவது ஆபத்தை விளைவிக்காது

**தனுசு**
எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேர்ந்ததால் ஆனந்தமடைதல்

**விருச்சிகம்**
பிள்ளைகளின் அழைப்பின் பிரகாரம் பெற்றோருக்கு வெளியூர் யோகமேற்படல்

**துலாம்**
கணவரின் நடத்தை மீது சந்தேகம் ஏற்பட்டதால் அதிர்ச்சியடைதல்

# புனர்வாழ்வு பெற்றோருக்கு கழிவறைகள் அமைப்பு



செந்தில்குமரன் இடர் உதவி நிறுவனம் புனர்வாழ் வளிக்கப்பட்டோருக்கு கட்டிக் கொடுத்த 10 கழிவறைகள் கடந்த மாதம் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளன. வன்னியில் போர்க் கால்த்தில் ஊனமுற்று இடுப்புக்குக் கீழ் இயக்கமற்ற சுமார் 50 பேர் காலைக் கடன் கழிப்பதில் பலத்த சிரமத்தை அனுபவித்து வருகிறார்கள். இவர்களுக்கு கழிவறை கட்டிக் கொடுக்கும் திட்டம் ஒன்றினை நடை முறைப்படுத்த வடமாகாணசபை நல்வாழ்வு அமைச்சர் மருத்துவர் பி. சத்தியலிங்கம் செந்தில் குமரன் இடர் உதவி நிறுவனத்தை தொடர்பு கொண்டு நிதியுதவி கேட்டிருந்தார்.

இந்தத் திட்டத்துக்கு செந்தில் குமரன் இடர் உதவி நிறுவனம் வழங்கிய 11,180 டொலர் (ரூபா 12,59,950) நிதியுதவி வழங்கியிருந்தது. இப்போது கட்டி முடிக்கப்பட்ட 10 கழிவறைகள் முன்னாள் போராளிகளுக்கு (முல்லைத்தீவு 5, கிளிநொச்சி 5) வழங்கப்பட்டுள்ளன. ஒரு கழிவறை கட்டுவதற்கு ரூபா 126, 897.75 செலவானது.

இந்தக் கழிவறைகளை வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம், வவுனியா மாவட்டம் (Organization for Rehabilitation of the HANdicapped - Vavunia District) - ORHAN) ஒப்பந்த அடிப்படையில் கட்டி முடித்தது குறிப்பிடத்தக்கது. இந்தத் திட்டம் நல்வாழ்வு அமைச்சர் மருத்துவர் பி. சத்தியலிங்கத்தின் நேரடிக் கண்காணிப்பில் நிறைவேற்றப்பட்டது.

# கிளிநொச்சி கோணாவிலில் நிலவும் குடிநீர்த்தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் குறிப்பிட்ட ஒரு சில பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையில் விரைவில் குடிநீர் விநியோகிக்குமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்று வரை இந்தப்பகுதிக்கான குடிநீர் மேற்கொள்ளப்படாத நிலையில் 210 குடும்பங்கள் தமக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# "பிரபஞ்ச சுருதி" கவிதை நூல் அறிமுக நிகழ்வு இன்று

(கரவெட்டி)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் கரவெட்டிப் பிரதேச செயலக வழிகாட்டலில் உயில் கலை இலக்கிய சங்கம் நடாத்தும் குப்பிளான் ஐ. சண்முகனின் பிரபஞ்சசுருதி (கவிதைத்தொகுதி) அறிமுக நிகழ்வும் கவிதா நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ச. சிவஸ்ரீ தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கவிஞர் சோ. பத்மநாதன் நூல் தொடர்பான உரையினை நிகழ்த்துவார். சி. விமலன், ந. மயூரரூபன், சித்திராதரன் குப்பிளான் ஐ.சண்முகன் ஆகியோரின் உரைகளும் இடம்பெறும். நிகழ்வின் ஒரு அங்கமாக கவிதா நிகழ்வும் இடம்பெறும். இலக்கிய ஆர்வலர்களை உயில் கலை இலக்கிய சங்கத்தினர் அன்புடன் அழைக்கின்றனர்.

# சங்கானை லயன்ஸ் கழகத்தின் மாபெரும் மருத்துவ முகாமும் மூக்குக்கண்ணாடி வழங்கலும்

(சங்கானை)

சங்கானை லயன்ஸ் கழகத்தின் மாபெரும் இலவச மருத்துவ முகாமும் கண் பார்வை குறைந்தவர்களுக்கான கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 10 ஆம் வரணிப் பகுதியின் கரம்பைக் குறிச்சி பொது மண்டபத்தில் மு.ப 10.00 தொடக்கம் 1.00 மணி வரையும், 11 ஆம் திகதி யாழ்பாணம் வலிகாமத்தின் தொல்புரம் சர்வோதய நிலையத்தில் காலை 10.00 தொடக்கம் 1.00 மணி வரையும், 12ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு 2 ஆம் கண்டம், இளந்தளிர் இலவசக் கல்வி நிலையத்தில் முற்பகல் 10.30 தொடக்கம் 1.00 மணி வரையும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சங்கானை லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் ஜெயச் சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் இலவச மருத்துவ சிகிச்சைகள் (சலரோக பரிசோதனைகள், சுவாசம், இதய சமபந்தமான சிகிச்சைகள், தோல் சம்பந்தமான சிகிச்சைகள் குருதி அழுத்தப் பரிசோதனைகள், முடி உதிர்தல் சம்பந்தமான பிரச்சினைகள், மற்றும் ஏனைய மருத்துவ சிகிச்சைகள், ஆலோசனைகள்) நடைபெறுவதுடன், கண் பார்வை குறைந்தவர்களுக்கான கண் பரிசோதனை, கண்ணாடி வழங்கல் மற்றும் மரக்கன்றுகள் நாட்டுதல், தாய், தந்தையரை இழந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்குதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும்.


# ஆடிப்பூரப்பெருவிழாவும் கஞ்சிக்கலய ஊர்வலமும்

(வவுனியா)

வவுனியா பூவரசன்குளம், புலவனாவூர் சுயம்பு அருள்மிகு மேல்மவருத்தூர் ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம் நடாத்தும் 4ஆவது ஆடிப்பூரப் பெருவிழாவும் கஞ்சிக்கலய ஊர்வலமும் பால் அபிசேகமும் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. கஞ்சிக்கலய ஊர்வலம் பூவரசன்குளம் முருகன் கோவிலில் இருந்து காலை 8 மணிக்கு ஆரம்பமாகி புலவனாவூரில் அமைந்துள்ள ஆதிபராசக்தி பூஜை வழிபாட்டு இடத்தில் நிறைவு பெறும் இதனைத்தொடர்ந்து பால் அபிஷேகமும் பூஜையும் நடைபெறும் பி.ப 12.30 மணியளவில் அன்னதானமும் கஞ்சிக்கலசம் எடுப்பவர்கள் மற்றும் கஞ்சிக் கலய ஊர்வலத்தில் பங்கு கொள்ள விரும்பும் சக்திகள் அனைவரும் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பாக பதிவு செய்தல் அவசியம் தொடர்புகளுக்கு சக்தி ராஜி 0771271800 ஆடிப்பூரத்தில் கஞ்சி கலய ஊர்வலமும், நம் கைகளினாலேயே ஆதிபராசக்திக்கு பாலாபிஷேகமும் செய்வது மேல்மருத்தூரில் மட்டுமே காணக் கூடிய ஒரு சிறப்பு அம்சமாகும். இதனை வேறு எந்தக் கோவில்களிலும் காணமுடியாதது குறிப்பிடத்தக்கதாகும். (70)




## உலகநீச்சல் சம்பியன்சிப் பிரித்தானிய வீரர் சாதனை



உலக நீச்சல் சம்பியன்சிப்பின் 50 மற்றும் 100 மீற்றர் மார்தட்டு நீச்சல் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை பெற்ற முதலாவது வீரராக பிரித்தானியாவின் அடம் பிற்ரி சாதனை படைத்துள்ளார்.

ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெறும் உலக நீச்சல் சம்பியன்சிப்பின் 50 மீற்றர் மார்தட்டு நீச்சல் போட்டியில் 20 வயதான அடம் பீற்ரி முதலிடத்தைப் பெற்றார்.

போட்டித் தூரத்தை 26 தசம் 51 செக்கன்களில் அடம் பீற்ரி நிறைவுசெய்தார்.

பூஜ்ஜியம் தசம் 15 செக்கன் பின்னிலை பெற்ற தென்னாபிரிக்காவின் கெமரன் வான் வண்டபேர்க் இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

அமெரிக்காவின் கெவின் கோடர்ஸ் மூன்றாவது இடத்தைப் பெற்றரீர்.


அத்துடன் 4 X 100 மீற்றர் கலப்பு அஞ்சல் நீச்சல் போட்டியில் உலக சாதனை படைத்த பிரித்தானிய குழாமிலும் அடம் பிற்ரி இடம்பெற்றிருந்தார்.

இந்த அஞ்சல் நீச்சல் போட்டித் தூரத்தை பிரித்தானிய குழாம் 41 தசம் 71 செக்கன்களில் நிறைவுசெய்து தங்கப் பதக்கத்தை சுவீகரித்துள்ளது.

இம்முறை சம்பியன்சிப் போட்டிகளில் இதுவரை 10 உலக சாதனைகள் புதிப்பிக்கப்பட்டுள்ளன.

# கப்டன் பதவி என்பது நெருக்கடியான ஒன்றல்ல

## கூறுகிறார் விராட் ஹோலி



விராட்ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக இலங்கை சென்றுள்ளது. இந்தியா–இலங்கை அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி வருகிற 12ஆம் திகதி காலே மைதானத்தில் தொடங்குகிறது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர் குறித்து இந்திய அணி கப்டன் வீராட் ஹோலி கொழும்பில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

கப்டன் பதவியையும் துடுப்பாட்டத்தையும் இரண்டு அம்சங்களாகக் கருதுகிறேன். இரண்டையும நான் ஒன்றாக கலக்கமாட்டேன். கப்டன் பதவியால் எனது துடுப்பாட்ட திறமை பாதிக்காது. கப்டன் பதவியால் கூடுதல் நெருக்கடி எதுவும் எனக்கு இல்லை. இதற்காக எதையும் மாற்ற வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. இந்தியா–இலங்கை இடையேயான டெஸ்ட் தொடர் கடும் போட்டியாக இருக்கும். இரு அணிகளிலும் சிறப்பாக விளையாடக் கூடிய இளம் வீரர்கள் உள்ளனர்.

இலங்கை மண்ணில் இந்திய டெஸ்ட் தொடரை 1993ஆம் ஆண்டுக்குப் பிறகு வென்றது இல்லை என்பதை நான் பெரிதாக கருதவில்லை. எங்களை பொறுத்த வரை சிறப்பாக விளையாடுவதில் தான் ஆர்வத்துடன் உள்ளேன்.

நான் முதல் முறையாக இலங்கையில் ஒருநாள் தொடரில் ஆடிய போது இலங்கை மண்ணில் ஒரு நாள் தொடரை கைப்பற்றி 25 ஆண்டுகள் ஆகிறதே என்று கேட்கப்பட்டது. அப்போது எனக்கு எந்த நெருக்கடியும் ஏற்பட வில்லை. அதேபோல தான் இப்போது எனக்கு எந்த நெருக்கடியும் கிடையாது. நன்றாக விளையாடுவதற்காகவே இங்கு வந்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

# விளையாட்டு சிறு செய்திகள்

## - நடிகராகிறார் ஸ்ரீசாந் -



ஸ்பாட் பிக்சிங் கிரிக்கெட் சூதாட்ட சர்ச்சையில் சிக்கி ஆயுள் தடை விதிக்கப்பட்டு விடுதலையான வேகப் பந்துவீச்சாளர் ஸ்ரீசாந், பெரும் பொருட்செலவில் தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் ஒரே நேரத்தில் தயாரிக்கப்பட உள்ள திரைப்படம் ஒன்றில் கதாநாயகனாக நடிக்க உள்ளார்.



## - பக்னருக்கு அபராதம் -

மது குடித்துவிட்டு கார் செலுத்திய குற்றச்சாட்டில் கைதான அவுஸ்ரேலிய அணி வேகப் பந்துவீச்சாளர் ஜேம்ஸ் பக்னருக்கு, 2 ஆண்டுகள் கார் செலுத்த தடை மற்றும் ரூ.10 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவிற்கு 173 பதக்கங்கள்

## வாழ்த்துக்களைத் தெரிவித்தார் நரேந்திர மோடி

Special Olympics WORLD GAMES LOS ANGELES 2015

லோஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் இந்தியா 173 பதக்கங்களை வென்று அசத்தியுள்ளது. இதற்கு பிரதமர் நரேந்திர மோடி தனது சமூக வலைத்தளத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில், சிறப்பு ஒலிம்பிக் போட்டி ஜீலை 22ம் திகதி முதல் ஆகஸ்ட் 2 ஆம் திகதி வரை நடைபெற்றது. 25 விளை யாட்டு பிரிவுகளின் கீழ் 165 நாடுகளைச் சேர்ந்த 6,500 இற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தியா சார்பில் 275 வீரர்கள் 14 விளையாட்டு போட்டியில் பங்கேற்றனர். 173 பதக்கங்களை வென்று இந்தியா அசத்தியது. இதில் 47 தங்கம், 54 வெள்ளி, 72 வெண்கலப் பதக்கங்களும் அடங்கும். இந்திய ஹோல்ப் வீரர் றன்வீர் சிங் தங்கப்பதக்கம் வென்று ஹோல்ப போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

மேலும் தமிழகம் சார்பில் 50மீ ஓட்டப்பந்தய போட்டியில் தூத்துக்குடி வீராங்கனை செல்வன் வீனார்ஷி வெள்ளிப் பதக்கம் வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது, 12 தமிழக வீரர்கள் பங்கேற்றதில் 11 வீரர்கள் பதக்கம் குவித்து அசத்தியுள்ளனர்.

இவர்களைப் பாராட்டி பிரதமர நரேந்திர மோடி தனது ருவிட்டர் சமூக வலைத்தளத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



பசுபதி சீவரத்தினம்

(ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர்)




## மூன்றாவது இறுதிப் போட்டி ஹைரோவில்



நியூசிலாந்து கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

முதல் போட்டியில் சிம்பாப்வே 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்று அதிர்ச்சி கொடுத்தது.

2ஆவது ஆட்டத்தில் நியூசிலாந்து 10 விக்கெட் வித்தியாசத்தில் வென்று பதிலடி கொடுத்தது.

இரு அணிகள் மோதும் 3ஆவது மற்றும் கடைசி போட்டி ஹைரோவில் இன்று நடைபெறுகிறது வெற்றி பெறும் அணி தொடரை

# ஐ.பி.எல் தொடருக்கு சிக்கல்

## விற்பனைக்கு வருகிறது 3 அணிகள்

ஐ.பிஎல் ரி-20 தொடரில் விளையாடி வரும் டில்லி, பெங்களூர் மற்றும் ஹைதராபாத் அணிகளின் பங்குகள் விற்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2008இல் தொடங்கப்பட்ட இந்தியன் பிறிமியர் கிரிக்கெட் ரி20 தொடரில் சென்னை, மும்பை, கொல் கத்தா உட்பட 8 அணிகள் பங்கேற்றன.

இதில் புதிதாக கொச்சி, புனே அணிகள் சேர்க்கப்பட்டன. பின்னர் ஊதிய பிரச்சனை காரணமாக இந்த அணிகளின் உரிமம் இரத்துச் செய்யப்பட்டது.

தொடர்ந்து டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் ஊதிய சிக்கலில் சிக்க, 2012இல் இதன் பங்குகள் விற்கப்பட்டன.

இந்நிலையில் சூதாட்ட பிரச்சினையில் முன்னணி அணிகளான சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே டில்லி, பெங்களூர் மற்றும் ஹைதராபாத் அணிகளின் பங்குகள் விற்கப்ப டுவதாக செய்திகள் வெளியாகி யுள்ளன.

ஏற்கனவே சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது 3 அணிகளின் பங்குகள் விற்கப்படுவதால் அடுத்த வருடம் ஐ.பி.எல். தொடர் திட்டமிட்டபடி தொடங்குமா என்பதில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.








சுன்னாகம் கண்ணகி காந்தி முன்பள்ளியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மழலைகளுக்கான விளையாட்டுப் போட்டியில் விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றுவதனையும் விநோத உடைப் போட்டியிலும் உடற்பயிற்சி நிகழ்விலும் சிறார்கள் கலந்து கொள்வதனையும் காணலாம். (ப)

# றெயின்போ நேதாஜி கிரிகெட்

## கிண்ணத்தை கைப்பற்றியது றெயின்போ



வல்வை றெயின்போ விளையாட்டுக் கழகத்தினால் வல்வை டொமஸ்ரிக் பிறிமியர் லீக் பிளே ஓப் ஆட்டங்களும் இறுதிப் போட்டிகளும் கடந்தசெவ்வாய்க் கிழமை றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன. இந்த சுற்றுத் தொடரில் 7 அணிகள் பங்கு பற்றிய போதிலும் நான்கு அணிக்ள் பிளே ஓப் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

றெயின்போ விளையாட்டுக் கழகம், சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம், நேதாஜி விளையாட்டுக்கழகம், உதயசூரியன் விளையாட்டுக்கழகம் ஆகிய கழகங்கள் பிளே ஓப் சுற்றுக்கு தெரிவாகின.

இறுதிப் போட்டியில் றெயின்போ விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக்கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் றெயின்போ விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்தத் தொடரின் ஆட்ட நாயகன் விருதை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பிரசாந்தும் அதிக ஓட்டங்களை றெயின்போ விளையாட்டுக்கழக அணி வீரர் பிரகலாதனும் அதிக விக்கெட் எடுத்த வீரராக சைனிங்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜெயக்குமாரும், சிறந்த அனுபவ வீரராக உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கிருஷ்ண குமாரும், வளர்ந்து வரும் இளம் வீரராக உதய சூரியன் விளையாட்டுக் கழக ஜெயகாந்தனும் அதிக சிக் ஸரை அடித்த வீரராக றெயின்போ விளையாட்டுக் கழக வீரர் பிரகலாதனும், இறுதிப் போட்டி நாயகன் விருது றெயின்போ விளையாட்டுக் கழக வீரர் ஜெகனும்,இந்தச் சுற்றுத் தொடரில் FAIR PLAY AWARD - உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி பெற்றுக் கொண்டது.

# வல்வெட்டி கருணாகரனை வென்றது வல்வை அணி



நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் வரிசையில் நேற்று முன் தினம் வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் வல்வை அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவானது.

இந்தப் போட்டிகள் ஊரிக்காடு நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவருகின்றது

விளையாட்டு செய்திகள்

# வேலணை மகளிர் அணியை வென்றது நக்கீரன் அணி



யாழ்.மாவட்ட ரீதியாக மகளிர் அணிகளை ஒருங்கிணைத்து முதல் முறையாக தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் இடம்பெற்ற சுற்றுப் போட்டியில் வேலணை மகளிர் அணியை (சன்ஸ்ரார்) எதிர்த்து நக்கீரன் மகளிர் அணி மோதியது.

இந்தப் போட்டியில் நக்கீரன் விளையாட்டுக்கழகம் ஒரு கோலை பெற்று 1 :0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# பொலிகை பாரதி உதைபந்து யங்கம்பன்ஸ் அபார வெற்றி



(யாழ்ப்பாணம்)

பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் யாழ்.மாவட்ட ரீதியான 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப 4:30 மணியளவில் பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மோதிய கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

யங்கம்பன்ஸ் சார்பாக தர்சன்-2 பிரகாஸ்-2 ரதன் 1 கோல்களையும் பெற்றனர்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



முருகேசு சந்திரகுமார்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

**2016** ஆம் ஆண்டிலை வரும் ஆனால் வராது.

அது என்ன?

60 வருசமாகச் செய்ய முடியாததை அடுத்த வருசம் அதுதான் 2016 ஆண்டிலை

# “வரும் ஆனால் வராது”






பெற்றுத்தருகினமாம் எண்டு சம்பந்தன் சொல்லியிருக்கிறார்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வாம்.

சபாஸ்! சரியான பொய்தானுங்கோ.

முன்னர் லோயர் ஆக இருந்த வர் இப்ப லையர் ஆகிவிட்டார் கண்டியளோ மக்களே!

எலக்சன் டைமிலை தான் இவையளுக்கு தமிழ் மக்களைப் பற்றிய அக்கறை மற்ற டைமிலை இவையளுக்கு அக்கரைச் சீமைக்குப் பறந்து போவதில்தான் அக்கறை..

பலவற்றை மறந்துபோனாலும் இவையளின்ட இரட்டை முகங்கள் பற்றி சிலவற்றைச் சொல்லத்தான் வேணும்.

சம்பந்தன் அவர்கள் தமிழ் மக்களுக்கு சம்பந்தன் ஆகவும் சிங்களத் தரப்பினர் மத்தியில் சாம் என்றும் அன்பாக அழைக்கப் படுபவர்... சுதந்திர தினக் கொண் டாட்டத்திலும் கலந்துகொள்வார் சிங்கக் கொடியையும் தூக்குவார்.

தமிழர் பகுதிகளுக்கு வந்தவு டன் சிறுத்தைபோல சீரியசாகப் பாய்ந்து சிறுபான்மையினருக்கு அநீதி நடக்குது என்பார். அதுமட்டுமில்லை அந்தப் பக்கத்திலை சம்பந்தம் செய்து சம்பந்தியாகவும் உள்ளார்.

1977 ஆம் ஆண்டுலை இருந்து சம்பந்தன் எம்.பி.யாக இருக்கிறார். அந்த ஆண்டிலை நடந்த எலக்சனிலை சொல்லிச்சினம் வடக்கு-கிழக்கிலை எங்களை வெற்றிபெறச் செய்தால் தமிழ்ஈழம் எண்டு சொல்ல அதை நம்பி எங்கட பெடியளும் இவையளின்ட வெற்றிக்காக கடுமையாக உழைச்சவை.

காரணம் தமிழ்ஈழம் எடுத்துத் தருவினம் எண்டு. அதற்காகத் தேர்தல் கூட்டங்களிலை தங்கள் கைகளை பிளேட்டினால் வெட்டி அந்த இரத்தத்தால் அவையளுக்கு பொட்டும் வைச்சோம். இரத்தப்பொட்டு வாங்கியவர்களில் இந்த மாவை சேனாதியும் ஒருவர் அவரிட்டக் கேட்டுப்பாருங்கோ மகாசனங்களே!.

இவையளின்ட வீரப்பேச்சுக்களால் தமிழ் மக்கள் அள்ளிப்போட்டினம் அவை கேட்டதைவிட கூடுதல் இடங்கள் கிடைச்சுது. பார்லிமென்டிலை பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்தும் கிடைச்சுது. என்ன நடந்தது... நம்பி வாக்குப்போட்ட மக்களை ஏமாத்திப்போட்டு கம்பி நீட்டினவை.

அவையளுக்கு கிடைச்ச இதமான வாகனத்திலை பதமாகப் பவனி வர இதைப் பார்த்து கவலையும் மன வருத்தமும் அடைந்த எங்கட பெடியள் யாழ்ப்பாண மதில்களில் இப்படி எழுதினார்கள் “கேட்டது தமிழ் ஈழம் கிடைச்சது யப்பான் ஜீப்” (Japan Jeep).

பாவிகள் பலர் உண்டு பதவியி-லேயே அப்பாவிகள் சிலர் உண்டு சிறையினிலே. பாவம் நல்லாப் படிச்ச பெடியள் எல்லாம் எதிர்காலத்தை துலைச்சு இவையளின்ட சூடேற்றத்தால சிறைக்கும் சித்திரவதைக்கும் உட்பட்டுச் சீரழிந்து சின்னாபின்னமானார்கள்.

பிறகு சொல்லிச்சினம் அடுத்த பொங்கலுக்கு தமிழ்ஈழம் கிடைக்கும் எண்டு... வரும் என்பார்கள் ஆனால் பிறகு வராது.

இந்த 2005 ஆண்டு பிற்பகுதியிலை என நினைக்கிறேன். சம்பந்தன் பார்லிமெண்டிலை அடிச்சுச் சொன்னவர் அடுத்த தேர்தல் தமிழ் ஈழத்திலைதான் நடக்கும். அவர் மறந்தாலும் மறைச்சாலும் பார்லிமென்டிலை உள்ள உரையை - அதுதான் கன்சாட் சாட்சி சொல்லும் பாருங்கோ...

தமிழ்மக்களுக்கு கனகாலமாக கம்பி நீட்டினவை பிறகு சொல்லிச்சினம் கொஞ்சம் மாற்றி லேட்டஸ்சாக பெரிய பொய்யாக “சர்வதேசம் உன்னிப்பாகப் பார்க்குது” எண்டு சொல்லி எம்.பி ஆகினவை. கடைசியாக அவையள்தான் சர்வஉதயமும் பெற்று சர்வதேச நாடுகளுக்கு சுற்றித்திரியினம். தமிழ்மக்களின்ட காதிலை பூ சுத்திப் போட்டினம்.

1977 இல் கம்பி நீட்டத் தொடங்கினவை கண்டியளோ இப்ப 2015வரை கொண்டினியு பண்ணுகினம். கம்பி நீட்டுவதும் காதிலை பூ சுத்துவதும் இவர்களின் வாடிக்கை. எலக்சன் காலத்திலை அதுவரும் இதுவரும் எண்டு வேடிக்கை காட்டுவார்கள்.

ஆட்டிப்படைக்கலாம் ஆட்டிப்படைக்கலாம் எண்டு இப்பிடிச் சொல்லியே அங்க கொழும்பிலை பாட்டி வைச்சு கொண்டாடுகிறது. எலக்சன் வருகுது எண்டதோடு தங்களின்ட டிரக்சனை மாத்திப்போட்டு வாக்குகளை அள்ளிக்கொண்டது மட்டுமில்லை தேசியம் எண்டு சொல்லிச் சொல்லியே தமிழ்மக்களை அழிச்சுப் போட்ட இந்த கூட்டமைப்பு அழிவைத் தவிர என்னத்தைப் பெற்றுத் தந்தினம்.

ஆமியை அகற்றினார்களா? அகதிகளைக் குடியேற்றினார்களா? இல்லாவிட்டால் அல்லல்படும் எம்மக் களுக்கு வயிறு ஆற உணவளிக்கும் வழியைக் காட்டினார்களா?

இவ்வளவு காலமும் எலக்சனுக்காக வாக்குகளை நீங்கள் அள்ளிப்போட அவையளுக்கு கதிரையும் நல்ல கலக்சனும் கிடைக்க பிளேன் ஏறி தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகினம் எண்டு நீங்கள் நினைக்க அவையளோ தம்மக்களை தரிசிக்க - அதுதான் தங்களின்ட பிள்ளைகள் பேரப்பிள்ளைகளைகளோட கூடிக் குலாவிப்போட்டு வருகினம்.

பேப்பரில ரிவியில காட்டவும் தமிழ்மக்களுக்கு கணக்குவிடவும் இரண்டு வெள்ளைக்காரரோட நிண்டு படம் எடுத்துப்போட்டு கதைவிடுவினம்.

இப்பிடிக் காலம்காலமாக கதைவிட்டு விட்டுக் காலத்தை ஓட்டுகினம் கண்டியளோ!

ஒருக்கா யோசிச்சுப் பாருங்கோ... இவ்வளவு ஆண்டுகளாக பாராளுமன்றப் பதவியை வைச்சிருக்கின்ற இவையள் ஏறாத பிளேன் இல்லை கதைக்காத சந்திக்காத வெளிநாடுகள் இல்லை... மக்களை இரத்தம் சிந்த வைத்ததைத் தவிர எதனைப் பெற்றுத்தந்தார்கள்.

அந்த இரத்தமும் அவையளின்ட பிள்ளைகளின்ட இல்லை.

எலக்சனுக்குப் பிறகு இவர்கள் செலக்சன் ஆகினபிறகு ஒண்டும் வராது.

60 வருசமாக இவர்கள் சொல்லுகினம் வரும் வரும் என்பார்கள். ஆனால் வராது. வடிவேல் கொமெடி மாதிரி வரும் ஆனால் வராது எண்டதுதான் எங்கள் நிலைமை.

60 வருசம் ஆனால் என்ன 600 வருசம் போனாலும் வரும் என்பார்கள் ஆனால் வராது.

தமிழ் மக்களுக்கு மாற்றம் வராது ஏமாற்றம்தான்.

**- பென்சனியர் பேரம்பலம்**



# பாடல் பிறந்த கதை!

**இ**ளையராஜா கேட்டு வாங்கிய மெட்டு!

1980களில் வெளியான “மெல்லத் திறந்தது கதவு” படத்திற்காக இளையராஜா எம்.எஸ்.வி.யுடன் இணைந்து பணியாற்றிய நேரம்.

அப்போது ஒருநாள், இளையராஜா, எம்.எஸ்.வி.யிடம் “சண்டிராணி” படத்தில் கண்டசாலாவும், பானுமதியும் இணைந்து பாடும் “வான்மீதிலே” என்ற இனிமையான பாடலைக் கொடுத்திருந்தீர்கள், அதே போன்ற ஒரு மெட்டில் இந்தப் படத்திற்கும் ஒரு பாடலைத் தாருங்களேன்” என்று கேட்க, அவருக்காக, எம்.எஸ்.வி மெட்டுப் போட்ட பாடல்தான் “வா வெண்ணிலா” என்ற பாடல்.

அன்றைய வான்மீதிலே, இன்று வா வெண்ணிலா ஆகிவிட்டது.

மெட்டு - அதே மெட்டுதான்.

அச்சம் என்பது மடமையடா!

“நான் மனச் சோர்வாய் இருக்கும்போது இந்தப் பாட்டைப் போட்டுக் கேட்பேன். மனச் சோர்வு மறந்துவிடும். புத்துணர்வு பிறந்துவிடும்““ என இந்தப் பாடலின் மந்திரசக்தி பற்றி ஒருமுறை எம்.ஜி.ஆர். குறிப்பிட்டிருந்தார்.

இத்தகைய மந்திர சக்தி மிக்க துடிப்பான மெட்டை எம்.எஸ்.வி எங்கிருந்து கண்டுபிடித்தார்?

அதற்கு எம்.எஸ்.வி. சொன்னபதில்:

“அது அபூர்வராகமோ, எனது அரிய கண்டுபிடிப்போ அல்ல! அனைவருக்கும் தெரிந்த மெட்டுதான் “ரகுபதி ராகவ ராஜாராம்” என்ற பஜனையின் இழைகளை எடுத்து 1 கட்டை சுருதியில் ஒரு புது நெசவு நெய்தேன். அதுதான் குதி நடைபோடும் “அச்சம் என்பது மடமையடா”!

என்ன என்ன தந்திரங்களோ?

1965 இல் வெளியான ஸ்ரீதரின் “வெண்ணிற ஆடை” படத்தில் “என்ன என்ன வார்த்தைகளோ?” என்ற பாடலைப் பாடிக் கொண்டு ஜெயலலிதா ஆடுவது போலவும், ஸ்ரீகாந்த் பியானோ வாசிப்பது போலவும் ஒரு காட்சி வருகிறது.

அப்பாடலுக்கான பியானோ இசையை இசைத்தவர், எம்.எஸ்.வி.யின் உதவியாளரான ஜோசப்கிருஷ்ணா.

குளோசப்பில் காட்டப்படும், பியானோ வாசிக்கும் விரல்கள், எம்.எஸ்.வி.யின் விரல்கள். பியானோ வாசிப்பது போல் நடித்தவர்: நடிகர் ஸ்ரீகாந்த்.

**- எம்.எஸ்.வி.யின் பேட்டியிலிருந்து.**

# உலகம் சுற்ற ஆசை!



**அ**மெரிக்காவைச் சேர்ந்த, அல்.:.பிரட் போடெல் என்பவருக்கு, 78 வயதாகிறது. ஆனால், இவர் தன் வாழ்நாளில், 50 ஆண்டுகளை, வெளிநாடுகளைச் சுற்றிப் பார்ப்பதற்காகவே செலவிட்டுள்ளார். இதுவரை, 196 நாடுகளைச் சுற்றிவந்து விட்டார்.

பாகிஸ்தானுக்குச் சென்றபோது, இந்திய உளவாளி என்று சந்தேகித்து, இவரைச் சிறையில் அடைத்து விட்டனர். இதேபோன்று கியூபாவுக்குச் சென்றபோதும் சிறைவாசத்தை அனுபவித்தார். ஏமனுக்குச் சென்றபோது, கொரில்லா குரங்குகளிடம் கடி வாங்கினார். ஸ்பெயினில் எருதுகள் முட்டியதால் காயமடைந்தார்.

அடர்ந்த வனப் பகுதிகளுக்குச் சென்றபோது, சாப்பிட எதுவுமே கிடைக்காமல், பாம்பு, பல்லி மற்றும் பூச்சிகளைச் சாப்பிட்டு உயிர் வாழ்ந்துள்ளார். ஆனாலும், இவரின் சுற்றுலா ஆர்வம் மட்டும் இன்னும் குறையவில்லை. “கடைசி மூச்சு இருக்கும் வரை, சுற்றிக் கொண்டே இருப்பேன்...” என்கிறார், இந்த அதிசய மனிதர்.

# தாய்ப்பால் மகத்துவம்!

- என்.கங்கா, குழந்தை நல மருத்துவர்.



ஒவ்வோர் ஆண்டும் உலகீ தாய்ப்பால் வாரம் ஆகஸ்ட் முதல் வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்குத் தேவையான புரதங்கள், அத்தியாவசிய கொழுப்புச் சத்துக்கள் தாய்ப்பாலில் மட்டுமே அதிக அளவில் உள்ளன. எனவே குழந்தை பிறந்த அரைமணி நேரத்திற்குள் தாய்ப்பால் தர வேண்டும், அறுவைச் சிகிச்சையில் பிறந்த குழந்தைக்கு இரண்டு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் தரவேண்டும், நேரம் கடந்து தந்தால் பால் சுரப்பது குறைய ஆரம்பிக்கும். முதல் இரண்டு, மூன்று நாட்களில் சுரக்கும் பால், சீம்பால் எனப்படும். இது குழந்தைகளுக்கு ஓர் அருமருந்து. ஒரு தாய் தன் குழந்தைக்குத் தரும் சீதனமே இந்த சீம்பால் ஆகும். குழந்தைக்குப் போடும் முதல் தடுப்பு மருந்து என்றும் இதைச் சொல்லலாம். எனவேதான் தாய்மார்களுக்கு விழிப் புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆகஸ்ட் முதல் வாரம் தாய்ப்பால் வாரமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

சிவபாத இருதயருக்கும், பகவதி அம்மை யாருக்கும் சிவபெருமானின் ஆசியால் பிறந்தவர் ஆளுடையபிள்ளை என்னும் ஞானசம்பந்தர்.

ஒருநாள் குளத்தில் நீராடச் சென்ற தந்தை, குளக்கரையில் குழந்தையை அமர வைத்துவிட்டு, குளத்தில் மூழ்கினார். தந்தையைக் காணாமல் தெய்வக் குழந்தை பயந்து அழத் தொடங்கியது.

அக்குழந்தையை ஞானக் குழந்தையாக்க திருவுளம் கொண்டார் கயிலைநாதன். பெரியநாயகி அம்மையுடன் வெள்ளை விடையின் மேல் ஏறி பொய்கையின் அருகில் காட்சி அளித்தார்.

பெரியநாயகியைப் பார்த்து அழும் பிள்ளைக்கு "உனது முலைப்பாலை பொன் கிண்ணத்தில் வார்த்து இப்பிள்ளைக்கு ஊட்டுக" என்றார்.

அழுகின்ற குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டுவது இயற்கை நிகழ்வு! இது தெரிந்த கதைதானே என்று எளிதில் ஒதுக்கிவிட முடியாது. இந்த நிகழ்வில் பல அறிவியல் உண்மைகள் இருக்கின்றன.

1. குழந்தை அழும்போதெல்லாம் தாய் உடன-டியாகப் பாலூட்ட வேண்டும்.

2. வயிற்றுப் பசி இல்லாவிட்டாலும் கூட, அழும் குழந்தைக்குப் பாலூட்டும்போது கிடைக்கும் ஓர் அக்கறை, பாதுகாப்பு உணர்வு குழந்தையின் உணர்வுகளுக்கு உணவாகி அழுகை நிற்கும்.

3. குழந்தையின் அழுகுரல் செவி மடுத்த உடன் தாய்க்குப் பால் பெருகி வழியும் என்பது அறிவியல் ஆராய்ச்சி முடிவு.

4. பெற்ற தாய் பாலூட்ட முடியாத சூழ்நிலையில் மற்ற மகளிரும் தாய்ப்பால் ஊட்டலாம் என்பது தற்கால அறிவியல் கருத்து. சில கிராமங்களில் பாலூட்டும் பெண்கள் இருந்திருக்கிறார்கள்.


5. குழந்தைகளுக்கு 3 வயதிலும் தாய்ப்பால் ஊட்டலாம் என்ற கருத்தும் இதில் சொல்லப்பட்டு உள்ளது. உலக சுகாதார நிறுவனம், மற்றும் ஐ.நா. சபையின் குழந்தைகள் கூட்டமைப்பு போன்ற அமைப்புகள் குழந்தைக்கு 2 - வயது முடியும் வரையும் அதற்கு மேலும் தாய்ப் பால் கொடுக்கலாம் என்றுதான் காலக்கெடுவை வரையறுக் கிறது. தாய்க்கும் குழந்தைக் கும் சாத்தியமானால் நீண்ட காலம் தாய்ப்பால் தரலாம் என்பது அடிப்படைக் கருத்து

6. ஏதோ சில காரணங் களால் தாயின் மார்பில் குழந்தைக்குப் பால் ஊட்ட முடியவில்லையானால் சுத்த மான உலோகக் கிண்ணங்களில் தாய்ப்பாலைக் கறந்து எடுத்து குழந்தைக்குப் புகட்டலாம் என்கிறது தற்கால அறிவியலும். கறந்த பாலை சுமார் 8 மணி நேரம் ஒரு சுத்தமான இடத்தில் வைத்துப் பயன்படுத்தலாம். குளிர்பதனப் பெட்டியில் 24 மணி நேரம் வைத்துப் பயன்படுத்தலாம்.

குறை மாதக் குழந்தை, எடை குறைந்த குழந்தை, நோயுற்ற சிசு ஆகியோருக்கு இந்த முறை பயன் படுகிறது. இதன் அடிப்படையில்தான் தாய்ப்பால் வங்கிகள் அமைக்கப்படுகின்றன. சீர்காழியில் இன்றும் முலைப்பால் திருவிழா வெகு விமரிசை யாகக் கொண்டாடப்படுகிறது.

தாய்ப்பால்தான் முதல் உணவு!
தாய்ப்பால்தான் முதல் உணர்வு!
தாய்ப்பால்தான் முதல் தடுப்பு மருந்து!

# வாழையடி வாழையாக...



உலகில் ஒரு நாடு பாக்கியில்லாமல் எல்லா நாடுகளிலும் கிடைக்கும் பழம் என்றால் அது வாழைப்பழம் தான். அதுமாத்திரமின்றி, இருக்கின்ற பழங்களிலே சாமானியனும் வாங்கிப் புசிக்கக்கூடிய மலிவான பழமும் வாழைப்பழம்தான்.

அதேநேரத்தில் இந்த மலிவான வாழைப்பழத்தில் விற்றமின் ஏ, விற்றமின் பி6, விற்றமின் சி, மக்னீசியம், பொற்றாசியம், இரும்புச்சத்து போன்ற பல்வேறு சத்துப் பொருட்கள் அடங்கியிருப்ப தால், அது வாய்க்கு ருசியாக மட்டுமின்றி பல நோய்களுக்கு நிவாரணியாகவும் திகழ்கிறது.

உஸ்ண வலய நாடுகளில் உணவு உட்கொண்ட பின்னர், அதன் துரித செரிமானத்துக்காக ஒரு வாழைப்பழம் உண்பது ஒரு வழமையாக இருந்து வருகிறது. அதற்காக இலங்கை, இந்திய நாடுகளில் சந்திக்குச் சந்தி "வாழைப்பழக் கடை" இருப்பதைக் காண முடியும்.

வாழையின் பழம் மட்டுமல்லாது, அதன் எல்லாப் பாகங்களுமே பயன்படக்கூடியன. வாழையின் நடுவிலுள்ள தண்டின் சாறு சிறுநீரகக் கற்களை நீக்குவதுடன், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் என்பனவற்றின் செயற்பாட்டையும் அதிகரிக்கும் தன்மை வாய்ந்தது. வாழைப்பூ நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு மிகச் சிறந்த உணவாகும்.

நம்மில் பலர் வாழை இலையில் சாப்பிடுவதற்கு மிகவும் பிரியப்படுவ துண்டு. அப்படிச் சாப்பிடுவதைச் சிலர் தமிழர்களின் பண்பாடு எனக் கருதுகின்றனர். இன்னும் சிலர் விரத நாட்களில் அப்படிச் சாப்பிடுவது புண்ணியம் என்று கருதுகின்றனர். எப்படிக் கருதிச் சாப்பிட்டாலும், அந்த இலையில் சாப்பிடுவது மருத்துவ ரீதியில் உடலுக்கு ஆரோக்கிய மானது என்பதுதான் அதன் அடிப் படை உண்மை. அதுவும் சுடு பதார்த்தங்களை வாழை இலையில் போட்டுச் சாப்பிடும் போது, இலை யின் மருத்துவத் தன்மையை அந்த உணவு சுவீகரித்து எமக்கு வாழையடி வாழையாக" வழங்குகிறது என்ற உண்மை ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், எம்மைப் போன்ற உஸ்ண வல்ய நாடுகளில் அம்மை நோய் கண்டவர்களை குளிர்ச்சிப் படுத்துவதற்காக வாழை இலைகளில் படுக்க வைப்பதும் ஒரு மரபாக இருந்து வருகிறது. வாழை நாரிலும் பல்வகைப் பயன்பாடு உள்ளது. எமது நாடுகளில் வாழை நாரை கயிறாகப் பயன்படுத்துகிறோம். அல்லது கொடி (பட்டம்) ஏற்றும் போது அதில் பூட்டும் விண்ணுக்கு நாராகப் பயன்படுத்துகிறோம். ஆனால் யப்பானியர்கள் வாழை நாரிலிருந்து அழகான பட்டுத் துணிகளை நெய்கி றார்கள். சில நாடுகளில் வாழை நாரிலிருந்து காகிதமும் செய்கிறார்கள்.

வாழையின் வேர்களும் மருத்துவத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. வாழை கூடுதலாக ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளிலேயே செய்கை பண்ணப்படுகிறது. தென் அமெரிக்காவிலுள்ள கௌத்தமாலா என்ற நாட்டுக்கு "வாழைப்பழ நாடு" என்றொரு காரணப் பெயரும் உண்டு. குளிர் நிறைந்த மேற்கு நாடுகளில் வாழைச் செய்கை சாத்தியமில்லை. அந்த நாடுகள் தமக்குத் தேவை யான வாழைப்பழத்தை இறக்குமதி மூலமே பெற்றுக் கொள்கின்றன. அதிலும் ஒருசில ரகங்களே அங்கு கிடைக்கின்றன.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஏராளமான வகை வாழை இனங்கள் செய்கை பண்ணப்படுகின்றன. இந்தியாவில் ஏலக்கி, கதலி, பேயன், அடுக்குவாழை, செவ்வாழை, மட்டி, பச்சை, மலைவாழை, கற்பூரவல்லி, ரஸ்தாளி, மொந்தன், நேத்திரம் என்பன பிரசித்தமானவை.

அதேபோல, இலங்கையில் கதலி, கப்பல், இதரை, யானை, செவ்வாழை, மருத்துவ வாழை, நேத்திரா, பன்றி, சீனிக்கதலி, ரப்பர் வாழை என்ற ரகங்கள் பிரபல்யமானவை. கறி சமைப் பதற்காக இலங்கையில் சாம்பல் மொந்தன், பச்சை மொந்தன் என்ற இருவகை வாழையினங்களைப் பயிரிடுவார்கள்.

ஒவ்வொரு வழையினமும் ஒவ்வொரு வகையான ருசியைக் கொடுப்பதுடன், வெவ்வேறு மருத்துவக் குணங்களையும் கொண்டிருக்கின்றன. வாழை இயற்கையின் ஒரு அதிசயமான கொடை.

- சீனியர் -

# யார் புத்திசாலி?



ஒரு நாள் கார்ச் சாரதி தன் வண்டியை எடுத்துக் கொண்டு வேலைக்கு கிளம்பி னார். சிறிது தூரம் சென்றதும் அவர் கார் டயர் காற்றுப் போய்விட்டது. அந்த இடம் ஒரு மனநல மருத்துவமனைக்கு அருகில் இருந்தது. சுற்றும் முற்றும் ஏதாவது மெக்கா னிக் கடை இருக்கிறதா? என்று பார்த்தார். எதுவுமே இல்லாததால் அவரே அந்த டய ரைக் கழட்டி ஸ்டெப்னி மாத்தலாம் என்று முடிவெடுத்து நட்டைக் கழட்ட ஆரம்பித்தார்.

நான்கு நட்டுகளையும் கழட்டி வைத்து விட்டு ஸ்டெப்னி எடுத்து வரச் சென்றார். ஸ்டெப்னி எடுத்து வரும் போது அவர் கால் இடறி நான்கு நட்டுகளும் அருகில் இருந்த கால்வாயில் விழுந்துவிட்டது. எப்படி எடுக்கலாம் என்று யோசித்து கொண்டு இருந்தார்.

அப்போது "ஏதாவது பிரச்சினையா?" என்று ஒருவர் வந்தார்.

அவரைப் பார்த்த சாரதி மனநல மருத்துவமனையின் நோயாளி இவர், எப்படியாவது இவரை சாக்கடையில் இறக்கி நட்டுகளை எடுத்துவிட வேண்டும் என்று முடிவெடுத்து நடந்த கதையை அவரிடம் கூறினார்.

உடனே அந்த நபர், "மற்ற மூன்று சக்கரங்களில் இருந்து தலா ஒரு நட்டைக் கழற்றி, இந்த சக்கரத்தில் மாட்டி, அருகில் உள்ள மெக்கானிக் கடையில் 4 நட்டுகள் வாங்கி அனைத்து சக்கரத்திலும் மாட்டிக் கொள்" என்று ஆலோசனை சொன்னார்.

"இவ்வளவு தெளி-வாக இருக்கிறீங்களே? நீங்கள் எப்படி இந்த மருத்துவமனையில்..." என்று கேட்டார்.

"இந்த மருத்துவமனையில் இருக்கிற எல்லோரும் முட் டாள்களும் இல்லை, வெளியில் இருக்கிற எல்லோரும் புத்தி[illegible] இல்லை" என்றார் மனநல நோயாளி.

தோற்றத்தை வைத்து மட்டும் நாம் எதையும் முடிவு செய்யமுடியாது.

# வரலாற்றுப் புகழ்மிக்க காவலூர் அன்றும் இன்றும்

இலங்கையின் வடமாகாணத்தில் பண்டைய சிறப்புமிக்க துறைமுகமாக விளங்கியது ஊர்காவற்றுறையாகும். லைடன் தீவு என ஒல்லாந்தரால் அழைக்கப்பட்ட இத்தீவின் வடமேற்கில் ஊர்காவற்றுறை அமைந்துள்ளது. லைடன் தீவு வேலணைத் தீவு எனவும் அழைக்கப்படுகிறது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் வரலாற்றுக் குறிப்பொன்று இதை தணதீவு எனக் குறிப்பிடுகிறது. கிறிஸ்துவுக்கு முன் ஆறாம் நூற்றாண்டிலிருந்தே ஊர்காவற்றுறை துறைமுகமாக இருந்தது எனச் சரித்திர ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் இது துறைமுகமாக இருந்தது என வரலாறுச் சான்று பகருகிறது. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன் தென் இலங்கை அரசனான ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாண அரசை வெற்றிகொண்டு ஊர்காவற்றுறை துறைமுகத்தில் ஆதிக்கஞ் செலுத்தியதாகக் கூறப்படுகிறது. காலகதியில் அது ஒரு துறைமுக நகரமாக உருவெடுத்தது.

## ஊரின் பெயர் எப்படி உருவாகியது?

ஊரைக் காவல் செய்கின்ற வகையில் இந்த துறைமுகம் அமைந்திருந்தமையால் ஊர்காவற்றுறை என பெயர் வந்தது என்பர். ஊரான் தோட்டம் என முன்பு வழக்கில் இருந்த பெயர் சிங்களத்தில் "ஊறாதொட்ட" என வந்தது என்பர். பன்றிகள் ஏற்றிய துறை என்ற காரணத்தால் ஊறாதொட்ட எனப் பெயர் வந்தது என்று சொல்பவருமுளர். ஆனால் யானைகள் இத்துறைமுகத்தினூடாக ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உள. இப்பொழுது ஆங்கிலத்தில் கயிற்ஸ் என வழங்கப்படும் பெயர் ஆங்கிலேயரால் சூட்டப்பட்டது என்பர். ஆய்வுகளின்படி இது போர்த்துக்கேய சொல்லில் இருந்து மருவி வந்தது எனத் தெரிகிறது. போர்த்துக்கேய மொழியில் கேயிஸ் என்றால் துறைமுகம் என்பது பொருள். அதிலிருந்தே பின் கயிற்ஸ் என்ற பதம் ஆங்கிலத்தில் மாற்றி அமைக்கப்பட்டிருக்கலாம் என்று விளக்கம் தரப்படுகிறது.

வடபகுதியில் அமைந்துள்ள ஒரு இயற்கைத் துறைமுகம் ஊர்காவற்றுறை ஆகும். வடகீழ், தென் மேல் பருவகாலங்கள் இரண்டிலும் பாதுகாப்பான துறையாக இது விளங்குவது விசேட அம்சமாகும். பன்னெடுங்காலமாக காவலூர் கடல் வணிகத்தில் சிறந்து விளங்கியது. தமிழ் நாட்டுடன் நெருங்கிய தொடர்பிருந்தமையால் அந்நாட்டுத் துறைமுகங்கள் வரை சென்று பண்டமாற்று வணிகஞ் செய்திருக்க வாய்ப்பிருந்தது.

பட்டுக்கோட்டைச் செட்டிமாரின் செல்வாக்கினால் காவலூரிலும் கப்பல் கட்டும் தொழில், படகுத்துறைத் தொழில் என்பன விருத்தி அடைந்தன. பலர் வேலைவாய்ப்புப் பெற்றதோடு மாலுமிகளாகவும், கப்பல் உரிமையாளராகவும் மிகுந்த உச்ச நிலையில் இருந்தனர். யுத்தகாலப் பஞ்ச நிலைமைகள் காவலூரை அவ்வளவாகப் பாதிக்கவிலை. காவலூர் அரிசிக் களஞ்சியமாக இருந்ததால் அரிசிக்கும் பஞ்சம் இருக்கவில்லை.


அறுபதுக்குப்பின்




சப்த தீவு மக்களும் சங்கமமாகும் இடம் காவலூராகவே இருந்தது. 1960 ஆம் ஆண்டுவரை நெடுந்தீவு உட்பட அனைத்துத் தீவு மக்களும் ஊர்காவற்றுறைத் துறைமுகம் வந்துதான் காரைநகர் ஊடாக யாழ்ப்பாணம் சென்றனர். ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையே அனைவருக்கும் மருத்துவப் பணிக்கு நடு நிலையமாய் இருந்தது. பொலிஸ் நிலையம், நீதிமன்றம் என்பன காவலூர் பட்டினத்திலேயே இருந்தன. இதன் காரணமாக நீதித்துறை சார்ந்த சகல தேவைகள்,சட்டத்தோடு தொடர்புடைய குற்றவியல் விசாரணைகள், வழக்குகள் அனைத்தும் காவலூரில் இடம்பெற்றமையால் நீதிமன்றம் கூடும் நாட்களில் தீவுப்பகுதி மக்கள் இங்கு கூடுவது வழக்கம். அதனால் ஊர்காவற்றுறைச் சந்தை எப்பொழுதும் கலகலப்பாகவே காணப்படும். 1950ஆம் ஆண்டுவரை காவலூர் சுங்கப்பகுதி கொழும்புக்கு அடுத்ததாக வருமானத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தது. சுங்கப்பகுதியில் அநேக மக்கள் வேலை வாய்ப்பைப் பெற்றனர். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நல்லினக் காளை மாடுகளும்,ஆடுகளும் காவலூரின் மேற்கில் உள்ள மாட்டுக்காலை எனப்படும் தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு நோய்த்தடுப்புச் செய்யப்பட்ட பின்னரே விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டன. மிருகங்களுக்கு மாத்திரமல்ல, மனிதர்களுக்கான அம்மை நோய்த் தடுப்பு முகாமும் மாட்டுக்காலையை அண்மித்த ஊர்காவற்றுறை மேற்குப் பிரதேசத்தில் அமைந்திருந்தது. சுகாதார வைத்தியப் பகுதியினர் இத்தடுப்பு நிலையத்தைப் பராமரித்து வந்தனர்.


## ஊர்காவற்றுறை கடல்கோட்டை

கரையில் உள்ள போர்த்துக்கேயரின் பழங்கோட்டையைவிட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இன்னுமோர் வரலாற்று மீதி ஊர்கவற்றுறைக்குப் பெருமை தருகிறது. காவலூருக்கும் காரைநகர் கடற்படைத் தளத்துக்குமிடையில் அமைந்துள்ள கடற்கோட்டை இலங்கையில் காணக்கூடிய மிக அபூர்வமான வரலாற்று மூலமாகும். ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட இக் கடற்கோட்டை "ஹமன்ஹீல" என அழைக்கப்படு கிறது. 1990ம் ஆண்டுக்குப் பின் அது கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

ஊர்கவற்றுறையின் பூர்வீகக் குடிகள் எங்கிருந்து வந்தார்கள், எப்போ இங்கு குடியேறினார்கள் என்று திட்டவட்டமாகக் கூற முடியாது போயினும், ஒரு சில பகுதியாவது தென் இந்தியாவிலிருந்து மன்னாரில் குடியேற்றப்பட்டு, அங்கிருந்து பூநகரி, யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, கோவளம், நாவாந்துறை, சாட்டி, அல்லப்பிட்டி, நாரந்தனை, ஊர்காவற்றுறை முதலிய இடங்களில் காலகதியில் குடியேறினார்கள் என்று அனுமானிக்க இட்டமிருக்கிறது.

இப்பூர்வீகக் குடிகள் அனைவரும் சைவ சமயத்தவர்களே. 1600ஆம் ஆண்டிலேயே வேதவித்து ஊர்காவற்றுறையில் வேரூண்டப்பட்டது. எனவே அதற்கு முந்திய காலப் பகுதியில் இங்கு சைவ சமயமே தழைத்தோங்கி இருந்தது.

ஊர்காவற்றுறை கடல்கோட்டை



புனித அந்தோனியார் ஆலயம்



## ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஆதிக்குடியேற்றம்



கிராம சேவகர் பணிகளை இலகுவாக்க தற்பொழுது மேற்கொள்ளப்பட்ட பரவலாக்கற் பிரிவுகளின்படி உருவாக்கப்பட்ட கரம்பொன் வடக்குப் பிரிவு ஊர்காவற்றுறை மேற்கை அடுத்த பகுதியாகும். மாட்டுக்காலையை அண்மித்த கரம்பொன் வடக்குப் பகுதியே ஆதிக் குடியேற்றப் பகுதியாகக் கருதப்படுகிறது. ஊருண்டி என முன்னர் அழைக்கப்பட்ட இப்பகுதியே முதன் முதலில் மக்கள் செறிந்து வாழ்ந்த பகுதி என்பது ஆய்வாளர் கருத்தாக இருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணரான கலாநிதி பொ.இரகுபதி மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். அவரது ஆய்வுக் குறிப்புகளின்படி இப்பகுதி செம்மண் கலந்த பூமியாக இருந்தது என்றும் மக்கள் இங்கு குடியேறியிருந்தமையினாலேயே போர்த்துக்கேயர் இப்பகுதியில் ஒரு கோட்டையைக் கட்டினார்கள் என்றும் தெரிய வருகிறது. அந்தக் கோட்டை சிதைந்த நிலையில் இன்றும் பழங்கோட்டை என அழைக்கப்பட்டு வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன் இக்கோட்டைப் பகுதியில் யாழ். திருமறைக் கலா மன்றத்தினர் திருப்பாடுகளின் காட்சியை (யேசு சிலுவையில் மரித்த காட்சியை) ஒளிப் படமாக்கியது குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசம் கல்வாரி மலையை ஒத்திருந்தமை இந்தப் புனித நிகழ்வை காட்சிப்புலமாக்க உதவியது.

# யாழில் உருளை செய்கையை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை



(அச்சுவேலி)

யாழ்.மாவட்டத்தில் நடப்பாண்டில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதுடன் புதிதாக பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

வலிகாமம் பகுதியில் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வந்த உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை இந்த வருடம் வடமராட்சி, தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு, தீவகம் உள்ளிட்ட பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது. கடந்த வருடம் 87 ஹெக்டயரில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடமராட்சியில் கரவெட்டி, திக்கம், பொலிகண்டி, புலோலிப் பகுதியிலும் வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி செம்பியன்பற்று, அம்பன் பகுதியிலும் தென்மராட்சியில் கைதடி, நாவற்குழி, கொடிகாமம், மிருசுவில் மற்றும் தீவகம் ஆகிய பிரதேசங்களில் கடந்த காலங்களில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டது. இங்கும் நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளது.

இதனால் குறித்த பகுதிகளில் இருந்து பல விவசாயிகள் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கையில் ஆர்வம் கொண்டு யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். அந்த வகையில் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கை அளவை அதிகரிப்பதற்கு விவசாயத்திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் புதிதாக உருளைக்கிழங்கு செய்கை மேற்கொள்ளப்படும் பகுதியில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இலவசமாக அல்லது மானிய விலையில் விதை உருளைக் கிழங்கு மற்றும் பயிர்ச் செய்கை தொடர்பான வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கவிதை ஆக்கப் போட்டி

(அச்சுவேலி)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள கவி ஆர்வம் உள்ளவர்களின் திறனை மேம்படுத்துவதற்கு அவுஸ்ரேலியா, தமிழ்கோ, அமைப்பு வடக்கு மாகாணத்துக்கு தனியாகவும் கிழக்கு மாகாணத்துக்கு தனியாகவும் கவிதை ஆக்கப்போட்டிகளை நடாத்தவுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெறும கவிதை படைப்பாளிகளுக்கு பணப்பரிசு, விருது, சான்றிதழ் வழங்கப்படுவதோடு வெற்றி பெறும் கவிதைகள் தொகுத்து நூலாகவும் வெளியிடப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக வடக்கு மாகாணத்துக்கான கவிதை ஆக்கப் போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. ஆக்கங்கள் ஆகஸ்ட் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கவிதைப் போட்டி 2015 கலாசார உத்தியோகத்தர் பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைககப்படவேண்டும். மேலதிக விபரங்களை 0775892351 அல்லது 61420421004 இலக்க தொலை பேசிகளுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

கவிதை ஆக்கப் போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளன. முதலாம் பிரிவு தரம் 05 முதல் தரம் 09 வரையான மாணவர்கள், இரண்டாம் பிரிவு தரம் 10 முதல் தரம் 13 வரையான மாணவர்கள், மூன்றாம் பிரிவு திறந்த நிலை 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.(03)

# சாவகச்சேரி நகரசபையின் திருவள்ளுவர் சிலை உடைப்பு

சாவகச்சேரி நகரசபை வளாகத்தினுள் நிறுவப்பட்டிருந்த திருவள்ளுவர் சிலை கடந்த வாரம் இனந்தெரியாதோரால் உடைத்து அகற்றப்பட்டுள்ளது.

தமிழ்ப் பெரும் புலவர் திருவள்ளுவரின் 2000 ஆம் ஆண்டு நிறைவையொட்டி 1982 ஆம் ஆண்டு சாவகச்சேரி நகர சபை வளாகத்தினுள் திருவள்ளுவருக்கு சிலை வைக்கப்பட்டிருந்தது.

பழமை வாய்ந்த குறித்த சிலை இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்காகியமையை தென்மராட்சி பொது மக்கள் பொது அமைப்புக்கள் எனப் பலர் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த சிலை அமைந்திருந்த இடத்தில் விரைவாக சிலையை நிறுவுவதற்கு சாவகச்சேரி நகர சபை நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வெள்ளி நற்சிந்தனை...



# வண்ணை வைத்தீஸ்வரனுக்கு இன்று மஹோற்சவம்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதிபராசக்தியான உமையவள் தம்மை வழிபடும் அடியவர்களுக்கு தன்னருள் பொழிந்து இன்னருளை வழங்குவதற்காக "தையல் நாயகி" என்ற நாமத்துடன் யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் எழுந்தருளி வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றாள்.

அந்த அருள்மிகு தையல்நாயகி அம்மைக்கு இன்று கொடியேற்றம். அருளே வடிவான அம்பாளுக்கு நடைபெறுகின்ற மன்மத வருடதேவி மஹோற்சவம் இன்று ஆடிவெள்ளி முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவியாக எழுந்தருளி வீற்றிருக்கும் அம்பாள் வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் அருட்தாயாக இங்கே அமர்ந்திருக்கின்றாள். எதிர்வரும் ஆடிப்பூர நன்னாளைத் தீர்த்தோற்சவ நாளாகக் கொண்டு 10 நாட்களுக்கு நிகழ்கின்ற இந்த வருடாந்த மஹோற்சவத்தைக் கண்டு தரிசிப்பதற்கு யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும்அடியார் பெருமக்கள் இந்தக் கோவிலில் வந்து கூடுவர்.

யாழ்.நகரின் மத்தியிலே காங்கேசன் துறை வீதியிலே விண்ணைத் தொடுமளவுக்கு வானளாவ உயர்ந்த இராஜகோபுரத்துடன் அழகாகக் காட்சியளிக்கும் இந்த ஆலயத்தில் சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்களாகக் கொண்டு தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் கதாபிரசங்கம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான அலங்காரத்துடன் திரு வீதி வலம்வருகின்ற அம்பிகையின் ஆனந்த அருட்கோலம் காண்பதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். சரித்திரப் பிரசித்திபெற்ற இந்தக் கோவிலுக்கு சைவ அடியார்கள் வருகைதந்து அம்பிகையைத் தரிசித்து புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்தவன் பயனைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**

# பதிவிறக்கப் பெட்டகம்

நண்பரின் பதிவொன்றில், ஒருவர் இனிய காலை வணக்கம் என்று பின்னூட்டமிட்டிருந்தார். ஒரு நடிகையின் படம் ப்ரொஃபைல் பிக்சராக இருந்தது. சரி, யார் எனப் பார்க்கலாம் என அவர் பெயரைக் கிளிக் செய்து போனேன். பெண் ஐடி.

ஒரு 3000 பேர் அந்த ஐடியைப் பின் தொடர்கிறார்கள். சரி, என்னதான் எழுதுகிறார் எனப் பார்த்தால், அவ்வப்போது இனிய காலை வணக்கம் பதிவு. வேறு ஒன்றுமே இல்லை.

ஜுலை ஆறாம் தேதி காலை வணக்கம் பதிவுக்கு மட்டும் 469 லைக்ஸ், 190 பின்னூட்டங்கள். தமிழில் எவ்வளவு விதம் விதமாக காலை வணக்கம் சொல்லலாம் என்பதை அந்தப் பின்னூட்டங்கள் மூலம் தெரிந்து கொண்டேன். இனிய காலை வணக்கம், இனிய காலை, இனிய காலை வணக்கம் சகோ, என்று ஆரம்பித்து, இனிய மதிய வணக்கம், மாலை வணக்கம், இனிய இரவு வணக்கம் என்று நீண்டு மறுபடியும் மறுநாள் காலையில் அதே பதிவுக்கு காலை வணக்கத்தைத் துவக்கி விட்டார்கள்.

இதையெல்லாம் பார்க்கும்போது எனக்கு தோன்றியவை :

1. நமக்குத் துளிகூடத் தொடர்பில்லாத - தெரியாத - ஒரு பெரிய கூட்டமே ஃபேஸ்புக்கில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

2. இந்த அளவுக்கா காய்ந்து போயிருக்கிறார்கள் நம் மக்கள்?

– ஜ்யோவ்ராம் சுந்தர்

கும்பகோணம் அருகில் உள்ள ஒரு கோவில் சன்னதியில் ஒரு குரங்கு இரண்டு நாட்களாக உணவருந்தாமல் கண்ணீருடன் அமர்ந்துள்ளதாகவும் அதைப் பார்க்க பக்தர்கள் கும்பல் கும்பலாக அங்கு சென்றுகொண்டிருப்பதாகவும் தகவல் வந்துள்ளது. அந்த வீடியோவை ஒரு நண்பர் பேஸ்புக்கில் பகிர்ந்துள்ளார். வீடியோ பகிர்ந்துள்ள பக்கத்தில் சென்று பார்த்தேன். அந்த வீடியோவை பகிர்ந்த ஒரு மணிநேரத்தில் நூறு லைக்கும் நூறு பகிர்வுகளும் விழுந்துள்ளது.

ஆட்டுக்கார அலமேலு என்ற படம் வெளிவந்து இமாலய வெற்றி பெற்றபோது அந்த ஆட்டை காரில் ஏற்றி தமிழ்நாடு முழுவதும் ஊர்வலமாக கொண்டு சென்றார்கள். ஆட்டைப் பார்க்க தமிழக மக்கள் கும்பல் கும்பலாக சென்றார்கள். ஆடு என்னமோ கம்பீரமாக இருந்தது. மக்கள்தான் மந்தையாகி விட்டார்கள் என்று அப்போது ஒரு கவிஞர் சொன்னாராம்.

– விநாயக முருகன்

நேற்று ஒருவர் டிவியில் இப்படிச் சொன்னார்:

"அப்துல் கலாம் ஒரு முஸ்லீமாக இருந்தாலும் அவர் வெஜிடேரியனாக இருந்தார். அவர் பிறந்து வளர்ந்த சமூகத்தில் மாமிசம் சாப்பிடாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள் என்பதால் இது ஒரு அதிசயம்."

இன்று ஒருவர் டிவியில் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்:

"அப்துல் கலாம் ஒரு முஸ்லீமாக இருந்தாலும் அவர் தேவாரம், திருக்குறள், பகவத் கீதை போன்றவற்றில் எல்லாம் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது ஒரு ஆச்சரியம்"

நாளை யாராவது இப்படிச் சொல்லக்கூடும் என்று நினைக்கிறேன்:

"அப்துல் கலாம் ஒரு முஸ்லீமாக இருந்தாலும் ஒரு மனிதராக இருந்தார். இது மிகப்பெரிய அதிசயம்".

– மனுஷ்ய புத்திரன்

இயக்குநர் பியரி பலர்டியு இறந்து விட்டார். பாவம் யார் பெற்ற பிள்ளையோ. அவரைப் பற்றி அறிந்த பின் 2002 இலேயே அவர் படங்களை பார்த்தது போல் எழுத வேண்டும்.

– ரைட்டர் பேயோன்

ஒவ்வொரு பொம்பளையுமே அடுத்தவ புருஷன் காரியக்காரன் தன் புருஷன்தான் அசடு என்று நினைக்கிறா. அதனால, தன் புருஷனை வாட்டி எடுத்து அடுத்தவள்கள் புருஷன் அளவுக்கு உயர்த்தப் பாடுபடுறா. இந்தப் போராட்டத்தின் இழுபறியால்தான் இந்த உலகமே இயங்குது.

– ராஜசுந்தரராஜன்

ஒரு கொசுவை விட, ஒரு வயல் எலியை விட எந்த விதத்திலும் தான் மேலான ஒன்று அல்ல என்ற அப்பட்டமான உண்மையை இந்த மனித குலம் ஒப்புக்கொள்ளாவிட்டால் அது அழிந்து போய் விடும்!

– யு.ஜி.கிருஷ்ணமூர்த்தி

# தேர்தலை கண்காணிக்க வருகிறது கொமன்வெல்த் குழு



(கொழும்பு)

தேர்தலைக் கண்காணிக்க, ழோல்டா நாட்டின் முன்னாள் அதிபர் கலாநிதி ஜோர்ஜ் அபேலா தலைமையிலான ஒன்பது பேர் கொண்ட கொமன்வெல்த் கண்காணிப்புக் குழுவை அனுப்பி வைப்பதாக, கொமன்வெல்த் அமைப்பின் பொதுச்செயலர் கமலேஷ்சர்மா அறிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளரின் அழைப்பின் பேரில், எதிர்வரும் 17ஆம் திகதி நடக்கவுள்ள தேர்தலைக் கண்காணிக்க இந்தக் குழுவை அனுப்பி வைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்களின் போது, இலங்கைக்கு கொமன்வெல்த் ஆதரவளித்த வலுவான வரலாறு உள்ளது.

இந்த வகையில் நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிக்க கொமன்வெல்த் அழைக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

நம்பகமான வாக்களிப்பு மற்றும் வாக்கு எண்ணிக்கைப் பாரம்பரியம் தொடரும் என்றும், பரப்புரைக் காலத்திலும், தேர்தலுக்கு முந்திய மற்றும் பிந்திய காலங்களிலும் நாட்டின் தேர்தல் சட்டங்கள் மதிக்கப்படும் என்ற நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் தமக்கு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கலாநிதி ஜோர்ஸ் அபேலா தலைமையிலான இந்தக் குழுவில், அவுஸ்ரேலியாவின் முன்னாள் பிரதி தேர்தல்கள் ஆணையாளர் போல் டாசே, இந்தியாவின் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையாளர் நவீன் சாவ்லா, கென்யாவின் முன்னாள் லிபரல் ஜனநாயக் கட்சியின் தலைவரும், கென்யாவில் பலகட்சி ஜனநாயக நிலையத்தின் பேராசிரியருமான லோரன்ஸ கும்பே, மலேசிய மனித உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்த சட்ட பேராசிரியர் ஆயிஷா பைடின், நைஜீரியாவின் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த இப்ராகிம் சிகிருலாஹி, பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினர் புஸ்ரா கோஹர், ரினிட்டாட் அன்டுபாகோவைச் சேர்ந்த பொதுசன, தொடர்பாடல், ஊடக நிபுணர் அடேல் ரூப்சந்த், பிரித்தானியாவின் முன்னாள் இராஜதந்திரி லின்டா டுபீல்ட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவுக்கு உதவியாக, ஐந்து பேர் கொண்ட கொமன்வெல்த் செயலகத்தின், தேர்தல் உதவிப் பிரிவின் தலைவர், மார்ட்டின் காசியே தலைமையிலான ஐந்து பேர் கொண்ட அதிகாரிகள் குழுவும் பணியில் ஈடுபடும் என்றும் கொமன்வெல்த் பொதுச்செயலர் கமலேஷ் சர்மா அறிவித்துள்ளார்.

# கிழக்கு பல்கலைக்கழகத்தில் தேசிய விவசாய ஆராய்ச்சி மாநாடு



கிழக்குப் பல்கலைகழகத்தில் தேசிய விவசாய ஆராய்ச்சி மாநாடு கடந்த புதன்கிழமை கிழக்கு பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி பி.சிவ்ராசா தலைமையில் பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.


உணவு தன்னிறைவுக்கான சவால்களும் வாய்ப்புக்களும் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற ஆராய்ச்சி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வாக அதிதிகள் அழைக்கப்பட்டு மங்கள விளங்கேற்றும் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து மாநாடு தொடர்பான அறிமுக உரையை கலாநிதி எஸ்.சுதர்சன் நிகழ்த்தினார்.

இந் நிகழ்வுக்கு விசேட அதிதியாக கிழக்கு பல்கலைக் கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் உமா குமாரசுவாமி, கௌரவ அதிதி பேராதெனிய பல்கலைகழக பேராசிரியர் எ.என்.எப்.பெரேரா, பேராதெனிய பல்கலைகழக விவசாய துறை ஆராய்ச்சி மேலதிக பொது பணிப்பாளர் கலாநிதி டப்ள்யு. எம்.ஏ.டி.பி. விக்கிரமசிங்க மற்றும் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

உணவு தன்னிறைவுக்கான சவால்களும் வாய்ப்புக்களும் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற தேசிய விவசாய ஆராய்ச்சி மாநாட்டின் அரங்கு நிகழ்வில் விசேட உரையை பேராதெனிய பல்கலைக்கழக பேராசிரியர் எ.என்.எப்.பெரேராவும், பேராதனிய பல்கலைக்கழக விவசாய துறை ஆராய்ச்சி மேலதிக பொது பணிப்பாளர் கலாநிதி டபிள்யூ.எம். ஏ.டி.பி. விக்கிரமசிங்க வும் நிகழ்த்தினர்.

நடைபெற்ற நிகழ்வில் ஆராய்ச்சி மாநாட்டுக்கு வருகைதந்த அதிதிகளுக்கு மாநாட்டு புத்தகம் மற்றும் நினைவுச் சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டது.

# இப்படிச் செய்தால் கைது



(கொழும்பு)

கட்சி சின்னத்துடன் வேட்பாளரின் விருப்பு இலக்கத்தையும் சேர்த்து சிகையலங்காரம் செய்து கொள்வது தேர்தல் சட்டத்தின் பிரகாரம் குற்றமாகும் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தலைமுடியை அவ்வாறு அலங்காரம் செய்து கொண்டிருப்பவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தபபட்டுள்ளதாவும், அவ்வாறு சிகையலங்காரம் செய்து கொண்டு சுற்றித்திரிபவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அந்த வகையில், ஜி.தரங்கய என்பவர், மாத்தறை, தெவிநுவர பகுதியில் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் பெயர், எண், மற்றும் புள்ளடி அடையாளங்களை தனது சிகை அலங்காரம் மூலம் செய்து தேர்தல் பிரசாரத்தினை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்கால சவால்களை முறியடிக்க ஒற்றையாட்சி நாடாகவே இருக்க வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு





(கொழும்பு)

எதிர்கால சவால்களை முறியடிப்பதற்காக, இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாகவே இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியில் நடந்த நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், நான் பிராந்தியத் தலைவர்களைச் சந்திக்கும் போதெல்லாம், பிராந்திய பாதுகாப்புடன் தொடர்புடைய விவகாரங்களில் அவர்கள் எவ்வாறு கரிசனை கொண்டுள்ளனர் என்பதைப் பார்க்கிறேன்.

அனைத்துலக சக்திகள் பூகோள, பிராந்திய, தேசிய பாதுகாப்புத் தொடர்பாக, எவ்வாறு சிந்திக்கின்றன என்பதை நானும் அறிவேன். அனைத்துலக நட்பு நாடுகளின் உதவி இலங்கைக்குத் தேவை. அவர்களிடம் இருந்து நாம் தனிமைப்பட்டு செயற்பட முடியாது.

பொதுநலவாயம், ஐ.நா., சார்க், அமைப்புகளில் உள்ள எமக்கு அனைத்துலக கடப்பாடுகள் உள்ளன. அனைத்துலக நிதி நிறுவனங்களுடன் நெருக்கமாக பணியாற்றுகிறோம். எமக்கு அனைத்துலக ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது - என்றார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



சில்வேஸ்திரி அலென்ரின்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)



X

8

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# புதிய உபவேந்தர்கள் நியமனம்



கொழும்பு மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களுக்கான புதிய உபவேந்தர்கள் இருவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முற்பகல் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

கொழும்பு பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தராக பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்கவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக பேராசிரியர் உபுல் திசாநாயக்கவும் ஜனாதிபதியிடமிருந்து தமக்கான நியமனக் கடிதங்களை பெற்றுக் கொண்டனர்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்ட அதேவேளை, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோனும் இந்நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தார்.

# க.பொ.த(உ/த) மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை

# G.C.E. (A/L) Examination model Paper

## தொடர்பாடல் ஊடகக்கற்கை (communication & media studies )

பகுதி - I

01. ஆக்கத் தொடர்பாடல் வெளிப்பாட்டுக்கு எடுத்துக்க காட்டாக அமையாதது
1) ஆசிரியர் தலையங்கம் (Editorial)
2) செய்தி அறிக்கை (News report)
3) சித்தரிப்பு எழுத்துக்கள் (Feature Writing)
4) கட்டுரைகள் (Article)
5) செய்திக்கட்டுரை (News Articles)

02. மன அமைதி ஏற்படும் கற்பனை ஆற்றல் அதிகரித்தல், நேரடி விளக்கத்தை ஒத்த அனுபவத்தை பெறுதல், தொழில்நுட்ப பயன்பாட்டுத்திறன் மேம்படல் ஆகிய செயன்முறைகள் ஒழுங்கு முறையே தொடர்புபடும் வெகுசன ஊடகங்கள்
1) நவீன ஊடகம், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை
2) பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, நவீனஊடகம்
3) ப்த்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, நவீனஊடகம்
4) வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, நவீனஊடகம்
5) பத்திரிகை, வானொலி, நவீனஊடகம், தொலைக்காட்சி

03. ஆரோக்கியமான குடும்பம் ஒன்றில் அவதானிக்கப்பட முடியாத இயல்பு
1) நெகிழ்வுத்தன்மையற்ற போக்கு
2) கருத்திற்கு மதிப்பளிக்கும் தன்மை
3) நேர்மய துலங்கல்களை ஊக்கப்படுத்தும் தன்மை
4) பொதுவான இலக்கு நோக்கிய செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட் டிருத்தல்
5) சமூக மாற்றங்களை உள்வாங்கக் கூடியவாறு கட்டமைக்கப்பட் டிருத்தல்

04. "பசியாக இருக்கும் மாணவனுக்கு ஒரு பொதியைக் கண்டால் அப்பொதி உணவுப்பொதியாகவே தெரியும்" மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய புலக்காட்சியை தீர்மானிக்கின்ற அகவய காரணியாக அமையக் கூடியது
1) கருத்தோற்றம்  2) எதிர்பார்ப்பு
3) அனுபவம்  4) தேவைகள்
5) சமூகநியமம்

05. தரவிறக்கம் (Download) தரவேற்றம் (upload), இணைப்புக்கள் (links), பல்லூடகப் பயன்பாடு (multimedia) பின்னூட்டல் அல்லது ஊடாட்டம் (comments) போன்ற வசதிகளுடன் தொடர்புடைய ஊடகவியல் பின்வருமாறு அழைக்கப்படும்
1) குடிசன ஊடகவியல்  2) மாற்று ஊடகவியல்
3) வெகுசன ஊடகவியல்  4) தொடரறா ஊடகவியல்
5) சமூக ஊடகவியல்

06. பத்திரிகையில் வலிமை வேகம், கொடூரம் போன்ற படங்களை பிரசுரிக்கின்ற பொழுது ஆண்களின் படங்களையும் மென்மை, இரக்கம், கவர்ச்சி காட்சிகளுக்கு பெண்களின் படங்களை பிரசுரித்தல் நிரந்தரமாக்கப்பட்டுள்ளது மேற்படி செயன்முறை அழைக்கப்படுவது
1) மாறா எண்ணக்கரு
2) சமூக மயமாக்கல் எண்ணக்கரு
3) கலாசார எண்ணக்கரு
4) காட்சி மொழி எண்ணக்கரு
5) சமூகநியம எண்ணக்கரு

07. ஆக்கத்தொடர்பாடலில் பல்வேறு வெளியீட்டு முறைகள் பயன்படுத்தப்படு கின்றன இதனடிப்படையில் செய்திக்கும் சித்தரிப்பு எழுத்திற்கும் இடையிலான வித்தியாசமாக அமையாதது
1) செய்தி உடனடித்தன்மை கொண்டது சித்தரிப்பு காலதாமதமாக வெளிக்கொணரப்படுவது
2) செய்தியில் நேரடியாக தகவல் தெரிவிக்கப்படல், சித்தரிப்பு எழுத்தில் பின்னணி தகவல்கள் உள்ளடக்கப்படல்
3) செய்தியில் பின்னணி தகவல்கள் உள்ளடக்கப்படல், சித்தரிப்பு எழுத்துக்கள் புறவயமாக தகவல்களை வழங்கும்
4) செய்தி புறவயமான பண்புடையது, சித்தரிப்பு எழுத்துக்கள் அகவயமான பண்புடையது
5) செய்தி சுருக்கமானது சித்தரிப்பு எழுத்துக்கள் விரிவானது

08. சமூகத் தொடர்பாடல் செயன்முறையினால் ஏற்படக்கூடிய பாதிப்பு
1) மொழி ஆளுமை விருத்தியடையும்
2) சமூக அந்தஸ்து விருத்தியடையும்
3) வெற்றிகரமான தொடர்பை முன்னெடுக்கலாம்
4) தனித்துவங்களை இழக்க நேரிடும்
5) சமூக தலைமைத்துவம் விரிவடையும்

09. பின்வரும் கூற்றுக்களில் உலகமயமாதல் செயன்முறை பிரதிபலிக்காதது
1) மேலைத்தேய பண்பாட்டின் தரவுகை
2) முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு சார்பானது
3) தேசிய வலுப்பெற்று பூகோளமயம் நலிவடைதல்
4) நவீனத்துவ அடையாளங்களுடன் நெருக்கமானது
5) சுதேச பண்பாட்டிற்கு அச்சுறுத்தலானது

10) நிறுவனம் ஒன்றில் முறைசார், முறைசாரா தொடர்பாடல் வடிவங்கள் இனங்காணப்படுகின்றன நிறுவ்னம் ஒன்றில் தகவல் தொடர்பு வெற்றி பெறாமைக்கான காரணமாக கொள்ள முடியாதது
1) செயற்படுதல் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்படுதல்
2) நோக்கங்கள் தெளிவாக வரையறுக்கப்படாமை
3) தகவல் தொடர்பு வழிமுறைகள் இன்மை
4) நிறுவன மேலதிகாரி - ஊழியர் முரண்பாட்டு சூழ்நிலைகள்
5) முறைசாரா தகவல் தொடர்பை தவிர்த்தல்

11) எழுத்து மூல தகவல் தொடர்பின் பாதகமான அம்சமாக அமையாதது
1) சந்தேகங்களை தெளிவுபடுத்த முடியாது
2) உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாது
3) ஆவணமாக எப்போதும் பேணலாம்
4) செய்தி கடினமானதாக அல்லது சிக்கலானதாக அமையும் போது தாக்கம் குறைவாக அமைதல்
5) செய்தியை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்தீல் கடினம்

12) அரச தகவல் திணைக்களம் சோல்பரி ஆணைக்குழுவின் ஆலோசனையின் பிரகாரம் அமைக்கப்பட்டு மக்கள் தொடர்பு முயற்சிகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. பின்வருவனவற்றுள் அரச தகவல் திணைக்களம் அம்மக்கப்பட்டதன் நோக்கமாக அமையாதது
1) அரச - மக்கள் இடைத்தொடர்பை உயர்மட்டத்தில் பேணுதல்
2) அரசாங்க பணிகளை பல்வேறு வெளியீடுகள் மூலம் விளக்குதல்
3) உள்நாட்டவர் - வெளிநாட்டவர்க்கு நாட்டின் தகவல்களை வழங்குதல்
4) அரசாங்க செயற்பாட்டை விளம்பரப்படுத்தல்
5) அரச திரைப்படப்பிரிவின் செயற்பாடுகளை ஒழங்கமைத்தல்

13) பின்னூட்டல் (Feedback) தொடர்பாடல் தொழிற்பாட்டுக்கு எடுத்துக் காட்டாக அமையக்கூடியது
1) அபிப்பிராயங்கள்
2) ஒருவழித்தொடர்பு
3) அறிக்கையிடல்
4) கதை புனைதல்
5) கதை உருவாக்கல்

14) பெர்லோ (Berlo) என்பவரின் தொடர்பாடல் மாதிரியின் அடிப்படையில் பெறுநர்களின் நிலையை தீர்மானிப்பவையாகக் சுட்டிக்காட்டப்படுபவை
1) ஒத்துணர்வு, செவிமடுத்தல் திறன்
2) கேட்டல் மற்றும் அறிவுநிலை
3) அறிவுத்திறன், கிரகித்தல் திறன்
4) ஆயத்தம், இணக்கத்தன்மை
5) மனநிலை , ஆயத்த நிலை

15) நிறுவனம் ஒன்றின் முறைசார் உள்ளக தொடர்பு வகையில் இடம்பெறுகின்ற மேல் இருந்து கீழ் நோக்கிய தொடர்பாடலின் போது சுற்றறிக்கை எழுத்து மூல வடிவமாக பயன்படுத்தப்படுகின்றது பின்வருவனவற்றில் சுற்றறிக்கை தயாரிக்கப்படும் சந்தர்ப்பம் அல்லாதது
1) நிறுவன ஊழியர்களின் திடீர் மரணம் தொடர்பான செய்திக்கு
2) விசேட நிகழ்வொன்றுக்கான செய்திக்கு
3) விசேட விடுமுறை பற்றிய அறிவுறுத்தலுக்கு
4) விசேட கொடுப்பனவு பற்றிய விபரங்களை தெரிவிப்பதற்கு
5) ஊழியர் ஒருவரின் கடமைகள், பொறுப்புக்கள் பற்றித் தெரிவிப்பதற்கு

16) சொற்கள் மூலம் ஒருவர் இன்னொருவருடன் தகவல் பரிமாற்றம் செய்யும் முறை வாய்மொழி மூல தொடர்பாடல் எனப்படும் பின்வருவனவற்றில் இத் தொடர்பாடலின் பலவீனமாக கொள்ள முடியாதது
1) வாய்மொழி தொடர்பாடலின் நம்பகத்தன்மை இழிவளவை கொண்டமைந்தது
2) நீண்கால தேவைக்கு பேணிப்பாதுகாத்துக் கொள்ள முடியும்
3) நீண்டகால தேவைக்கு பேணிப்பாதுகாத்துக் கொள்ள முடியாது
4) குறித்த செய்தியை மீண்டும் மீண்டும் அனுப்ப இத் தொடர்பாடல் பொருத்தமற்றது
5) இரகசியத்தன்மை பேணுவது கடினமானது

17) நபரிடைத் தொடர்பில் உயர்மட்ட பின்னூட்டல் பற்றி மிகத் தெளிவாக குறிப்பிடும் தொடர்பாடல் மாதிரி
1) ஷெனோன் வீவர் மாதிரி 2) பெர்லோ மாதிரி
3) டீ.லாஸ்வெல் மாதிரி 4) ஒஸ்குட்ஸ்ராம் மாதிரி
5) வில்பர்ஷ்ராம் மாதிரி

18) எமது பிரதேசம் பரீட்சயமான இடம் அல்லது ஆட்கள் மற்றும் குழுக்கள் பற்றிய செய்திகள் வெகுசன ஊடகங்களில் அறிக்கையிடப்படுதல்
1) காலத்திற்கு எற்ற செய்தி அறிக்கையிடல்
2) அசாதாரண செய்தி அறிக்கையிடல்
3) முரண்பாட்டு உணர்திறன்மிக்க செய்தி அறிக்கையிடல்
4) ஆர்வமூட்டும் செய்தி அறிக்கையிடல்
5) அண்மித்த தன்மையிலான செய்தி அறிக்கையிடல்

19) பின்வருவனவற்றில் வானொலி ஊடகத்திறன் அல்லாதது
1) செவிமடுத்தல் திறன்
2) உச்சரிப்புத் திறன்
3) பிரதிஆக்கத்திற்கான படைப்பாக்கத்திறன்
4) காட்சியாக்கத்திறன்
5) பல்குரல் வெளிப்பாட்டுத்திறன்

20) வெகுசன தொடர்பாடலில்
A - செய்தி அறிக்கைகளின் தொகுப்பு பல்வேறுபட்ட இயல்புடைய பெறுநர்களை கொண்ட குழுவிற்கு அறிக்கை செய்யப்படுதல்
B - செய்திகளை வேகமாகவும் தொடர்ச்சியாகவும் பரந்துபட்ட குழுவொன்றுக்கு முன்வைத்தல்
C - இயந்திரங்களை பயன்படுத்துகின்ற மக்கள் குழுவுக்கு செய்திகளை எடுத்துச்செல்லல்
1) A மட்டும் உண்மையானது
2) B மட்டும் உண்மையானது
3) C மட்டும் உண்மையானது
4) Aயும்Cயும் மட்டும் உண்மையானது
5) A,B,C எல்லாம் உண்மையானது

## பகுதி II

01. பொறுப்பு வாய்ந்த பிரஜை என்ற வகையில் கூடி வாழ்தலுக்கும், கூட்டாக வாழும் சமூக உருவாக்குதலுக்கும் தொடர்பாடல்கள் தேர்ச்சிநிலைகள் அடிப்படையாகின்றது
1) வீட்டு அமைதி, சமூக அமைதி, தளர்வுறுவதற்கு ஏதுவான இரு காரணிகளையும் தனித்தனியாக குறிப்பிடுக
2) ஊடக வன்முறை சமகாலத்தில் சமூகத்தில் தீவிரமடைந்தது வருகின்ற போக்கு நிலவுகின்றது இதனடிப்படையில் ஊடக வன்முறை செயற்பாட்டினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் இரண்டினை குறிப்பிடுகஸ
3) சமூக அமைதி மற்றும் கூடிவாழ்தல் பண்புத்தரத்தை உயர்தரத்தில் பேணுவதற்கு வெகுசன ஊடக அறிக்கையிடல் போக்கை நான்கு காரணிளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக
4) அறிவுச்சமூகம் தனக்கென தனித்துவமான இயல்புகளை கொண்டமைந்தது இதனடிப்படையில் அறிவுச்சமூகம் ஒன்றின் அவதானிக்கக் கூடிய முனைப்பான இயல்புகளை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக

02. ரவி தேசிய தொலைக்காட்சி ஒன்றில் விளம்பர நிகழ்ச்சித் தயாிப்பளராக இணைந்து கொண்டான். தொலைக்காட்சி ஊடகத்தில் திறமையும், இளவயதும் கொண்ட விளையாட்டு வீரர்களை விளம்பரங்களின் பயன்படுத்துவதன் ஊடாக உயர் சமூக படிமத்தை (Higher social Image) உருவாக்கிக் கொள்ளலாம் என எண்ணினான்
1) தொடர்பாடலின் எந்த வகைப்பாடு (type) வடிவத்தின் (form) அடிப்படையில் ரவி இங்கு இணைந்து கொண்டான் என பெயரிடுக
2) சமூகப்படிமம் என்ற எண்ணக்கருவை சுருக்கமாக அறிமுகம் செய்து அதன் மூலம் ஏற்படக் கூடிய இரு அனுகூலங்களை குறிப்பிடுக?
3) உளரீதியான விம்பங்களை உருவாக்குவதில் தொலைக்காட்சி ஊடகம் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது தொலைக்காட்சி ஊடகத்தின் தனித்துவமான இயல்புகளை மூன்று காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக
4) தொலைக்காட்சி ஊடக விளம்பரம் நுகர்வோனுக்க எவ்வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நான்கு வழிகளில் சுருக்கமாக விபரிக்குக

03. வெகுசன ஊடக மொழி என்பது தனித்துவமான பயன்பாட்டை கொண்டமைந்தது?
1) அச்சு, வானொலி, தொலைக்காட்சி, ஊடகங்களில் மொழியின் பயன்பாட்டு விதங்களை தனித்தனியே பெயரிடுக?
2) சொல்சார் தொடர்பாடல் வடிவத்தில் மொழி பிரதான ஊடகம் அந்த வகையில் மொழியின் பணிகள் மூன்றை குறிப்பிடுக
3) தொடர்பாடல் செயன்முறையில் மொழிசார் தடைகளை இழிவளவாக்குவதற்கு மொழி பிரயோக நிலைகளில் கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று அம்சங்களை சுட்டிக்காட்டி சுருக்கமாக விளக்குக
4) வெகுசன ஊடகத்திற்கான மொழி பயன்பாட்டு சந்தர்ப்பங்களின் போது உருவாகின்ற மட்டுப்பாடுகளை நான்கு அம்சங்களை அடிப்ப்டையாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக

04. விழிப்புணர்வுமிக்க செயற்பாடு பெறுநர் ஒருவரிடம் ஊடக எழுத்தறிவு. ஊடக விமர்சன இயல்புகளை அவதானிக்க முடிகின்றது
1) ஊடக எழுத்தறிவு, ஊடக விமர்சனம் ஆகிய இரு எண்ணவாக் கத்திற்கு இடையிலான தொடர்பை அறிமுகம் செய்க
2) ஊடக எழுத்தறிவுமிக்க பயனாளிகள் ஊடகங்களின் உள்ளடக் கங்கள் அதாவது அறிக்கையிடல்கள் தொடர்பாக தமது துலங்கல் வெளிப்பாட்டை முன்வைக்கக்கூடிய 4 வழிமுறைகளை பெயரிடுக?
3) ஊடக விமர்சன செயன்முறை முன்னெடுக்கப்படும் மூன்று பிரதான அடிப்படைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?
4) ஊடக விமர்சன போக்கு ஊடக அறிவுமிக்க சமூகத்திற்கு எந்த வகையில் முக்கியத்துவம் வகிக்கின்றது என்பதை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக

05. அபிவிருத்திக்கான தொடர்பாடல் எண்ணக்கருவை முதன்முதலில் அறிமுகம் செய்தது யுனெஸ்கோ நிறுவனம் ஆகும்
1) பேராசிரியர் விமல் திசாநாயக்க அபிவிருத்தி தொடர்பான வரை விலக்கணத்தில் உள்ளடக்குகின்ற நான்கு அபிவிருத்தி கூறுக ளையும் பெயரிடுக
2) அபிவிருத்தி தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்து வதற்கு பயன்படுகின்ற மரபுசார், நவீன தொடர்பு ஊடக வழி முறைகள் இரண்டை தனித்தனியே குறிப்பிடுக
3) அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு மக்கள் மத்தியில் அண்மித்த வகையில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு சுவரொட்டி பயன்படும் முக்கியத்துவத்தை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக
4) அபிவிருத்தி செயன்முறையை முன்னெடுப்பதற்கு சமுர்த்தி அதிகாரசபை அரச அமைப்பாக செயற்பட்டு வருகின்றது மேற்படி அமைப்பு சமூக அபிவிருத்தியில் பங்களிக்கும் விதத்தை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக

06. பொதுசனத் தொடர்பு செயற்பாட்டுக்கு பல்வேறு கருவிகள் திட்டமிடப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன
1) பாடசாலை ஒன்றின் மக்கள் குழுவிற்குள் உள்ளடக்கக் கூடிய இரு குழுவினரை பெயரிடுக
2) பாடசாலையின் ஊடக விழாவிற்காக குறித்த ஒரு நிறுவனம் ஒன்றிடம் அனுசரணை பெற்று மேற்கொள்ளக்கூடிய நான்கு நிகழ்ச்சித் திட்டங்களை குறிப்பிடுக
3) பாடசாலையின் மதிப்பை உயர்த்துவதற்கு சுற்றாடல் கருவியை பயன்படுத்தும் வழிமுறைகளை நான்கு அம்சங்களை அடிப்படை யாகக் கொண்டு விளக்குக
4) நிறுவனத்தின் மக்கள் தொடர்பு செயற்பாட்டை வெகுசன ஊடக வழியில் முன்னெடுப்பதற்கு ஊடக கலந்துரையாடல் (press conference) பொதுசன தொடர்பு அதிகாரியினால் ஒழுங்கு செய்யப்பட்டது அதன் போது கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு அம்சங்களை விபரிக்குக

### சென்றவாரம் பிரசுரமாகிய க.பொ.த சா/த வினாக்களின் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 4 | 02. 2 | 03. 2 | 04. 1 | 05. 1 |
| 06. 4 | 07. 5 | 08. 3 | 09. 5 | 10. 1 |
| 11. 2 | 12. 3 | 13. 1 | 14. 1 | 15. 3 |
| 16. 4 | 17. 2 | 18. 2 | 19. 3 | 20. 2 |
| 21. 4 | 22. 1 | 23. 4 | 24. 5 | 25. 3 |
| 26. 5 | 27. 2 | 28. 2 | 29. 3 | 30. 3 |
| 31. 5 | 32. 2 | 33. 3 | | |

### நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 01. செல்பேசி 02. கைபேசி 03. பிறருக்கு தொந்தரவு தராத அழைப்புக்களை 04. பயணம் செய்யும் போது 05. உரத்துப் பேசும் போது 06. உணவு உண்ணும் வேளை 07. அறிவு பூர்வமாக 08. தானம் 09. தம்பி 10. அவன் ஒரு சிறந்த வீரன் (02) பொருத்தமான விடைகள் (03) 01. பவளம் 02. விமானம் 03. சாரணர் 04. நூலகம் 05. வழக்கு 06. மாதுளம்பழம் (04) 01. கைதி 02. அந்தப்புரம் (05) 01. எல்லோரும் வாகனத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர் (06) 01. தயவு செய்து தினமும் பாட சாலைக்கு வாருங்கள் 02. நாம் விளையாட்டை ஆரம்பிப்போமா? (07) 01. let us go to playground 02. I walk slowly (08) 01. நீங்கள் எந்த வகுப்பில் படிக்கிறீர்கள்? (09) 01. மாணவர் பாடம் படித்தனர் (10) 01. ஒயா(க்) கே பாசல நம மொக்கத? (11) 01. தாரா 02. நெற்குருவி 03. கிளி 04. தேன்குருவி (12) 01. வாத்து 02. கழுகு 03. கோழி 04. காகம் (13) 01. 1 02. 1 03. 1 04. 2 05. 2 06. 1 07. 3 08. 3 09. 3 10. 2 11. 2 12. 3 13. 3 14. 2 15. 1 16. 4 17. 2 18. 2 19. 3 20. ஆயத்தம், ஆரம்பம், புறப்படு (14) 01. பொருத்தமான விடை 02. பொருத்தமான விடை 03. 8 நாள் (15) 01. க.டினேஸ், 561 ; 11, திருமலை வீதி, மட்டக்களப்பு 02. இக்கடிதம் யாருக்கு எழுதப்பட்டது

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை பிரசுரமாகும் க.பொ.த (சா/த) கணித வினாத்தாளுக்கான விடைகள் யாவும் அடுத்த வெள்ளிக்கிழமை பிரசுரமாகும்


# தேர்தல் களம் 2015

## யாழ்.நகர வர்த்தக நண்பர்களுடன் முதன்மை வேட்பாளர் டக்ளஸ்

யாழ்நகரப் பகுதியிலுள்ள வர்த்தக் நிலையங்களுக்குச் சென்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா வர்த்தக நண்பர்களை சந்தித்து அவரகளது குறைநிறைகளை நேரில் கேட்டறிந்து கொண்டார். யாழ்நகர்ப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு நேற்று முன்தினம் செயலாளர் நாயகம் விஜயம் மேற்கொண்டிருந்தார். இதன்போது நகரின் மீன்சந்தை, மரக்கறி, பழவியாபாரிகளுடன் கலந்துரையாடி அவர்களது தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதனிடையே நவீனசந்தைத்தொகுதிக்கும் விஜயம் மேற்கொண்டிருந்த டக்ளஸ் தேவானந்தா வர்த்தக நண்பர்களுடன் கலந்துரையாடி அவர்களது குறைநிறைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இதில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்களான இரா.செல்வ வடிவேல், திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர்.





### - மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு -

## நிரந்தர தீர்வினை பெற்றுக் கொடுக்கும் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம்

### முதன்மை வேட்பாளர் டக்ளஸ் தேவானந்தா




எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வினை பெற்றுக் கொடுக்கும் வகையிலேயே நாம் திட்டங்களை வகுத்து செயற்படுத்தி வருகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். குருநகர் ஐந்து மாடி குடியிருப்பு மக்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் இக் குடியிருப்பில் வாழ்ந்து வந்த மக்களாகிய நீங்கள் எதிர்நோக்கி வந்த பிரச்சினைகளுக்கு நாம் தீர்வினைக் கண்டுள்ள போதிலும் மேலும் பல தேவைப்பாடுகளுக்கு தீர்வுகள் காணப்பட வேண்டியுள்ளது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமாயின் மக்களாகிய நீங்கள் எமக்கு "ஆதரவையும் அரசியல் பலத்தையும் வழங்க வேண்டும். முன்னைய அரசுடனான நல்லுறவின் ஊடாகவே ஐந்து மாடிக் கட்டடத் தொகுதிகளில் நவீன முறையில் புனரமைப்பு செய்யப் பட்டிருந்தன. இன்றைய சூழலில் முக்கியமாக காணி உரிமங்களை பெற்றுத் தருவதற்கும் நாம் நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, உங்களது ஒளிமயமான எதிர் காலத்துக்காக தொடர்ந்து பணியாற்ற நாம் தயாராக இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதில் ஈ.பி.டி.பியின் வேட்பாளர்களான இரா.செல்வவடிவேல், திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட அமைப்பாளர் குகேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## வடபகுதி முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு கூட்டமைப்பினர் தீர்வினை பெற்றுத்தர மாட்டார்கள்

### ஈ.பி.டி.பி.யின் வேட்பாளர் செல்வவடிவேல்



வடபகுதி முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒருபோதும் தீர்வினை பெற்றுத் தர மாட்டார்கள் என ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் வேட்பாளர் சொல்லின் செல்வர் இரா.செல்வ வடிவேல் தெரிவித்துள்ளார்.

புதிய சோனகத் தெரு பொம்மை வெளியில் நேற்று முன்தினம் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியினரால் நடாத்தப் பட்ட மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் பிரச்சினைகளை எதிர் கொண்ட காலப்பகுதிகளிலெல்லாம் குரல் கொடுத்தவர்கள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரே தவிர வேறு எவருமில்லை.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ் முஸ்லிம் உறவுகளுக்கிடையில் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்பட்டு இருசமூகங்களும் ஒன்றிணைந்து வாழ்ந்து வந்தோம்.

இன்று மீளவும் இருதரப்புக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தும் ஒரு பாலமாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரே இருந்து வருகின்றனர் என்பதுடன் இதற்கு வேறு யாரும் உரிமை கோர முடியாது. அந்த வகையில், முஸ்லிம் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தீர்வினை பெற்றுத் தரமாட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதில் யாழ்.மாநகர முன்னாள் முதல்வரும், ஈ.பி.டி.பியின் வேட்பாளருமான திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உரையாற்றும் போது இன, மத பாகுபாட்டிற்கும் முஸ்லிம் மக்களுக்காகவும் அவர்களது கல்வி சுகாதாரம் வாழ்க்கைத்தரம் உள்ளிட்ட வசதி வாய்ப்புக்களை உயர்த்தும் வகையில் திட்டங்களை வகுத்து அவற்றை திறம்பட இவற்றை வரை செயற்படுத்தி வருபவர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரையே சாரும் என்றார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015







ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
வன்னி தேர்தல் மாவட்டத்தில்
போட்டியிடும் ஈ.பி.டி.பி. வேட்பாளர்களை
வெற்றி பெறச் செய்வோம்!
அன்ரனி அருள்ராஜசேகர்
(சாந்தன்)
மாவட்ட இணைப்பாளர் வவுனியா
1
அ.ஜெயராஜ்
2
அந்தோனிமுத்து அனஸ்ரின்
3
குலசிங்கம் திலீபன்
முதன்மை வேட்பாளர்
4
பொ.குணபாலா
5
சுப்பையா சந்துரு
8
விஜயரட்ணம் சுரேந்தர்
(சுரேன்)
6
செ.ஸ்ரீராமச்சந்திரதாஸ்
9
சுந்தரம் குமாரசாமி
7
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

## பிரகீத்...

மில் இரண்டு கேணல் தர அதி காரிகளிடம் ஒப்படைத்த இரு தமிழ் புலனாய்வாளர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, பிரகீத் எக் னெலிகொடவை மின்னேரிய இராணுவ முகாமில் வைத்து பொறுப் பேற்ற இரண்டு, கேணல் தர அதிகாரிகளும் செய்யப்படுவர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கடத்தலின் போது, கடத்தல்காரர்கள் கடைசியாக பக்கமூன பகுதியில் இருந்து தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

பிரகீத் எக்னெலிகொடவை கடத்திச் சென்றவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அடுத்த சில வாரங்களுக்குள் இந்த கடத்தில் வழிவகாரம் பற்றிய முழு விபரங்களும் வெளிச்சத்துக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மாணவனை...

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா ஓமந்தை அரச முறிப்பு பகுதியில் தாயின் சகோதரியுடன் வசித்த வந்த 15வயதுடைய ஓமந்தை மத் திய கல்லூரியில் தரம் 7 இல் கல்வி பயிலும் மாணவனே கடந்த மாதத்திலிருந்து காணாமற்போயுள்ளதாக ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுவனின் தாயார் பணிப்பெண்ணாக குவைத் நாட்டில் கடந்த ஒரு வருடமாக பணிபுரிகின்றார். தந்தையின்றி வாழ்ந்து வந்துள்ளதால் தாயின் சகோதரியும் பல சிரமத்தின் மத்தியில் மாணவனை வளர்த்து 'வந்துள்ளார். சம்பவதினம் பாடசாலை சென்றுவிட்டு பிற்பகல் வீடு வந்துவிட்டு விளையாடச் சென்ற சிறுவன் வீடு திரும்பவில்லை. என சிறுவனின் சிறிய தாய் தெரிவித்துள்ளார்.

சிறுவனின் சகோதரி செட்டிகுளம் திருக்கன்னியார் மடத்திலிருந்து கல்வி பயின்று வருகின்றார். காணமற்போன சிறுவனும் சில மாதங்களுக்கு முன்னர் செட்டிகுளம் அருட்தந்தையர்களின் பாதுகாப்பில் இருந்துள்ளார். அருட்தந்தையாருடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாகவே ஓமந்தையிலிருக்கும் சிறிய தாயுடன் வசித்து வந்துள்ளார்.

# சு.க.அமைச்சர்கள் பதவி விலக மறுப்பு

(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களை பதவி விலகச் செய்யும், முயற்சிக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகவுள்ளதாகவும், அதற்கு ஜனாதிபதியின் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதி அமைச்சர் திலங்க சுமதிபால தெரிவித்திருந்தார்.

ஆனால், தாம் அவ்வாறு பதவி விலகும் முடிவை எடுக்கவோ, பதவி விலகல் கடிதத்தை கையளிக்கவோ இல்லை என்றும், திலங்க சுமதிபால பொய் சொல்வதாகவும் அமைச்சர்கள் மகிந்த சமரசிங்கவும் துமிந்த திசநாயக்கவும் தெரிவித்துள்ளனர்.

கட்சியின் மத்திய குழுவோ எமது பதவி விலகல் குறித்து தீர்மானிக்க வேண்டும். அது வரை நான் பதவி விலகப் போவதில்லை என்று மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

துமிந்த திசநாயக்கவும், தாம் பதவி விலகப் போவதில்லை என்று உறுதிப்படுத்தியுள்ளார்.

கட்சியின் மத்திய குழுவே, அரசாங்கத்தில் இணைவது குறித்து முடிவு செய்தது என்றும் அதுபோலவே விலகுவது குறித்தும், முடிவெடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேவையற்ற காரணங்களுக்காக பதவி விலகுமாறு அழுத்தம் கொடுக்கப்படுவதாகவும் தாம் அவ்வாறு பதவி விலகப் போவதில்லை என்றும் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவும் குறிப்பிட்டுள்ளார்.

தாம் மத்திய குழுவின் தீர்மானப்படியே அமைச்சர் பதவியில் இருப்பதாகவும், மத்திய குழு விலகுமாறு முடிவெடுக்காமல் தாம் அமைச்சர் பதவியை கைவிடப் போவதில்லை என்றும் மகிந்த அமரவீரவும் தெரிவித்துள்ளார்.

## கூட்டமைப்பின்...

ஜனாதிபதி, பிர்தமர் மற்றும் மகிந்த ராஜபக்ஸ கூட நாட்டின் ஒருமைப்பாட்டினை இன்று ஏற்றுக்கொண்டுள்ளனர். 1949 இல் இருந்தே இந்த சமஷ்டி கோரிக்கையானது அடைய முடியாத அழகான கனவாக இருந்து வருகிறது.

சமஷ்டி கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை அவசியம் எனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் 10 அல்லது 15 'ஆசனங்களையே பெறமுடியும் என்றார்.

## வன்முறைக்கு...

நடாளுமன்ற தேர்தலை எதிர்நோக்கியிருக்கும் வாக்காளர்களுக்கு சில முக்கிய கரிசனைகளை முன்வைக்கும் வெள்ளி கருத்துக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்படுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தல் பிரசார' நடவடிக்கைகளில் இன மற்றும் மத வெறுப்பையும் வன்முறையையும் தூண்டும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவது மிகவும் வருத்தத்தை தருகின்றது. இத்தகைய நச்சுத் தன்மை கொண்ட பிரசாரங்கள் முழு நாட்டையும் பல ஆண்டுகளுக்கு பாதிக்கும். இதனை எமது கடந்த கால அரசியலிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

எனவே குறுகிய இனவாத பிரசாரங்களை மேற்கொள்ளாமல் தேசிய இணக்கப்பாடு, அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டுக் கொள்கை ஆகியன தொடர்பான கொள்கைகள் என்பவற்றை அடிப்படையாக கொண்ட பிரசாரங்கள் நடைபெற வேண்டும். மேலும் இது பல்லினத்தன்மை மற்றும் குடியாட்சிக்கு எதிரான செயற்பாட்டாளர்களையும் சக்திகளையும் முறியடிக்க குடிமக்களாகிய எமக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு தருணமாகும் என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வலியுறுத்த....

என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார். குறித்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் பதிலளிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்ப காலம் முதல் சர்வதேச விசாரணை தான் நீதி விசாரணைக்கு உகந்ததென வலியுறுத்தி வருகின்றது. போரில் இடம்பெற்ற இரண்டு தரப்பினருக்கு எதிராக போர்க்குற்ற விசாரணைகள் முன்வைக்கப் பட்டுள்ளது. அந்த இரண்டு சாரார்களில் ஒருவர் மீது விசாரணை என்பதனை ஏற்றுக் கொள்ள முடியாத விடயம்.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எதிராக போர்க் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. குறித்த இரண்டு தரப்பினரும் போர் புரிந்த தரப்பினர் என்ற வகையில், ஒரு தரப்பினர் மீது விசாரணை செய்ய முடியுமா, அதை யாரும் ஏற்றுக்கொள் வார்களா?.

பக்கச்சார்பற்ற விசாரணை நடாத்த வேண்டுமென்பதில் யாரும் மாற்றுக்கருத்து சொல்ல முடியாது. பக்கச்சார்பற்ற விசாரணையாக இருந்தால் அது சர்வதேச விசாரணையாக மட்டுமே இருக்க முடியும். இது அடிப்படையான விடயம் இதில் ஏன் ஐயப்பாடு எழுகின்றது என தெரியவில்லை.

சர்வதேச விசாரணை தான் வேண்டுமென முழுமையாக போராடிய எம்மைப் பார்த்து, சர்வதேச விசாரணையினை கைவிட்டு விட்டோம் எனக் கூறுகின்றார்கள். எங்கே? எப்போது சர்வதேச விசாரணை வேண்டாமென நாம் தெரிவித்துள்ளோம்.

அதேவேளை, சர்வதேச விசாரணையினை விட வேறு எதையும் ஆதரிப்போம் என எந்த சந்தர்ப்பத்திலும் தெரிவித்ததில்லை. நடைபெறவுள்ள தேரதல் முடிந்த பின்னரும் சர்வதேச விசாரணை என்ற நிலைப்பாடு தொடரும். என்றும் கூறினார். (25)

## யுத்த...

தால், யுத்த பூமியில் அன்றி வேறுஇடத்தில் பிள்ளைகளைக் கடத்திச் சென்று கொன்றால் அதற்கு பொறுப்பானவர்கள் அதற்கு பதிலளிக்க வேண்டும்.

யுத்தத்திற்கு அப்பால் நடைபெற்ற சம்பவங்கள் வேறு கதை. அதனைவிடுத்து யுத்த பூமியில் ஏற்பட்ட உயிரிழப்புகள் யுத்தக் குற்றம் அல்ல என்பதை தெளிவாக கூறுகின்றோம். குற்றங்கள் இல்லாத யுத்தமில்லை. யுத்தமே குற்றம்தான். யுத்தக்குற்றம் என்று ஒன்று இல்லை. யுத்தத்தை முடிவெடுத்தது நாமே. நாம் கூறியதைத்தான் படையினர் செய்தனர். ஆகவேதான் நாம் அவர்களை பாதுகாக்கின்றோம்.

அதனைவிடுத்து தனிப்பட்டவர்கள் செய்த குற்றங்களுக்கு நாம் பொறுப்பல்ல. இன்று ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவின் மூவர் சென்று தாஜுதீனை கொலைசெய்ததை குற்றம் இல்லையென யாரும் சொல்ல முடியாது. தாஜுதீனால் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இருக்கவில்லை. இவ்வாறான விடங்களை செய்தவர்கள் தொடர்பில் நாம் பொறுப்புக்கூற மாட்டோம்.

ஒரு நாட்டிற்குள் அதிகாரத்தை பகிர்வதால் நாடு பிளவுபடாது என்றும், அதிகாரத்தை பகிராத நாடுகளே பிளவுபட்டுள்ளன

நாட்டிற்கு பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவித்தார். அந்த அச்சுறுத்தல் எங்கு உள்ளது? உண்மையில் அவரது காலத்தில் காணப்பட்ட அச்சுறுத்தல் இன்று இல்லாமல் போயுள்ளது.

அன்று மஹிந்த லண்டன் சென்றபோது 13 ஆயிரம் புலம்பெயர் தமிழர்கள் வீதியில் இறங்கி போராடினர். ஆனால் ஜனாதிபதி மைத்திரி செல்லும்போது, 130 வரையானவர்கள்தான் போராடினார்கள். இதிலிருந்து எவ்வளவு மாற்றம் ஏற்பட்டுள்ளதென்பது தெரிகின்றது.

இன்று தேர்தலில் போட்டியிடும் விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளின் கட்சியும் அதி காரத்தை பகிருமாறும் தனி நாட்டை கேட்க மாட்டேர் என்றுதான் கேட்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதிகாரத்தை பகிருமாறுதான் கேட்கின்றது. நாட்டை பிரிக்கமாறு இன்று யாரும் கேட்கவில்லை. எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரத்தை பகிர்வதாகத்தான் குறிப்பிட்டுள்ளோம்.

அத்துடன், அரசாங்க கட்சிகள்தான், எதிர்க் கட்சிகள் மீது தாக்குதல் மேற்கொள்வதைத்தான் நாம் பார்த்திருப்போம். ஆனால் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் மீது இந்தளவு தாக்குதல் மேற்கொள்கின்மை இதுவே முதல்தடவை. நல்லாட்சியை நோக்கி அரசாங்கம் செல்வதாலேயே இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்கின்றனர்.

இரத்தினபுரி சம்பவத்திலிருந்து, மாத்தறை மற்றும் புளுமெண்டல் தாக்குதல் சம்பவம் என அனைத்து சம்பவங்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறை உணவுப்பொருட்களையும் சலுகைகளையும் கொடுத்து வாக்குகளைப் பெற முடியாது. வேட்பாளர்கள் வழங்கும் உதவியை விட வேட்பாளர்கள் எப்படிப்பட்டவர்கள் என் பதை மக்கள் அவதானிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது என தெரிவித்தார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# அரசாங்கம் அமைப்பதற்கு ரணிலுக்கு இடமளியோம்

## அமைச்சர் எஸ்.பி. சூளுரை



(கொழும்பு)

மைத்திரி - மஹிந்தவுக்கு இடையில் இனி பிளவுகள் கிடையாது. நாங்கள் ஒருபோதும், எதிர்வரும் 18 ஆம் திகதி ரணில் விக்ரமசிங்கவை அரசாங்கம் அமைப்பதற்கு இடமளிக்க மாட்டோம் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட எஸ்.பி., மைத்திரி - மஹிந்த தலைமைத்துவத்திலே புதிய அரசாங்கம் அமைக்கப்படும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சின்ன கோபம் ஏற்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில், வேட்பாளர்களின் பிரச்சினையினால் மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்க மாட்டேன் என கூறினார்.

எனினும் அவை தற்போது மாற்றமடைந்துள்ளது. மைத்திரி - மஹிந்தவுக்கும் இடையில் இனி பிளவுகள் கிடையாது. மீண்டும் கட்சி இரண்டுபடாது.

அர்ஜுன, ஹிருணிக்கா, ராஜித ஆகியோர் கட்சியை விட்டு விலகியதனால் கட்சிக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. எனினும் அவர்கள் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடுகின்றவர்கள் என்பதனாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை அமைப்பதனால் உறுப்பினர்கள் பற்றாக்குறை ஏற்பட்டால் கணக்கு வழக்குகளை தீர்த்து கொள்வது அவசியம் என்பதனால் இது தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் வெளியிடமாட்டேன்.

மகிந்த - மைத்திரியை இணைத்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையும் இணைப்பதே ரத்ன தேரரின் நோக்கமாகும் என்றார்.

# கஸகஸ்தான் – இலங்கை விசா முறையில் தளர்வு

(கொழும்பு)

இராஜதந்திர, அரச கருமங்கள் மற்றும் சேவை ரீதியிலான பயணச் சீட்டை வைத்திருப்போருக்கு விசா பெறாமல் வெளிநாடு செல்வதற்கு இலங்கை - கசகஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையில் ஒப்பந்தமொன்று நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இரு நாட்டு மக்களிடையே போக்குவரத்தை இலகுபடுத்துவது இதன் நோக்கமாகும். அத்துடன், இதன்மூலம் இரு நாடுகளுக்கிடையிலான நட்பு ரீதியிலான உறவு பலப்படுத்தப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் விசா இன்றி இரு நாடுகளுக்கும் செல்லவும், அந்த நாடுகளில் 30 நாட்கள் தங்கியிருக்கவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன், இந்த நாட்டுக்குச் சென்று அந்த நாட்டிலிருந்து வேறு நாடுகளுக்குச் செல்லவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வயோதிபமடைந்த நிலையில் சம்பிரதாய பூர்வ கட்சிகள்

## கூறுகிறார் அநுரகுமார

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சம்பிரதாய பூர்வ கட்சிகள் பலவும் வயோதிபமடைந்த நிலையில் காணப்படுவதாக ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற மாநாடொன்றிலேயே அநுரகுமார திசாநாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

குடும்பப் பிரச்சினைகளையன்றி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் அரசியல்வாதிகளே நாட்டிற்குத் தேவை. சம்பிரதாயபூர்வ கட்சிகள் பலவும் வயோதிபமடைந்துள்ள நிலையில் அக்கட்சிகளின் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு அனுப்பினால் நாடாளுமன்றம் அருகே ஊன்றுகோல் கடையொன்றை அமைக்க வேண்டி ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.


# சுதந்திரக் கட்சிக்குள் பிளவா? இல்லை என்கிறார் டிலான்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பிளவுகள் எதுவும் இல்லை எனத் தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா ஐக்கிய தேசியக் கட்சியே எதிர்காலத்தில் கட்சிக்குள் உருவாகும் குழுக்கள் குறித்து கவலைப்பட வேண்டியிருக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள் அனைவரும் பதவிவிலகவுள்ளதாக திலங்க சுமதிபால தெரிவித்ததை வைத்து கட்சிக்குள் பிளவு காணப்படுவதாக சில சக்திகள் காண்பிக்க முனைகின்றன.

எனினும் சஜித்பிரேமதாசவை எதிர்க்கட்சித் தலைவராக்குவற்கு ஐக்கிய தேசிய கட்சிக்குள் சிலர் பிரசாரத்தை முன்னெடுப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன இது உண்மையாயிருந்தால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டிவரும் என அவர் தெரிவித்துள்ளார்.



# ஹிருணிகாவிடம் 500 மில். இழப்பீடு

(கொழும்பு)

ஹிருணிகா பிரேமச்சந்திர அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டமை தொடர்பில் 500 மில்லியன் இழப்பீடு கோரி உதய கம்மன்பில சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பியுள்ளதாக தெரியவருகிறது.

உதய கம்மன்பிலவின் சட்டத்தரணியான துஷார திஸாநாயக்க ஊடாக இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஹிருணிகாவும் உதய கம்மன்பிலவும் கடந்த காலம் முதல், ஒருவருக்கு ஒருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்திக் கொள்வது வழமையான விடயமாக காணப்பட்டதாக நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# றக்பி வீரர் சடலத்தை தோண்டி எடுக்க அனுமதி

(கொழும்பு)

மர்மமான முறையில் உயிரிழந்த றகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீனின் சடலத்தை எதிர்வரும் 10ஆம் திகதி தோண்டி எடுப்பதற்கு கொழும்பு மேலதிக நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே நீதிமன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுவரையிலும் வசீம் தாஜுடீனின் உடல் புதைக்கப்பட்டிருந்த மயானத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க.வின் பேச்சாளராக செயற்படுகிறார் சந்திரிக்கா

## என்கிறார் ஜனக பண்டார

(கொழும்பு)

பண்டாரநாயக்க பரம்பரையில் வந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் போன்று செயற்படுவதாக முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் குற்றம் சாட்டியுள்ளார்.

தம்புள்ளயில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் போஷகராகவுள்ள இவரின் சில கருத்துக்கள் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பாதிப்பாகவுள்ளது. இவருடைய நடவடிக்கைகளைப் பார்க்கும் போது இவர் கட்சியின் போஷகராகவல்ல, ஐ.தே.க.யின் ஊடகப் பேச்சாளர் போன்றே செயற்படுகின்றார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நாளாந்தம் விசாரணைக்கு வருகிறது பாரத லக்ஷ்மன் கொலை வழக்கு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும், நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் கொழும்பில் போட்டியிடும் ஹிருணிகாவின் தந்தையுமான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர படுகொலை வழக்கை ஒவ்வொரு நாளும் விசாரணைக்கு எடுக்கும் விதத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ் உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்ற விசேட நீதிபதிகள் குழு நேற்று விடுத்துள்ளது.

அதன் பிரகாரம், ட்ரைல் அட்பார் முறையிலான (மூவரடங்கிய நீதிபதிகள் குழு) இவ் வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஒக்ரோபர் 12ஆம் திகதி முதல், ஒவ்வொரு வாரமும் திங்கள் முதல் புதன் வரை தொடர்ந்தும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை பாரத லக்ஷ்மன் கொலை வழக்கில் மூன்றாவது பிரதிவாதியான சமிந்த ரவி ஜயநாத் என்ப்படும் தெமட்டகொட சமிந்த என்பவரை தடுத்து வைத்திருந்த சிறைக்கூடத்தில் இருந்து இரண்டு கையடக்கத் தொலைபேசிகளை சிறைச்சாலை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினர் இந்தக் கையடக்கத் தொலைபேசிகளை இரண்டு சந்தர்ப்பங்களில் கைப்பற்றியதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையின் புலனாய்வுப் பிரிவினர் கடந்த 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, குறித்த கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சிறைச்சாலை அதிகாரிகளின் உதவியுடன் இவை சிறைச்சாலைக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், அந்த அதிகாரிகள் மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

புளுமெண்டல் பகுதியில் ரவி கருணாநாயக்கவின் ஆதரவாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கும் இந்தச் சந்தேக நபர்களுக்கும் இடையில் தொடர்புகள் உள்ளதா என்பது குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக நீதி அமைச்சர் மேலும தெரிவித்தார்.

# சுகாதார சேவையின் அழிவிற்கான பயணம் ஆரம்பம்

## வருந்துகிறார் பந்துல

(கொழும்பு)

உலக சுகாதார ஸ்தாபனம் ஏற்றுக்கொண்ட இலங்கையின் தரமான மற்றும் சுதந்திரமான சுகாதார சேவையின் அழிவிற்கான பயணம் நெருங்கிவிட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரை சிறப்பாக இருந்த சுகாதாரத் துறை இன்று அழிவடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் படி பொது சுகாதார சேவையை இல்லாமல் செய்து, தேசிய சுகாதார சேவை அதிகார சபையாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் மருந்துகளை இறக்குமதி செய்தல் மற்றும் வநியோகித்தல் போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் தனியாருக்கு வழங்குவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில். சுதந்திர சுகாதார சேவையை பாதுகாப்பதற்காக நாடு தழுவிய போராட்டங்களை முன்னெடுக்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஆகஸ்ட் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை ரூ. 2.00

# மாலை முரசு

தேர்தல் கால மாலைப் பதிப்பு

07.08.2015 | வெள்ளிக்கிழமை | பக்கங்கள் – 4

அழிவா! – ஆக்கமா!!
மக்கள் தீர்ப்புக்கு
இன்னமும்
**9**
நாட்கள் மட்டுமே!


# தமிழரசுக்கட்சி ஒரு கோடரிக்காம்பு
# தமிழர்கள் தேசிய தலைவர் விக்கி

## ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு

கோடரிக் காம்பு போல் தமிழ் இனத்தை அழிக்கும் தமிழரசுக் கட்சியின் பெரும் பான்மையைக்கொண்ட கூட்டமைப்புக்குத் தனது ஆதரவைக் கொடுக்காது, செயல்படும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களின் கருத்து வெளிப்பாடு வாழ்த்துதற்குரியதாகும்.

தேர்தலில் எப்படி மக்கள் வாக்களிக்க வேண்டுமென்று இங்கிலாந்தில் அவர் பேசிய பேச்சும் நல்லூர் இந்து மகா சபைக் கூட்டத்தில் இலங்கையில் காணாமற் போய்விட்ட தமிழரின் சரித்திரத்தைப் பற்றிதெரிவித்த கருத்தும்சிங்களவரின் பொய்யானசரித்திரத்தை உலக நிபுணர்களிடம் சரியாகத் தெரிவித்து அவற்றை நாம் வெளிக்கொண்டுவர வேண்டும் என்ற அவரது கருத்துக் களும் முக்கியம் வாய்ந்தவை.

02 பக்கம் பார்க்க



## ஆயுளை அதிகரிக்கும் உறைப்பு உணவுகள்

கார உணவுகளை சாப்பிடுவது ஆயுளை அதிகரிக்கும் என சீன ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது

அதிலும் குறிப்பாக தோட்டத்திலிருந்து பறிக்கப்பட்ட மிளகாயை உடனடியாக சாப்பிடுவது உடலுக்கு நல்லது என அந்த ஆய்வு கூறுகிறது.

02 பக்கம் பார்க்க

# தூக்கி எறியப்பட்ட சைக்கிள் சின்னமும்



# கஜேந்திர குமாரின் அழிவரசியலும்

19.07.2015 அன்று, பிபிசி தமிழோசையில் ஆகஸ்ட் 17இல் நடைபெறப்போகும், தேர்தலில் மக்களின் எதிர்பார்ப்புக் குறித்த கேள்விக்கான பதில் இவ்விதமாக எதிரொலித்தது!

ஆண்குரல் ஒன்று: பொருளாதார முன்னேற்றம் முக்கியமானது. அதன் பொருட்டு காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை ஆகிவை மீள் இயக்கம் பெறவேண்டும். இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைக்கப்பட வேண்டும்

பெண்ணொருவர்: போர் முடிந்து 6 வருடங்களாகியும் காணாமல் போன எங்கள் உறவுகளுக்கு முடிவில்லாமல் இருக்கிறது. அவர்களைக் கண்டுபிடித்துத் தரவேணும். வீட்டுத்திட்டத்தை முடித்துத் தரவேணும். இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை மீட்டுத் தரவேண்டும்.

இன்னொரு ஆண்: ஏ9 பாதையில் 6வருடமாக இருக்கிறம். இன்றுவரை மின்சாரம் கிடையாது. சரியான பாதை இல்லை. எங்கடை அதிகாரிகளும் அரசாங்கமும்தான் இதுக்குப் பொறுப்பு! அரசியல்வாதிகள் மக்களுக்காகச் சாதிச்சது ஒண்டுமில்லை. கூட்டமைப்பு எதிர்க்கட்சி வரை போயிருக்கு, ஆனால் மக்களுக்காக சாதிச்சது ஒண்டுமில்லை. இனப்பிரச்சினைக்கும் ஒரு தீர்வு வேணும். அதுவும் கட்டாயந்தான்.

மீண்டும் ஒரு பெண்குரல்: அப்பாவிகளை விடுதலை செய்யவேணும். காணாமல் போனவையைக் க்ண்டுபிடிச்சுத் தரவேணும். குறிப்பிட்ட சில தொகை இருக்கெண்டு அரசாங்கம்

02 பக்கம் பார்க்க

கடந்த 60ஆண்டுகால அனுபவத்தில் முதல் 30ஆண்டுகாலநாடாளுமன்றஅரசியலிலும், அடுத்து வந்த 30ஆண்டுகால வன்முறை அரசியலிலும் தீர்க்கப்படாத இனப்பிரச்சனைக்கு, அடுத்து வரும் 5ஆண்டுகால நாடாளுமன்ற வாழ்வுக்குள் எத்த; கைய தீர்வையும் எட்டிவிட முடியாது.



# அதிகரித்த மக்கள் வெறுப்பும் தாக்கப்பட்ட ஸ்ரீகாந்தா வீடும்


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான சுமந்திரன் – சிறீகாந்தா ஆகியோரின் ஆதரவாளர்களை இலக்குவைத்து மர்மக் கும்பலொன்று தாக்கதல் நடாத்திள்ளது. நேற்று முன்தினம் இரவு வடமராட்சி உடுப்பிட்டி பண்டகை பகுதியில் இவர்களது முக்கிய செயற்பாட்டாளர் ஒருவரது வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முகங்களை மூடிக்கட்டியவாறு வந்த பத்திற்கும் அதிகமானவர்களைக் கொண்ட இளைஞர் கும்பலொன்று இவரது வீட்டின் மீது தாக்குதலினை நடத்தியதாக அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.



வீட்டினுள் நுழைந்த இந்த மர்ம நபர்கள் இனிமேல் சுமந்திரன் சிறீகாந்தா ஆகியோருக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யப்போவதில்லையென்ற உறுதி

02 பக்கம் பார்க்க



## தூக்கி எறியப்பட்ட...

சொல்லியிருக்கு. அதையாவது அரசாங்கம் வெளியில விடவேணும்!

ஓர் இளைஞன் குரல்:நில ஆக்கிரமிப்புப் பிரச்சனை, அரசியல் கைதிகள் பிரச்சனை, அன்றாடத் தேவைகள். இதைப் பூர்த்திசெய்யக்கூடியவர்களை அனுப்ப யோசிக்கிறம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலதடவை சென்றபோதும் எதுவும் நிகழவில்லை த.தே.கூட்டமைப்பு எந்த நடவடிக்கையும் செய்யவில்லை.

இவற்றில் அதி அழுத்தத்துக்குட்பட்டவை பொருளாதாரப் பிரச்சினைகளுடன் கூடிய அன்றாட வாழ்வாதாரப் பிரச்கனைகளே! இதில்வேலைவாய்ப்புக்கானமுன்னெடுப்புக்களும் அடக்கம். அதற்கு அடுத்ததாக தாய்மார்களின் குரலாக ஒலித்த காணாமல் போனவர்கள் மற்றும் சிறைக்கைதிகள் பிரச்சினைகள் முக்கியத்துவம் பெறுகின்றன! இனப்பிரச்சனைக்கான தீர்வு குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அதிஅழுத்தத்துக்கு உட்பட்டிருக்கவில்லை என்பது வாஸ்தவமே!

தனிமனிதக் குரல்களாக இருப்பதனால் அவை நிதானமாக ஒலிக்கின்றன. நாடாளுமன்றப் பிரதிநிதிளால் இலகுவில் சாதிக்கக்கூடிய வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும், கைதிகள், காணாமல் போனவர்கள் குறித்தும் அதிகமாகப் மொழிகின்றன. இதுவே கூட்டமாக அல்லது கும்பலாக மாறுகின்ற போது அரசியல்வாதிகளின் குரலாக ஒலிப்பது தமிழுக்கு ஒன்றும் புதிதல்ல. அச்சந்தர்ப்பங்களில் மக்கள் பரிதாபத்துக்குரியவர்களாக மாறுகிறார்கள்! தன்னிலையை இழந்து விடுகிறார்! அரசியல்வாதிகளின் நீரோட்டத்தில் அள்ளுப்பட்டுவிடுகிறார்கள். தமிழர் வரலாறு மட்டுமல்ல உலக அரசியல் வரலாறு அனைத்துமே இதற்குச் சான்று!

உண்மையில் தனிமனித ரீதியில் ஒவ்வொரு தமிழனுக்கும் விளங்குகிறது. கடந்த 60ஆண்டுகாலஅனுபவத்தில்முதல் 30ஆண்டுகால நாடாளுமன்ற அரசியலிலும், அடுத்துவந்த 30ஆண்டுகால வன்முறை அரசியலிலும் தீர்க்கப்படாத இனப்பிரச்சனைக்கு, அடுத்து வரும் 5 ஆண்டுகால நாடாளுமன்ற வாழ்வுக்குள் எத்தகைய தீர்வையும் எட்டிவிட முடியாது என்று!

இந்நிலையில், தமிழ் அரசியல்வாதிகள்முன்வைக்கக்கூடிய தர்க்கம்அன்றைய சூழல் வேறு, இன்றைய சூழல் வேறு. இன்று எமது பிரச்சினை உலகளாவியது. சர்வதேச அனுசரணைக்கு உட்பட்டது என்று! ஆனால், சர்வதேச அரங்கில் உரையாடுவதற்குரிய தமிழரின் அரசியல் ஆற்றுகையில் இன்னும் மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை,

இந் நிலைமைகளில் புதிய மந்தையில் பழைய கள்ளை ஊற்றுவது போல் சில முன்னெடுப்புக்களைத் தோற்றுவிக்க முனைகிறார்கள் சில தமிழ் புத்திஜீவிகள். அதில் குறிப்பானவர் நிலாந்தன். வித்தியாதரனையும் குறிப்பிடலாம். ஆனால் அவருடைய செயற்பாடுகள் இலகுவில் கண்டு கொள்ளுமளவுக்கு அதிகாரத்துவ நோக்கம் கொண்டது! தன்னலம் நிறைந்தது! ஆனால் நிலாந்தனின் நோக்கம் மெல்ல நகர்ந்து சாதிப்பது. அறிவதிகாரத்தின் மூலம் புலம்பெயர்ந்த தமிழர்கள், புத்திஜீவிகள் மற்றும் புதிய தலைமுறை உறவுகளிடத்தும்ஆளுமைசெலுத்தமுனைவது. பொதுநல நோக்கில் மிகுந்தவிமர்சனத்துக்கு உள்ளாக்கப்படவேண்டி யது!

## ஆயுளை...

கடந்தஏழுஆண்டுகளில்ஐந்துலட்சம் மக்களின் உணவுப் பழக்கங்களை ஆய்வு செய்த சீன ஆராய்ச்சியாளர்கள் இந்த ; முடிவுக்கு வந்துள்ளனர்.

வாரம்ஒருமுறைகாரமானஉணவை உட்கொள்பவர்களைவிட தினந்தோறும் காரசாரமான உணகளை உட்கொள்பவர்கள் 14 சதவீதம் கூடுதலாக உயிர்வாழும் வாய்ப்புகள் உள்ளன என்று அந்த ஆய்வின் முடிவு கூறுகிறது.

'மனிதர்களின்உணவுப்பழக்கத்தைக் கண்காணித்ததைக் கொண்டு கணக்கிடப்பட்டவை' என்பதாகவே தமது ஆய்வு அமைந்திருந்தது என்றும், இது குறித்து வேறு இடங்களிலும் கூடுதல் ஆய்வுகள் தேவை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் மிளகாயிலுள்ள முக்கிய மூலப் பொருளான–காப்சேஹியன்–நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது என்றும், வீக்கம் மற்றும் எரிச்சலைக் குறைக்கும் தன்மை கொண்டது என்பது முந்தைய ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

## தமிழரசுக்கட்சி...

இவ்வாறு அமெரிக்காவை தளமாகக் கொண்டு செயல்படும் ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு என்கின்ற புலம் பெயர் தமிழர் அமைப்பு தெரிவித்துள்ளது.2009 இற்குப் பின்னர் தமிழர்கள் தேடிக்கொண்டிருந்ததலைவர் ஒருவரை நாம் கண்டுபித்துள்ளோம். தமிழ் மக்கள் தேர்தலில் தமிழரசுக் கட்சியைத் தோற்கடித்துப் புதிய தலைமையை உருவாக்கும் போது விக்னேஸ்வரன் அவர்கள் அத்தலைமையை ஏற்றுக்கொள்வார் என எமது அமைப்பு நம்புகின்றது எனவும் அவர்கள் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிகரித்த....

மொழியை வாங்கிக் கொண்டு அங்கிருந்து வெளியேறி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது..

கூட்டமைப்பின்சுமந்திரன்மீதான மக்களது வெறுப்பு உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதையடுத்து அவர்களது எடுபிடிகளினை இலக்கு வைத்து தாக்குதல்கள் ஆரம்பித்துள்ளதாக கூறப்படுகின்றது.

அதேவேளை கூட்டமைப்பினுள் நிலவும் உட்கட்சி மோதலே தாக்குதலிற்குகாரணமெனவும்தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, தேர்தல் மேடைகளில் வீராவேச பேச்சுக்களை ஆற்றி வரும் வேட்பாளர் ஸ்ரீகாந்தா வீடும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தாக்குதலுக்குள்ளானதாகவும் அறியமுடிகிறது.

# பிரபாகரனின் பெருமைகள், புலிகளின் செழுமைகள் சூறையாட முனையும் கூட்டமைப்பு

– தி.பரந்தாமன்

(நேற்றைய தொடர்ச்சி)

இதுதான் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடா? அடுத்த ஆண்டில் தான் பெற்றுத் தருவதாக ஐயா வாக்குறுதி அளிக்கும் தீர்வு இது தானா? ஐயாவும் சுமந்திரனும் தமது கட்சியின் இந்த நிலைப்பாட்டைத் தெற்கிலும் சொல்லுவார்களா? கட்சியின் நிலைப்பாடு இது இல்லையெனின், தமிழ் மக்களை ஏமாற்றி கட்சிக்கு வாக்குளைச் சேகரிப்பதற்காகவே இவ்வாறு சொல்லப்படுகின்றதா? தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களே இவ்வாறாகப் பேசுவது மஹிந்தவின் மீளெழுச்சிக்கு வழிகோலாதா? "ஆட்சியைக் கவிழ்த்து நாட்டைப் பிரிப்போம்" என்ற அடைக்கலநாதனின் வாக்குறுதியை நம்பி வாக்களிக்கும் மக்கள், நாளை "அப்படியெல்லாம் செய்ய முடியாது" என்று சுமந்திரன் சொல்லிவிட்டால் நீதி கேட்டு யாரிடம் போவார்கள் இவ்வாறாக இப்போது எதிர்ப்பு–அரசியல் பேசி வாக்குச் சேகரித்து நாடாளுமன்றம் செல்கின்றவர்கள், நாளை, சுமந்திரனும் ஐயாவும் செய்யப்போகும் இணக்க–அரசியலுக்கு ஒத்தூதி அனுசரித்துப் போவார்களெனின் அவர்கள் கூட, தமக்கு வாக்களித்த மக்களுக்குத் துரோகம் செய்கின்றார்கள் என்று தானே பொருள்?

தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கைப் பலத்தை அதிகரிப்பதன் மூலமே தமிழர்கள் தமது பேரம் பேசும் சக்தியை அதிகரிக்க முடியும் என்று ஐயா கூறுகின்றார்? கேள்வி என்னவெனில் எதனைப் பேரம் பேச என்பதாகும். சேனாதிராஜா, சித்தார்த்தன், அடைக்கலநாதன், பிரேமச்சந்திரன் போன்றவர்கள் பேசும் தீவிர நிலைப்பாட்டு கொள்கையையா? அல்லது ஐயாவும் சுமந்திரனும் முன்னெடுக்கும் மிதமான நிலைப்பாட்டுக் கொள்கைகளையா? வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்கப் போகும் மக்கள், இந்த இரண்டு கொள்கைகளில் எந்தக் கொள்கையைக் கூட்டமைப்பின் கொள்கை என ஏற்று வாக்களிக்க முடியும்?

கஜேந்திரகுமாரின் கட்சியில் எவருடன் பேசினாலும், அவர்கள் ஒரே கோட்பாட்டையே பேசுகின்றார்கள். தேவானந்தாவின் கட்சியில் எவருடன் பேசினாலும், அவர்கள் ஒரே கொள்கையையே முன்வைக்கின்றார்கள். சைக்கிள் சின்னத்திற்கும், வீணை சின்னத்திற்கும் வாக்களிக்கின்ற மக்களுக்கு, தாம் என்ன கொள்கைக்கு வாக்களிக்கின்றோம் என்பது தெளிவாகத் தெரியும். கொள்கை ஏற்புடையதெனில் வாக்களிக்கலாம் ஏற்புடையது இல்லையெனின் விட்டுவிடலாம். அங்கு ஏமாற எதுவும் இல்லை. ஆனால், ஆளுக்கு ஆள் ஒவ்வொரு கதை சொல்லியும், முன்னுக்குப் பின் முரணான சமாளிப்புகளையும் செய்யும் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்கத் தீர்மானிக்கும் ஒரு தமிழ் குடியானவர், இவர்களில் எவரின் கொள்கையைக் கூட்டமைப்பின் கொள்கையாக ஏற்க முடியும்? வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா வீட்டுச் சின்னத்தின் வழியாக அரசியற் பணிக்கு வந்தவர். வந்த புதிதில் அவர் கொண்டிருந்த நிலைப்பாட்டிற்கும், நின்று பார்ந்த பின்னர் அவர் மாற்றியிருக்கும் நிலைப்பாட்டிற்கும் இடையில் அடிப்படை வேறுபாடு உள்ளது. இப்போது, வீட்டுச் சின்னத்தின் தலைமை முன்னெடுக்கும் இளகிய அரசியலுக்கு மாறான இறுகிய நிலைப்பாட்டையே அவர் கொண்டுள்ளார். அவர் வெளிப்படுத்துகின்ற தன்னிலைப்பாட்டு விளக்கங்கள் அத்தனையுமே சைக்கிள் சின்னத்தின் கொள்கைகளை ஒத்திருக்கின்றனவே அல்லாமல், வீட்டுச் சின்னத்திற்குக் கிட்டவும் இல்லை. 1985ஆம் ஆண்டின் திம்பு தீர்மானத்திற்கு அமைவாக தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை என்பவற்றை அங்கீகரிக்கின்ற அரசியற் தீர்வே இலங்கைத் தமிழருக்குத் தேவை என்கிறார் அவர். மாகாண சபைக்குத் தான் முதலமைச்சராக வந்த பின்னர் கற்றுக்கொண்டது என்னவெனில், அந்த மாகாண சபை முறைமை தமிழரது அரசியல் அபிலாசைகளை அடைவதற்கான தொடக்கப் புள்ளியோ, தொடரும் புள்ளிகளோ, முடிவுப் புள்ளியோ அல்ல என்கிறார் அவர். இந்த நிலைப்பாடுகள் தான் சைக்கிள் சின்னத்தின் நிலைப்பாடாகவும் நிலைத்து வருகின்றன.

இப்போது கேள்வி என்னவெனில் தான் சார்ந்திருக்கும் வீட்டுச் சின்னத்திற்காக மேடைகளில் ஏறி கருத்துக்கள் சொல்ல வேண்டிய நிலை விக்னேஸ்வரன் ஐயாவுக்கு வந்தால் அவரது மேடைக்காக மக்கள் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப்பார்களா அல்லது அவரது கருத்துக்களுக்காக மக்கள் சைக்கிள் சின்னத்திற்கு வாக்களிப்பார்களா? சிறீதரன் ஏற்கெனவே விக்னேஸ்வரன் ஐயாவோடு தானும் நிற்கும் படங்கள் போட்ட சுவரொட்டிகளை ஒட்டத் தொடங்கிவிட்டார். எனவே முதலமைச்சரின் செல்வாக்கு மூலம் கிடைக்கின்ற வாக்குகளால் வென்று நாடாளுமன்றம் செல்லும் வீட்டுச் சின்னத்தினர், முதலமைச்சர் முன்வைக்கும் தீர்வுக்கு மாறாக சுமந்திரன் முன்னெடுக்கும் தீர்வுக்கான பொதுசன அங்கீகாரம் என அந்த வெற்றியை நாளை எப்படி அர்த்தப்படுத்த முடியும்?

வடக்கின் தெருக்களில் பேசுகின்ற எந்த ஒரு தமிழரிடமும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தொடர்பாகக் கூறுவதற்கு நல்ல விசயங்கள் எதுவுமே இல்லை.

(தொடரும்)

## மொக்கனின் முனகல் - 05

# விக்கியின் லண்டன் பேச்சும் தட்சணாமூர்த்தியின் தவிலும்


கூட்டமைப்புக்காரர் அரசாங்கத்திட்ட உதவிகளைப் பெற்றிருக்கினம் எண்டு விக்கி ஐயா சொல்ல அதுக்கு மாவை ஐயா விளக்கம் கேட்டிருந்தார். அதுக்கு விக்கி ஐயா பதிலும் குடுத்திருக்கிறார். இது எல்லாத்தையும் பாக்கேக்கிள்ள சனத்துக்கு ஒண்டும் விளங்கேல்ல. இவை எல்லாரும் ஒரு கட்சிக்காரரோ எண்டு சனம் ஐமிச்சப்படுதுகள். உண்மையான மனஒற்றுமை இருந்தால் உள்ளுக்குள்ளாலேயே கேட்டுப் பிரச்சினையை முடிச்சிருக்கலாம். வேற வேற கட்சிக்காரர்போல இவை நடக்கிறதப் பார்த்து சனங்கள் குழம்புதுகள். எல்லா உதவியும் பதவியை நாடித்தான் எண்டு பரவலா சனம் கதைக்குது. ஆட்டம் கண்டுகொண்டிருக்கிற சுரேஸ் தம்பி தன்னை பலப்படுத்திக்கொள்ளுறதுக்கு எடுக்கிற முயற்சிதான் இது எண்டும் தெரியுது.

மாகாணசபையை அந்தக் கட்சிப் பெரியவையே மதிக்கேல்ல எண்டால் வேற ஆர் மதிக்கப்போகினம். ஒரு ஒண்டுபட்ட செயற்றிட்டம் இல்லையெண்டு பக்கத்து வீட்டுப் பெரியவரும் சொல்லுறார். இப்ப உள்ளூரில பிரபாகரனைத் தூக்கிப் பிடிச்சுக் கொண்டு நிக்கிறவர் எங்கட சிறீதரன் ஐயா. அவரை பெரிய அவதாரம் எண்ட மாதிரி எண்ணி இவர் நடக்கிறார். பிரபாகரன்ர பழைய விஜயம் ஒண்டை இண்டைக்கு மொக்கன் சொல்லப் போறான். ஏனென்டால் அவரைப் பற்றி சிறீதரன் ஐயா மட்டுமல்ல அவருக்கு இண்டைக்கும் கொடி பிடிக்கிற கூட்டமும் அறியவேணும். இண்டைக்கு 35 வருயத்துக்கு முந்தி புலிகள் இயக்கம். இரண்டாப் பிளந்தது.

உமா மகேஸ்வரன், கண்ணன், சுந்தரம் போன்ற முக்கிய புலிகளின் புள்ளிகள் பிரிஞ்சுபோட்டினம். எஞ்சி இருந்தது ஒரு கொஞ்சப்பேரே. அதுவும் வடமராட்சிக் கூட்டம்தான். வடமராட்சிக்கு வெளியில செல்லக்கிளி அம்மான், அவ்றோ ராகவன் எண்டு ஒண்டு இரண்டு பேர்தான் பிரபாகரனுக்கு ஆதரவா நிண்டினம். இந்தநிலையில மனம் குழம்பிய பிரபாகரன் இயக்கத்தின்ர சொத்தான ஒரேயொரு கைத்துப்பாக்கியை எறிஞ்சுபோட்டு வீட்டுக்கு போட்ய் புத்தி கலங்கியபடியே சில நாள் இருந்தார்.

அப்ப புலிகளுக்கு ஆர் தலைவர் எண்ட பிரச்சினை வந்துட்டுது. அப்ப மாத்தையாவும் மோகன் எண்டு சொல்லப்பட்ட கலாபதியும் ஒரு புதிய தலைவரை தெரிஞ்சு எடுக்கவேணும் எண்டு முயற்சி எடுத்தினம். இந்த நிலையில சிலற்ற முயற்சியால புத்தி கலங்கிப்போய் இருந்த பிரபாகரனை ரெலோ தங்கண்ணா கூப்பிட்டு தன்னோட வைச்சு அவரைக் குணப்படுத்திவிட்டார்.

இந்த இடைப்பட்ட காலத்தில மாத்தையாதான் புலிகளை வழிநடத்தினார். புலிகள் எண்டு சொல்லேக்க எண்ணி ஒரு 10, 15 பேர்தான் இருந்தவை. அப்ப பிரபாகரனை எல்லாரும் தம்பி எண்டுதான் கூப்பிடுவினம். தம்பியும் ஒரு 3 மாதம் புலிகள் உறுப்பினர் எண்ட பதவியிலிருந்து நீங்கித்தான் இருந்தவர். தங்கண்ணா இல்லையெண்டால் தம்பின்ர அரசியல் சரித்திரம் முடிஞ்சமாதிரித்தான் போயிருக்கும். இப்படியானவரை போய் பிறவிப் பிறப்பெடுத்தவர் எண்டோ அவதாரப் புருசர் எண்டோ சொல்லிறது சரியில்லை எண்டுதான் மொக்கன் இண்டைக்கும் சொல்லுறான். எங்கட இனத்தின்ர சரித்திரத்தில தம்பிக்கும் ஒரு ஆதிக்கக் காலகட்டம் இருந்தது உண்மைதான். சிலதைச் சாதிச்சதும் உண்மைதான்.



ஆனால் எல்லாம் முள்ளிவாய்க்கால் பெரிய பாதிப்பாய் முடிஞ்சுது. வெறும் வேதனைதான் மிஞ்சிச்சுது.


தம்பி பிரபாகரன் தனித்தமிழன் இல்லை எண்டதையும் மொக்கன் வெளிப் படுத்தப் போறான். திருவேங்கடம் வேலுப்பிள்ளை எண்ட மலையாளிக்கும் பார்வதி அம்பாள் எண்ட வல்வெட்டித் துறை தமிழச்சிக்கும் பிறந்தவர்தான். தம்பி பிரபாகரன் பார்க்கப் போனா அவரும் கலப்புத்தான். இதில ஒரு குறையும் இல்லை எண்டாலும் தனித்தமிழன் எண்டு சொல்லிக்கொண்டு திரியிறவைக்கு இந்த விசயம் தெரியவேணும் எண்டுதான் மொக்கன் சொல்லுறான்.

இனம்,ரத்தம் எண்டு சொல்லிறது ஒரு அளவுக்குத்தான் உண்மையா இருக்கும். தமிழனைத் தமிழன் ஆளிறது எண்டது வெறும் பொய். தமிழ்நாட்டில அண்ணாத்துரை ஆட்சிக்குப் பிறகு எம்.ஜி.ஆர் தான் ஆட்சியைப் பிடிச்சார். அவர் ஒரு முழு மலையாளி தமிழ் கலப்பும், 'இல்லை. இண்டைக்கு ஆட்சி செய்யிற ஜெயலலிதா அம்மையாரும் ஒரு தெலுங்குப் பிராமணத்தி.' தமிழனை வேற ஆக்கள் ஆளிறதுதான் தமிழன்ர தலை விதி. இதையெல்லாம் மெல்லமா மறைச்சுப்போட்டு எங்கட தமிழ் ரத்தம்,ரத்தத்தின் ரத்தம், சொந்தத்தின் சொந்தம் எண்டெல்லாம் எங்களுக்குக் கதைவிடுகினமாம் கதை.

இனி இதெல்லாம் பெருசா எடுபடாது. சனம் கொஞ்சம் கொஞ்சமா தெரிஞ்சுகொண்டு வந்திட்டுதுகள். ஆண்ட தமிழன் மீண்டும் ஆழ நினைப்பதில் என்ன தவறு எ்ண்டு கேட்கிறவைக்கு ஆர் இங்க சுத்தமான தமிழன் எண்டு மொக்கன் கேட்கிறான். மொக்கியும் கேட்கிறாள். இனி வீரவசனம் பேசிக்கொண்டு எல்லாரும் வெளிக்கிட்டு வருவினம். எங்கட இனம், எங்கட சாதி நிமிர்ந்து நிக்கவேணும் எண்டு சொல்லி எங்கள உசுப்பேத்தி வழக்கம் போல வாக்குப் பறிக்க வருவினம். இதில சிறிதரன் ஐயாதான் மும்மூரமா முன்னுக்கு நிப்பார்.

மொக்கனுக்கு அப்பு, ஆத்த சொன்ன பழமொழி நினைவுக்குவருகுது. "துள்ளாதே துள்ளாதே ஆட்டுக்குட்டி என் கையில் இருக்குது சூரிக்கத்தி"

இந்த மாதிரி தான் இந்த முறை சனம் தங்கட வேலையைக் காட்டப்பாக்குதுகள். இவ்வளவு காலம்விட்ட புலுடா இந்த முறை வாய்க்காது. இண்டைக்கு மொக்கன் சொன்ன விசயங்கள் எதுவும் சரியில்லை எண்டால் அதை யார் எண்டாலும் முன்வந்து சொல்லட்டும் எண்டு மொக்கன் கேட்கிறான். மொக்கியும் கேட்கிறாள்.




## மைத்திரிபால சிறிசேனா அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றால் 2016 முடிவிற்குள் தீர்வெண்டு சம்பந்தன் சொல்லியிருக்கிறாரே?

இப்பதான் சம்பந்தன் ஐயா சொன்னவர் சமஷ்டிதான் தீர்வெண்டு.

இப்ப சொல்லுறார் பிளவுபடாத நாட்டுக்குள் நிலையான நியாயமான நிரந்தரமான தீர்வையே கூட்டமைப்பு கேக்குதாம்.

முதல்ல உந்த கூத்தமைப்புக் காரருக்கு தெரிய வேணும் எது சாத்தியமான தீர்வு. முன்வைக்கிற கோரிக்கையை சிங்கள சமூகம் எப்படிப் பார்ப்பினம்... அதை எப்படி அடையுறது எண்டதில ஒரு தெளிவு இருக்க வேணும்.

எல்லாத்துக்கும் அப்பால, எங்கட சனத்துக்கு ஏதாவது செய்ய வேணும் எண்ட எண்ணம் மனதுக்குள்ள வரவேணும். உதுகள் ஒண்டுமில்லாமல் எங்கட சனத்தின்ர வாக்குகளை அள்ளுறதில மட்டும் குறியாக இருந்தா.. தீர்வெண்டது முயற்கொம்புதான்.

அரசியல்ல தத்துக்குட்டியளாக இருக்கிற எவரைக் கேட்டாலும் சொல்லுவினம் நடக்க இருக்கிற தேர்தலில எந்தக் கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறமுடியாதெண்டு. இந்த சின்ன விசயம் எங்கட பெருந்தலைவருக்கு தெரியாத விசயமில்லை. சுத்துறார்.. எங்கட சனத்தின்ர காது. கண், மூக்கு, தலை எண்டு எல்லாத்திலையும் பூ சுத்துறார்.

முதல்ல சொன்னவர் அடுத்த வருசம் தீர்வெண்டு.

உப்பிடித்தான் அறுவது வருசத்துக்கு மேலாக ஒவ்வொரு தேர்தலியும் சொல்லி வருகினம் இந்தா தீர்வு அந்தா.. தீர்வெண்டு.

ஆனால். சம்பந்தன் ஐயா தங்களால தீர்வை எடுத்துக் குடுக்கவே முடியாதெண்ட முடிவுக்கு வந்து விட்டாரோ என்னவோ

அதால தான் மூன்றில் இரண்டு தத்துவத்தை சொல்லுறார்

அடுத்த முறையும் தேர்தலில நிக்கும் போது மைத்திரிக்கு மூன்றில் இரண்டில்லை அதால தீர்வில்லாமல் போச்செண்டு சனத்தை ஏமாத்துறதுக்கு.

# மிரட்டிய அமைச்சர்களை வெளியேற்றினார் முதலமைச்சர்

GET OUT

என்னிடமிருந்து கௌரவத்தைப் பெறவேண்டுமானால் மரியாதையாக வெளியே சென்றுவிடுங்களென எச்சரித்து தனது அமைச்சர்கள் இருவரை வெளியேற்றியுள்ளார் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன். நம்பிக்கையில்லா பிரேரணை மூலம் முதலமைச்சர் பதவியிலிருந்து தூக்கியெறிய வேண்டிவருமென எச்சரித்த அமைச்சர்களான குருகுலராஜா மற்றும் சத்தியலிங்கம் ஆகியோரையே முதலமைச்சர் இவ்வாறு கூறி வெளியேற்றியுள்ளார்.

தன்னை வடமாகாணசபையில் அமைச்சு கதிரையேற்றிய சிறீதரனை வெல்ல வைக்க குருகுலராஜா பாடுபட்டு வருகின்றார். இந்நிலையில் முதலமைச்சர் தேர்தலில் நடுநிலை வகிக்கப்போவதாக அறிவித்தமை கூட்டமைப்பிற்கு குறிப்பாக அவரை முன்னிறுத்தி பிரச்சாரம் செய்ய முற்பட்ட சிறீதரனிற்கு பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளது.

அதே போன்று வவுனியாவில் பலமான தமிழரசுக்கட்சிபிரமுகராகதன்னைகாட்டிவரும்சத்தியலிங்கமும் தள்ளாட தொடங்கியுள்ளார். அவரது ஆதரவு பலமும் படுவீழ்ச்சியடைந்துள்ளது.

இதையடுத்தே முதலமைச்சரினை மிரட்டி கூட்டமைப்பிற்கு ஆதரவான அறிக்கையொன்றை விடுக்க இருவரும் முற்பட்டு மூக்குடைபட்டு திரும்பியுள்ளனர்.

சம்பவத்தைத் தொடர்ந்து விலக்கு பிடிக்க சென்றிருந்த மற்றொரு அமைச்சரிடமும் இப்பிரச்சினை பற்றி தான் பேசவந்திருந்தால் இது தான் எமக்கிடையேயான தனிப்பட்ட கலந்துரையாடலாக இருக்குமென முதலமைச்சர் எச்சரித்துள்ளார். இதையடுத்து குறித்த அமைச்சரும் துண்டை காணோம் துணியை காணோமென தப்பியோடியதாக தெரியவருகின்றது. நாடாளுமன்ற தேர்தல் தொடர்பில் தனது நிலைப்பாட்டில் முதலமைச்சர் உறுதியாக இருப்பதுடன் விக்கினேஸ்வரன் என்பவரை முதலமைச்சர் கதிரையினை பேரம் பேசி அடிபணிய வைக்கமுடியாதென அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பிரபாகரனின் பாதுகாவலரும் போட்டியிடுகிறார் தேர்தலில்



எதிர்வரும் பொதுத் தேர்தலில்வேந்தன் என்று அழைக்கப்படும் சிவநாதன் நவீந்திரன் என்கின்ற பிரபாகரனின் மெய்பாதுகாவரும் (Bodyguard) போட்டியிடு; வதாக அத என்னும் சிங்கள பத்திரிகை செய்தி வெயிட்டள்ளது.

யாழ் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் இவர் ஜனநாயக பேராளிகள் எனும் குழுவில் இடம் பெற்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது..

இவருடன் மேலும் 9 முன்னாள் புலி உறுப்பினர்களும் போட்டியிடுவதாகவும் அந்த செய்தி தெரிவிக்கிறது.

வேந்தன் மற்றும் காமினி எனும் ராசையா தர்மகுலசிங்கம் ஆகிய இருவரும் போரின்போது கால்களை இழந்துள்ளத்ாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட குழுவில்போட்டியிடும்அனைவரும் போரின் பின்னர், இலங்கை இராணுவத்தால் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள ஆகும்.

சார்ள்ஸ் எனப்படும் கே. சுப்ரமணியன் ஆட்டிலரி பிரிவிலும், ஐயன் எனும் கே. அகிலன் கணனி இயக்குனராகவும், கங்கை ஆத்மன் எனும் தங்கராசா தேவதாசன் பொட்டு அம்மானின் புலனாய்வு பிரிவிலும், கங்கை அழகன் எனும் வி. தேவதாசன், தனி அரசன் எனும் வீ. சக்திவேல், ரவிராஜ் எனும் எஸ். முருகதாஸ் மற்றும் என். வித்யாதரன் ஆகியோர் ஊடகப் பிரிவிலும் இருந்ததாக அத பத்திரிகையின் அந்த செய்தி மேலும் தெரிவிக்கிறது.

# facebook

## முகநூல் முடிச்சுக்கள்....

## Face Book Quiz

**நாம் தமிழர்**

### விஜயகலாவின் பிரச்சாரக் கூட்டத்தை விட பக்கத்தில இருந்த சாராயக்கடையில சனம் கூட.

01.08.2015 (சனிக்கிழமை) வலிகாமம் பகுதியில் பிரதி அமைச்சா விஜயகலா மகேஸ்வரன் அவர்களின் பிரச்சாரக் கூட்டத்தில் சுமார் 10 பேர் வரையே கலந்து கொண்டிருந்தனர். ஆனால் கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு அருகாமையில் இருந்த மதுபான விற்பனை நிலையத்தில் 50ற்கும் மேற்பட்டவார்கள் இருந்தனர்.

இது தொடர்பாக அங்கிருக்கும் முதியவர் ஒருவர் தெரிவிக்கையில் விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் இந்த தேர்தல் பிரச்சார நடவடிக்கையினை மதுபான விற்பனை நிலையத்தில் நடாத்தி இருந்தால் அதிகளவான மக்கள் கலந்து கொண்டிருப்பார்கள் என்றார்.

**டி.வி.எஸ்.சோமு**

### அரச மேடையில் அசிங்கம்....

கருணாநிதி இன்னும் சாவமாட்டேங்கிறான்.."
"வைகோ, ரவுடி மாதிரி நடந்துக்கிறான்!"
"தீரன் சின்னமலை இன்னிக்கு இருந்தா, அதிமுக தொண்டராகியிருப்பான்!"
– தமழக அரசு விழா மேடையில் அம்மாவின் அமைச்சர் ராஜேந்திரபாலாஜி பேசியதில் "சுமாரான" பேச்சுக்கள் இவை:.!

**யோ. கர்ணன்**

### எவரின் கொள்கை கூட்டமைப்பின் கொள்கை...

சைக்கிள் சின்னத்திற்கும், வீணை சின்னத்திற்கும் வாக்களிக்கின்ற மக்களுக்கு, தாம் என்ன கொள்கைக்கு வாக்களிக்கின்றோம் என்பது தெளிவாகத் தெரியும். கொள்கை ஏற்புடையதெனில் வாக்களிக்கலாம் ஏற்புடையது இல்லையெனின் விட்டுவிடலாம். அங்கு ஏமாற எதுவும் இல்லை. ஆனால், ஆளுக்கு ஆள் ஒவ்வொரு கதை சொல்லியும், முன்னுக்குப் பின் முரணான சமாளிப்புகளையும் செய்யும் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்கத் தீர்மானிக்கும் ஒரு தமிழ் குடியானவர், இவர்களில் எவரின் கொள்கையைக் கூட்டமைப்பின் கொள்கையாக ஏற்க முடியும்

**Abdul Thayub**

### கடன்.....

சம்பளம் வாங்குன உடனே கடனெல்லாம் அடச்சிட்டு நம்ம கிட்ட இருக்கற மிச்சத்த பாத்தா,அடுத்து யாருகிட்ட கடன் வாங்கலாம்ன்னு யோசிக்க வேண்டியதா இருக்கு.

**Rushangan Kodeswaran**

### துரையப்பா எப்படி துரோகியானார்....?

தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டம் என்று கூறி முதலில் தீர்க்கப்பட்ட வேட்டு அல்பிரட் துரையப் பாவைப் பலிகொண்டது என்று, எனது முன்னைய பதிவுக்கு பலரும் விளக்கமளித்துள்ளனர். ஜீ.ஜீ.பொன்னம்பலத்தையே தேர்தலில் தோற்கடிக்கு மளவுக்கு மக்கள் செல்வாக்கு கொண்டிருந்த அவரே, யாழ்ப்பாணத்தில் இன்றும் நிலைத்திருக்கும் விளையாட்டரங்கு, நவீன சந்தைக் கட்டடம் என்று பலவற்றைக் கட்டி யாழ் நகரை அழகுபடுத்தியர் என்றும் ஒரு நண்பர் தகவல் தந்திருந்தார். அவரை விடுதலைப் புலிகளே சுட்டுக்கொன்றார்கள் என்றும், அப்போது தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்த குமாரசூரியர் இந்தக் கொலைக்குப் பின்னணியில் இருந்தார் என்றும் இன்னுமொரு நண்பர் தகவல் தந்திருந்தார்.

துரையப்பா ஒரு துரோகி என்பதாலேயே அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால், அவர் தமிழ் மக்களுக்குச் செய்த துரோகம் என்ன என்பதற்கான சரியான விளக்கம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

அப்போதிருந்த தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளில் தேர்தல் அரசியல் போட்டாபோட்டி காரணமாக, அப்போது தான் ஆயுதமேந்தத் தயாராகவிருந்த பிரபாகரனை ஏவி துரையப்பாவை அவர்கள் கொலை செய்ததாகவே பொதுவாக அறியப்படுகிறது.

யாழ் நகரில் இன்று வரையில் தலைநிமிர்ந்து நிற்கும் பல கட்டடங்களைக் கட்டி, யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கவும் உந்துசக்தியாகச் செயற்பட்டவர் என்று அறியப்படுகிற துரையப்பா எப்படி தமிழர்களுக்குத் துரோகி ஆக்கப்பட்டார் என்பதுதான் புரியவில்லை.

உங்களுக்கு ஏ்தாவது புரிகிறதா நண்பர்களே..............?

இல. 372, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அற்புதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.